விலை: 30.00
பக்கங்கள் : இருபத்துநான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 06 வெள்ளிக்கிழமை (23.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 247

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-7310)
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## மறவன்புலவு, தனங்கிளப்பு ஊடாக சக்தி வாய்ந்த காந்தப்புலக் கோடு

**மக்களின் பெறுமதியான காணிகள் குறைந்த விலையில் வாங்க தனியார் நிறுவனம் திரைமறைவில் முயற்சி**

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மறவன்புலவு மற்றும் தனங்கிளப்பு ஆகிய இடங்களில் அதி சக்தி வாய்ந்த காந்தப்புலக் கோடு ஊடறுத்துச் செல்வதாகவும் இப் பிரதேசத்தில் காற்றாலை அமைப்பதாகக்கூறி குறித்த இத்தை எதிர்காலத்தில் வெளி 23

அதிகாரத்துக்கு வந்தவுடன்

# தமிழ் மக்களின் பிரச்சினையை 6 மாதத்திற்குள் தீர்த்து வைப்பேன்



## கூட்டமைப்புடனான சந்திப்பில் அமைச்சர் சஜித் வாக்குறுதி

(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று தான் அதிகாரத்துக்கு வந்தவுடன் அடுத்த ஆறு மாதத்தில் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்து வைப்பேன் என கூட்டமைப்பினரிடம் அமைச்சர் சஜித் பிரேமதாச வாக்குறுதியளித்தார்.
(23ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்கள் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)
இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், இந்திய மீனவர்கள் நால்வர் நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைதுசெய்யப்பட்ட 4 இந்திய மீனவர்களும் புதுக் 23

## நல்லூர் மந்திரிமனை பாதுகாக்கப்பட வேண்டும்

பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)
தமிழர் வரலாற்றுச் சின்னமான மந்திரிமனையை உரிமை கொண்டாடுவதற்குயாரையும் அனுமதிக்க முடியாதெனவும் அது தமிழர்களின் வீர வரலாற்றை கொண்ட பொக்கிஷம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பாராளுமன்றில் சுட்டிக்காட்டினார்.
நேற்று முன்தினம் புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு 23

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து செயற்பட போகின்றோம்

அனந்தி சசிதரன் அறிவிப்பு


23

## எழுக தமிழ் பரப்புரைகளின் ஆரம்ப நிகழ்வு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி மாபெரும் 23

## பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஓரளவு படிப்பும் பண்பும் இருக்க வேண்டும்

**நீதியரசர் விக்னேஸ்வரன்**

(யாழ்ப்பாணம்)
பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓரளவு படிப்பும் சிறந்த பண்பும் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். வடக்கு மாகாண முன்னாள் முதல்வர் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. 23

ஐ.தே.கட்சியால்

## தேர்தலில் வெல்ல முடியாது ; மகிந்த

(கொழும்பு)
ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எவர் போட்டியிட்டாலும் ஆளும் தரப்பிற்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் மேலும் தீவிரமடையும் 23

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தடை இல்லை



**கோத்தபாய ராஜபக்ஷ**

(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தனக்கு எந்த தடைகளும் இல்லை என, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத் 23

## தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்து ஆராய ஜனாதிபதியுடன் கூட்டமைப்பு இன்று சந்திப்பு

(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களிற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்குமிடையில் இன்று சந்திப்பு இடம் பெறவுள்ளது.
தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்து ஆராய இந்த சந்திப்பு இடம் பெறவுள்ளது. வனவள திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், காணி விடுவிப்பு ஆகியவை தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த வேண்டுகோளை ஏற்று, இந்த சந்திப்பிற்கான நேரத்தை ஒதுக்கியுள்ளார் மைத்திரி. (ம)

# மரண அறிவித்தல்

திருமதி

## அருளம்மா அந்தோனிப்பிள்ளை



மண்ணில் 29.03.1939 | விண்ணில் 22.08.2019

யாழ்ப்பாணம் நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வதிவிடமாகவும் தற்போது நாவாந்துறையில் வசித்தவருமாகிய அந்தோனிப்பிள்ளை அருளம்மா அவர்கள் நேற்று (22.08.2019) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏனொக்-திரேசம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் மற்றும் பெர்னாண்டோ போல் அந்தோனிப்பிள்ளையின் (ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர், கோப்பாய் (SLEAS)) அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கராசா, தேவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மற்றும் காலஞ்சென்ற வசந்தமரினா மற்றும் சாந்தமரினா (கரவெட்டி), சாந்தகுமார் (கொலன்ட்), ஜெயக்குமார் (லண்டன்), சூரியகுமார் (லண்டன்), சந்திரகுமார் (பெல்ஜியம்), ஜீவகுமார் (கொலன்ட்), உதயகுமார் (விவசாய பீட போதனாசிரியர், யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் Dialluck PhoneShop உரிமையாளர்), ராஜ்குமார் (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புமிகு தாயாரும் பவளசிங்கம், அலன் பூபாலசிங்கம், பவானிசெல்வி, மைதிலி, குமாரி, நந்தா, நிரஞ்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜோய், யூலி, ஏனொக், யூலியட், ஜொகானா, றொசானி, மத்தேயு, கௌதம், பிரசன்னா, பிரவீன், டஸ்லி, மிஷல், மீரா, ஆரோன், அனிக்கா, தர்வின், றிஸ்வின், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவருடைய இல்லத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டு நாளை (24.08.2019) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் நாவாந்துறை புனித சென்.நீக்கிலஸ் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(9987)

இல.03. 1ம் குறுக்குத்தெரு,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்
0773209016

# மீனவர்களுக்கு எச்சரிக்கை


சில கடல் பிரதேசங்கள் கொந்தளிப்பாக இருக்கும் என்பதால், கடற்றொழிலுக்கு செல்வதைத் தவிர்க்குமாறு மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காற்றின் வேகம் அதிகரிப்பதால், புத்தளம் முதல் மன்னார், காங்கேசன்துறை ஊடாக திருகோண மலை வரையான கடற் பிராந்தியங்களும் மாத்தறை கடற் பிராந்தியங்களும் கொந தளிப்பாக இருக்கும் என கடற்றொழில் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இதனால் அப்பகுதியில் இருந்து 24 மணித்தியாலங்களுக்கு கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# மரண அறிவித்தல்



## செல்லையா சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர் - கிளிநொச்சி)

பிறப்பு 26.12.1945 | இறப்பு 20.08.2019

வடமராட்சி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் இல.130, "தாயகம்" திருநகரில் வசித்தவரும் தற்பொழுது இல.70, அந்தோனியார் கோயில் அருகாமை, தொண்டமான் நகர், கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சபாரத்தினம் அவர்கள் 20.08.2019 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கார்த்திகேசு - பார்வதி தம்பதிகளின் மருமகனும் ஈஸ்வரியின் பாசமிகு அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாரதி, சித்ரா (ஜேர்மனி), பவானி (லண்டன்), பபிதா (நூலகர், கரைச்சி பிரதேச சபை), எழில் (ஆசிரியை -கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்), சக்தி (குடும்பநல உத்தியோகத்தர் MOH, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிரிதரன் (ஜேர்மனி), ஆனந்தராசா (லண்டன்), சிறிகாந்தன் (ஆசிரியர் - கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்), குருலாபராசன் (பொறியியலாளர் - ராஸ்க் இன்ஜினியரிங்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற தனபாக்கியம், கனகம்மா, யோகராசா, செல்வரத்தினம், தவமணிதேவி, காலஞ்சென்ற தவமணிமலர் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, பரமநாதன், இரத்தினம், கமலாதேவி, தியாகராசா ஆகியோரின் மைத்துனரும் கீர்த்திகா, கேசவி, நிதர்சனி, ஜெயன், ஷேஸன், ஹேசப்பிரியா, பபிசன், கிருந்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.08.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-7350)

தொண்டமான் நகர் கிழக்கு,
கிளிநொச்சி.

தகவல்:- குடும்பத்தினர்
0773489425

# பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மக்களை மீட்டெடுத்தமை மனித நேயத்திற்கு சான்று



## படையினர் குறித்து இராணுவத் தளபதி சவேந்திர சில்வா புளகாங்கிதம்

- ❖ சர்வதேச சட்டங்களையும் உரிமைகளையும் யுத்தத்தின் போது பின்பற்றினோம்
- ❖ ஒற்றையாட்சியை பாதுகாக்க ஒத்துழைப்பு

(கொழும்பு)

யுத்தத்தின் போது பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மக்களைப் படையினர் மீட்டெடுத்தமை அவர்களது மனிதநேயத்திற்கு சான்று என இலங்கையின் புதிய இராணுவத்தளபதி சவேந்திரசில்வா தெரிவித்தார். நாட்டை அது எதிர்கொள்ளும் அனைத்து வகையான அச்சுறுத்தல்களில் இருந்தும் பாதுகாக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

தாய்நாட்டின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு மற்றும் ஒற்றையாட்சி ஆகியவற்றைப் பாதுகாப்பதில் இராணுவத்திற்கு இராணுவத்தளபதி என்ற அடிப்படையில் உரிய தலைமைத்துவத்தை வழங்குவேன் எனவும் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அனைத்து அவசியமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலமும் இந்த நாட்டின் அனைத்து மக்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

உலகின் இராணுவங்கள் நாட்டின் மக்களின் பிரித்துபார்க்க முடியாத உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஜனநாயக வழிமுறையிலான வாழ்க்கைச் சூழலை உருவாக்குவதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளன.

அதேவேளை உள்நாட்டு வெளிநாட்டு அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் இராணுவங்கள் உள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த கால மனிதாபிமான நடவடிக்கையின் போது எந்த நாடும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இந்த வழிகாட்டுதல்களை நாங்கள் பின்பற்றினோம். சர்வதேச மனிதாபிமான மற்றும் உரிமைகளை பின்பற்றியே நாங்கள் நடந்துகொண்டோம் எனவும் இலங்கையின் புதிய இராணுவத் தளபதி தெரிவித்தார்.

யுத்தத்தின் போது பயங்கரவாதிகளின் பிடியிலிருந்த மக்களைப் படையினர் மீட்டெடுத்தமை அவர்களது மனிதநேயத்திற்கு சான்று எனவும் புதிய இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

# சம்பந்தன் - சஜித் இடையே மங்கள வீட்டில் திடீர் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் இடையே அமைச்சர் மங்கள சமரவீரவின் வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் அமைச்சர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு வழங்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

மேலும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் வெற்றியளித்ததாக அந்தச் சந்திப்பில் பங்கேற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் இச் சந்திப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எந்த ஒரு தகவலும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நியூசிலாந்து பாராளுமன்றத்தில் குழந்தைக்கு பால் ஊட்டிய சபாநாயகர்

(வெலிங்டன்)





நியூசிலாந்து பாராளுமன்றத்தில் எரிபொருள் விலைபற்றிய கடும் விவாதம் நிகழ்ந்து கொண்டிருந்த போது சபாநாயகர் ட்ரெவர் மல்லார்ட் குழந்தைக்கு போத்தலில் பால் ஊட்டிய சம்பவம் அனைவர் மனதிலும் நெகிழ்வை ஏற்படுத்தியது.

அந்நாட்டின் தொழிலாளர் கட்சி உறுப்பினரான டமாட்டி கோஃபி மற்றும் அவரது கணவர் டிம் ஸ்மித் ஆகியோர் கடந்த ஜூலை மாதம் வாடகை தாய் மூலம் பெற்றெடுத்த ஆண் குழந்தை ஸ்மித்- கோஃபி இவர்கள் தமது குழந்தையுடன் நேற்று பாராளுமன்ற அமர்வில் பங்கு பற்றினர்.

பாராளுமன்ற அலுவல்கள் நடைபெற்று கொண்டு இருந்த போது குழந்தையை வாங்கிய சபாநாயகர் டிரெவோர் மலார்ட், குழந்தைக்கு பால் போத்தலின் மூலம் பால் ஊட்டினார். பின்னர் தனது இருக்கையை அசைத்து குழந்தையை தட்டிக்கொடுத்து கவனித்துக்கொண்டார்.

இந்தப் புகைப்படத்தை அவரே டுவிட்டரில் பகிர்ந்து அதில் "பொதுவாக சபாநாயகர் நாற்காலியை பதவியில் இருக்கும் நபர்கள் மட்டுமே பயன்படுத்த முடியும். ஆனால் இன்று ஒரு வி.ஐ.பி. என்னுடன் அதை பகிர்ந்து கொண்டார், எங்கள் குடும்பத்தின் புதிய உறுப்பினரை வரவேற்கிறோம்" எனப் பதிவிட்டிருந்தார்.

இந்தப் பதிவு சமூக வலைத் தளங்களில் வைரலாகப் பரவி வருகின்றது.

பலர் இந்தப் பதிவுகளுக்கு கருத்து தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாடாளுமன்ற வெற்றிடத்தை நிரப்ப சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடுகிறது தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

சாலிந்த திஸாநாயக்கவின் மறைவையடுத்து நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை தேர்தல்கள் ஆணைக்குழு நாடியுள்ளது.

இந்த விடயம் குறித்து நேற்று வியாழக்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்ட தேர்தல்கள் ஆணைக்குழு, குறித்த விடயத்தை தெரிவித்துள்ளது.

குருநாகல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாலிந்த திஸாநாயக்கவின் நாடாளுமன்ற வெற்றிடத்திற்காக பலரது பெயர்கள் அடங்கிய பரிந்துரைகளை தாம் பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

எனவே குறித்த விடயம் தொடர்பாக சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள, சட்டமா அதிபர் அலுவலகத்திற்கு குறித்த பரிந்துரைகள் அனுப்பப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த சாந்த பண்டாரவின் வெற்றிடத்தை நிரப்ப வாக்கெடுப்பு நடத்தி ஒருவரை பரிந்துரைக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கோரியதாகவும் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர் சாந்த பண்டார தனது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்திருந்தார். அவரது இந்த இராஜினாமா கடந்த மாதம் காலமான சாலிந்த திஸாநாயக்கவின் நாடாளுமன்ற வெற்றிடத்தை நிரப்பும் என எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சஹ்ரானுடன் பயிற்சி பெற்றதாக மேலும் ஒருவர் நேற்றுக் கைது

(அம்பாறை)


தடை செய்யப்பட்ட JMI அமைப்பின் முக்கிய செயற்பாட்டாளர் ஒருவர் அம்பாறையில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. குறித்த நபர் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியும் தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவருமான சஹ்ரான் ஹாசீமுடன் நுவரெலியாவில் ஆயுதப் பயிற்சிப் பெற்றவரென்பது விசாரணைகளில் தெரியவந்தது.

அபு ஹக்ரிமா எனப்படும் மொஹமட் ராபாய்தின் மொஹமட் அலி என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் எனும் குற்றச்சாட்டில் பலர் பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மழையால் இலங்கை-நியூசி போட்டியின் பெரும் பகுதி பாதிப்பு

## இலங்கை 85/2



மழையால் கொழும்பு டெஸ்டின் முதல் நாள் ஆட்டத்தின் பெரும்பகுதி பாதிக்கப்பட்டதால் இலங்கை 36.3 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 85 ரன்கள் சேர்த்துள்ளது.

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. காலியில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இலங்கை வெற்றி பெற்றது.

இந்நிலையில் 2-வது டெஸ்ட் கொழும்பில் நேற்று தொடங்கியது. மழை பெய்ததால் மதிய உணவு இடைவேளை வரை ஆட்டம் தொடங்கவில்லை. மதிய உணவு இடைவேளைக்குப்பின் மழை நின்றதும் ஆட்டம தொடங்கியது. இலங்கை டாஸ் வென்று பேட்டிங் தேர்வு செய்தது. தேநீர் இடைவேளை வரை 29 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 71 ரன்கள் எடுத்திருந்தது.

தேநீர் இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்க இருந்த நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டது. மழை நின்றதும் மீண்டும் ஆட்டம் தொடங்கியது. இலங்கை 2 விக்கெட் இழப்பிற்கு 85 ரன்கள் எடுத்திருக்கும்போது போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அத்துடன் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

கருணாரத்ன 49 ரன்களுடனும், மத்யூஸ் ரன்கள் ஏதும் எடுக்காமலும் களத்தில் உள்ளனர்.

# மெஸ்ஸிதான் என்னை சிறந்த வீரராக உருவாக்கினார் -றொனால்டோ



பரம எதிரியான மெஸ்சிதான் என்னை சிறந்த வீரராக உருவாக்கினார் என போர்த்துக்கல் கால்பந்து ஜாம்பவான் றொனால்டோ தெரிவித்துள்ளார்.

கால்பந்து போட்டியில் ஆர்ஜென்டினாவின் மெஸ்சி, போர்த்துக்கல் அணியின் கிறிஸ்டியானோ றொனால்டோ, பிரேசில் அணியின் நெய்மர் ஆகியோர் இந்த தலைமுறையின் தலைசிறந்த வீரராக கருதப்படுகிறார்கள்.

இதில் கிறிஸ்டியானோ றொனால்டோவுக்கும், மெஸ்சிக்கும் இடையில்தான் கடும் போட்டி நிலவி வருகிறது. இருவரில் யார் சிறந்தவர்கள் என்பதை விவாதிக்காத கால்பந்து ரசிகர்களே இருக்க முடியாது.

மெஸ்சி ஆரம்ப காலத்தில் இருந்தே பார்சிலோனா அணிக்காக விளையாடி வருகிறார். றொனால்டோ மான்செஸ்டரில் இருந்து ரியல் மாட்ரிட் அணிக்கு மாறிய பிறகு இருவருக்கும் இடையில் கடும் போட்டி மனப்பாங்கு ஏற்பட்டது.

கால்பந்து போட்டியின் சிறந்த விருதான பலோன் டி'ஆர்-ஐ இருவரும் தலா ஐந்து முறை வென்றுள்ளனர். கால்பந்து போட்டியில் பரம எதிராக மோதும் இவர்கள், பொது இடங்களில் மிகப்பெரிய அளவில் சந்தித்ததோ, பேசி உரையாடியதோ கிடையாது.

இந்நிலையில் மெஸ்சிதான் என்னை சிறந்த வீரராக உருவாக்கினார் என்று றொனால்டோ தெரிவித்துள்ளார். இதுகுறித்து றொனால்டோ கூறுகையில் "நான் ரியல் மாட்ரிட் அணியில் இருந்து இத்தாலியின் யுவான்டஸ் அணிக்குச் செல்லும்போது மிகவும் ஏமாற்றம் அடைந்ததாக மெஸ்சி ஏற்கனவே சொல்லியிருக்கிறார். ஏனென்றால் எங்களுக்கு எதிராக கடும் போட்டி நிலவியது. அவரது பக்கத்தில் இருந்து வந்த இந்த கருத்தை நான் மிகவும் ரசிக்கிறேன்.

மெஸ்சி என்னை சிறந்த வீரராக உருவாக்கினார். அதேபோல் நானும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நான் விருதுகளையும், கிண்ணங்களையும் வெல்லும்போது அவருக்கு தேள் கொட்டியது போன்று இருக்கும். அவர் வெற்றி பெறும் போது எனக்கும் அதேபோல் இருக்கும்.

எங்களுக்கு இடையில் தொழில் முறையிலான தொடர்பு சிறப்பாக உள்ளது. ஏனென்றால் 15 வருடமாக கால்பந்து போட்டியில் விளையர்டி வருகிறோம். நாங்கள் ஒரு போதும் இணைந்து இரவு உணவு சாப்பிட்டது கிடையாது. ஆனால், வருங்காலத்தில் இப்படித்தான் இருக்கும் என்பதை என்னால் பார்க்க முடியவில்லை. இதில் எந்த பிரச்சினையும் இருப்பதாக நான் பார்க்கவில்லை" என்றார்.

# அஸ்வினுக்கு வாய்ப்பு கொடுக்காததால் கோலியை வறுத்தெடுக்கும் ரசிகர்கள்



மேற்கிந்திய தீவு அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் தமிழக வீரர் அஸ்வின், ரோகித்சர்மா, குல்தீப் யாதவ் மற்றும் உமேஷ் யாதவ் ஆகியோருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதால், ரசிகர்கள் கோலி மற்றும் ரவிசாஸ்திரியை திட்டி வருகின்றனர்.

கோலி தலைமையிலான இந்திய அணி, மேற்கிந்திய தீவிற்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டு அங்கு தற்போது டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் இரு அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி நேற்று இந்திய நேரப்படி மாலை 7 மணிக்கு துவங்கியது.

அதன் படி நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவு அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

இந்நிலையில் நேற்றைய போட்டியில் இந்திய அணியில் மிகவும் எதிர் பார்க்கப்பட்ட அஸ்வின், ரோகித், வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோருக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை.

ஏற்கனவே கோலி மற்றும் ரோகித்திற்கும் இடையே பிரச்சினை இருப்பதாக கூறப்பட்டு வரும் நிலையில், ரோகித் இல்லாததால் பலரும் என்ன காரணம் என்பது குறித்தும் ரோகித் கடந்த சில டெஸ்ட் போட்டிகளில் மற்ற வீரர்களை விட எப்படி விளையாடியுள்ளார்? என்பதையும் குறிப்பிட்டு கோலி மற்றும் ரவிசாஸ்திரிக்கு டுவிட்டரில் டேக் செய்து வருகின்றனர்.

அதே போன்று மேற்கிந்திய தீவு அணிக்கெதிரான டெஸ்ட் தொடர்களில் அஸ்வினும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். அவரையும் ஏன் எடுக்கவில்லை என்று ரசிகர்கள் சரமாரி கேள்வி எழுப்பி வருகின்றனர்.





## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the costruction Works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Extension of Laundry Building – First Floor | 500.00 | 200,000.00 | 91 | 9.95 | C 7 |
| 2. | Repairing Slab Roof in VP Room & Welfare Canteen in Medical Clinic, Toilet Renovation at Ward No 28 and Toilet Renovation at NTS | 500.00 | 20,000.00 | 91 | 0.96 | C 9 |

2.Bidding Will be conducted through National Competitive Bidding Procedure(NCB)

3.To be eligible for contract award,the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building Construction for grade given in the schedule or above With the institute for Construction,Training and Development (ICTAD).

4.Interested bidders can inspect bid forms at the Residance Engineer's office.CECB,Jaffna during office hours,if necessary.

5.A Complete set of Bidding Documents in English language may be purchased by Interested Bidders from Director,Teaching hospital,Jaffna upon producing Valid registration book and receipt for the cash Payment for the bid fee from 26.08.2019 up to 10.09.2019 during office hours.The payment shall be made to the Shroff's Office,Teaching Hospital,Jaffna.

6.Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 11.09.2019,late bids Will be rejected.Bids Will be open at Director's Office,Teaching Hospital ,Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital,Jaffna.
23/08/2019.

# புதிய இராணுவத்தளபதியின் நியமனம் நல்லிணக்கத்தின் மீது தமிழ் மக்களின் நம்பிக்கையை தகர்த்துள்ளது-சந்திரகுமார்



(மன்னார்)

புதிய இராணுவத்தளபதியின் நியமனம் நல்லிணக்கத்தின் மீது தமிழ் மக்களின் நம்பிக்கையை தகர்த்துள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலய முதன்மை செயலாளரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் முதன்மை செயலாளரும் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆலோசகருமான அமி ஓ பிரின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவருமான மு. சந்திரகுமாரை நேற்று அவரது கிளிநொச்சி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். சந்திப்பின் பின்னர் மு.சந்திரகுமார் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் தற்போது நல்லிணக்கச் செயற்பாடுகளில் தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்து காணப் படுகின்றனர். குறிப்பாக நல்லாட்சி அரசின் காலத்தில் தமிழர்களின் தொல்லியல் பிரதேசங்கள் உட்பட பல இடங்களின்ஆக்கிரமிப்புக்கள் அதிகமாக இடம்பெறுகின்றமை என்பன நல்லிணக்கச் செயற்பாடுகளை கேள்விக்குட்படுத்துகிறது.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் விருப்பத்திற்கு மாறாக காணாமலாக்கப்பட்டவர்களின் அலுவலகம் உருவாக்கப்பட்டமை மற்றும் அதன் பிராந்திய அலுவலகங்கள் திறக்கப்படுகின்றமை, அவர்களுக்கான நீதியான தீர்வுகள் காணப்படாமை பற்றியும், குறித்த அலுவலகத்தின் மூலம் இது வரை ஆரோக்கியமான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ள வில்லை என்ற விடயம் என்பன நல்லிணக்கத்தின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

இதனைத் தவிர புதிய இராணுவத் தளபதியின் நியமன மும் நல்லிணக்கத்தின் மீது தமிழ் மக்களின் நம்பிக்கையை தகர்த்திருக்கிறது.

மேலும் கடந்த ஆட்சிக் காலத்தில் இலங்கை மீது இருந்த சர்வதேச அழுத்தம் தற்போது இல்லை எனவும் இலங்கை மீதான சர்வதேச விசாரணையை மேற்கொள்ளும் வகையில் பெயர் குறிப்பிட்டு நீதிபதிகளை நியமிக்கும் அளவுக்கு காணப்பட்ட சர்வதேச அழுத்தம் தற்போதில்லை.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்கள் இரண்டு தரப்பினர்கள் மீது நம்பிக்கை இழந்தே காணப்படுகின்றனர். எனவே இச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் வாக்குகள் பற்றி எதனையும் கூற முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (9-350)

# யாழ்ப்பாணத்தில் திறக்கவுள்ள ஓ.எம்.பி அலுவலகத்திற்கு தமிழ் அரசியல்வாதிகள் துணை நிற்கக் கூடாது

## காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிப்பு

(அக்கராயன்)

யாழ்ப்பாணத்தில் நாளை திறக்கப்படவுள்ள காணாமலாக்கப்பட்டவர்களின் பிராந்திய அலுவலக திறப்புக்கு தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் எவரும் துணை நிற்கக்கூடாது என கிளிநொச்சி மாவட்ட காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி கதிர்காமநாதன் கோகிலவாணி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள அவர்களது அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.மேலும் தெரிவிக்கையில்,

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஓம்பி அலுவலகத்தை நிராகரித்து எதிர்த்து வருகின்றனர். இந்த நிலையில் 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அதன் பிராந்திய அலுவலகம் திறக்கப்படுவது எமக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது. அத்தோடு ஓம்பி அலுவலகம் திறப்புக்கு தமிழ் அரசியல்வாதிகள் எவராவது சென்றால் முதலில் அவர்கள் எங்களது உறவுகளுக்கு பதிலை வழங்கி விட்டு செல்லுங்கள் என நாம் அவர்களிடம் கோருகின்றோம்.

இம்மாதம் 30 ஆம் திகதி வவுனியா ஓமந்தையில் சர்வதேச காணாமலாக்கப்பட்ட தினத்தில் வடக்குத் தழுவிய ரீதியில் மாபெரும் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம், இறுதி யுத்தக் காலத்தில் பெருமளவான உறவுகள் ஓமந்தை பகுதியிலேயே கையளிக்கப்பட்டனர். இந்த இடத்திலேயே வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களின் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களும் கிழக்கில் அம்பாறையிலும் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம். எனவே இந்தப் போராட்டத்தில் அரசியல் வேறுபாடுகளைக் கடந்து அனைவரையும் கலந்து ஆதரவு தருமாறு கோருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-350)

# மருத்துவர்களின் வேலை நிறுத்தத்தால் நோயாளிகள் பெரும் அவதி





அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடுதழுவிய 24 மணிநேர வேலை நிறுத்த போராட்டத்தினை நேற்று வியாழக்கிழமை முன்னெடுத்தனர்.

அந்த வகையில் மேற்குறித்த போராட்டத்தினால் வடக்கில் நோயாளிகள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி இருந்ததனை அவதானிக்க முடிந்தது. தூர இடங்களில் இருந்து பெரும் சிரமத்திற்கு மத்தியில் வந்த நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இந்த வேலை நிறுத்தத்திற்கு பின்னரும் தகுந்த தீர்வு எட்டப்படவில்லை எனின் அதற்கு அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் எனவும் அறிவித்திருந்தது.

சுகாதாரத் துறையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரி தொடர்ந்தும் 2 வாரங்கள் வரையில் இந்தச் சங்கம் அரசாங்கத்திற்கு கால அவகாசம் அளித்திருந்தது.

இருப்பினும் அவர்களுடைய கோரிக்கைக்கு அரசாங்கம் கவனம் செலுத்தாத பட்சத்திலேயே இன்று வேலை நிறுத்தப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இருப்பினும் உரிய தரப்பினருடனான கலந்துரையாடல்களின் போது மக்களுக்கு நன்மை பயக்கும் வகையிலான தீர்மானங்கள் எட்டப்படும் பட்சத்தில் வேலை நிறுத்தத்தை தவிர்க்க முடியும் எனவும் அறிவித்திருந்தனர்.



இன்றைய வேலை நிறுத்தத்தின் பின்னரும் தமது கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்கவில்லை என்றால் அடுத்த கட்டமாக முன்னெடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்றும் அச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (9-285-299)

# இராசி பலன்

**23.08.2019**

ஆவணி 06, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

அட்டமி பின்னிரவு 4.22 மணிவரை

கார்த்திகை பின்னிரவு 12.43 மணிவரை

சுபநேரம் 6.05-7.35மணிவரை

இராகுகாலம் 10.35-12.5 மணிவரை

கார்த்திகை விரதம்

வளவன்

கிரகநிலை: சந், ராகு, சூரி, புத, சுக், செவ், குரு, சனி, கேது

சந்திராஷ்டமம்: சுவாதி, விசாகம்

**மீனம்**: முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள்.

**மேடம்**: சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்**: வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்**: நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், ஆறுமுகப்பெருமான் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்றுக்கூடும்.

**கும்பம்**: நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வாகன சுகமுண்டு, சுப காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்**: வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு,உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**மகரம்**: பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்ற முற்படுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்**: கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு**: கடன்சுமை குறைய வழி வகை செய்வீர்கள், வியாபார விரோதம் விலகும், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலன் சீராகும்.

**விருச்சிகம்**: தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உடன் பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**துலாம்**: மறதியால் ஒரு சில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள், எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கன்னி**: மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், வழிபாட்டால் முன்னேற்றம் பெற வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.




யாழ்.தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் கே.திருச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக சிவன் பவுண்டேசன் நிறுவுநர் கனேஸ்வரன் வேலாயுதம் கலந்து கொண்டார். மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

# உழவர் சந்தை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்

## நகரசபை உறுப்பினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் உழவர் சந்தை அமைக்க பத்து மில்லியன் ரூபாய் நிதியை சாவகச்சேரி நகரசபை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.வேலாயுதபிள்ளை சபையில் பிரேரணை ஒன்றினை சமர்ப்பித்தார்.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே இப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

விவசாயிகளின் நலன் கருதி சாவகச்சேரி - தனங்கிளப்பு வீதியில் அமைந்துள்ள நகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான பத்துப் பரப்புக் காணியில் உழவர் சந்தை அமைக்கப்படல் வேண்டும். அதற்கான திட்ட வரைவு மற்றும் மதிப்பீடு ஆகியன துறைசார் வல்லுநர்கள் ஊடாகத் தயார் செய்யப்பட்டுள்ளன. உழவர் சந்தையை சாவகச்சேரிப் பொதுச்சந்தை வளாகத்திற்குள் அமைக்க இடவசதி போதுமானதாக இல்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

உழவர் சந்தையை தனியாக அமைப்பதற்கு ஒருசில உறுப்பினர்கள் மறுப்புத் தெரிவித்த போதும் பொதுச்சந்தையின் ஒரு பகுதியில் உழவர் சந்தை அமைப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தென்மராட்சியின் மீசாலை, அல்லாரை, கச்சாய், மட்டுவில் மற்றும் தனங்கிளப்புப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தமது விவசாய உற்பத்திப் பொருட்களை சாவகச்சேரி பொதுச்சந்தைக்கு விற்பனைக்கு எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவை நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகம், ஆட்பதிவுத்திணைக்களத்துடன் இணைந்து ஒழுங்கு செய்துள்ள மாபெரும் நடமாடும் சேவை நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை பருத்தித்துறை பிரதேச செயலக ஆட்பதிவுக் கிளையில் இடம்பெறும்.

இந் நடமாடும் சேவைக்கு ஆட்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர் வருகை தருவதால் தேசிய அடையாள அட்டை தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்படும்.

- தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப்படிவம் அனுப்பி நீண்டகாலம் கடந்தும் இதுவரை தேசிய அடையாள அட்டை கிடைக்காதவர்கள்.
- கடந்த வருடம் நடைபெற்ற நடமாடும் சேவையில் விண்ணப்பித்து பின்னர் பணம் கட்டப்பட்ட நிலையிலும் இன்னும் தேசிய அடையாள அட்டை கிடைக்காதவர்கள்.
- தேசிய அடையாள அட்டை கிடைத்தவேளையிலும் பெயர் அல்லது முகவரிதவறுதலாக காணப்படுகிறவர்கள்.
- புதியதேசியஅடையாளஅட்டை எடுக்கும் போது பழைய தேசிய அடையாள அட்டை இலக்கத்தில் இருந்து புதிய தேசிய அடையாள அட்டையின் இலக்கம் வேறுபட்டிருப்போர்.
- பிறப்பு அத்தாட்சிப் புத்தகம் இல்லாமல் வாக்காளர் பதிவேட்டினை துணையாகக்கொண்டு தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து இதுவரையும் தேசிய அடையாள அட்டை பெறாதவர்கள்.
- புதிய தொலைந்த, திருத்தத்திற்கான விண்ணப்பம் செய்வோர் ஆகியோர் இச்சேவை மூலம் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியுமென பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளைசிறி அறிவித்தார்.(இ-5)




# பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் பாரிய சவாலை எதிர்கொள்ளும் நகரசபை

(சாவகச்சேரி)

பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் சாவகச்சேரி நகரசபையினர் பாரிய சவாலை எதிர்கொண்டு வருவதாக நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபையின் குடிநீர் கிணறு வற்றி வருகிறது. இதனால் நகரசபை எல்லைக்குள் காணப்படுகின்ற நகரசபையின் தண்ணீர்க் குழாய்களில் இருந்து கறுப்பு படிந்த, பாவனைக்கு உதவாத, சுகாதாரமற்ற நீர் வருகின்றதென பொதுமக்கள் விசனம் வெளியிட்டனர்.

சாதாரண குடிநீர்ப் பிரச்சினையைக் கூடத் தீர்க்க முடியாவிட்டால் நாம் சபையில் இருந்து எந்தப் பயனுமில்லை.

உடனடியாக நாம் மாற்று வழி ஒன்றைக் கண்டுபிடித்து மக்களுக்கு சுகாதாரமான நீரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆரம்ப காலத்தில் சாவகச்சேரி பொதுச்சந்தை வளாகத்திற்குள் காணப்படுகின்ற குடிதண்ணீர் கிணற்றைத் தான் வியாபாரிகள் உள்ளிட்ட பலரும் பயன்படுத்தினர்.

ஆனால் யுத்த காலத்தின் பின்னர் குறித்த கிணறு பயன்படுத்தப்படாமல் காணப்படுகிறது.

குறித்த கிணற்றை சுத்தப்படுத்தி மீண்டும் பயன்படுத்த ஏற்பாடு செய்வதன் மூலம் சந்தை வியாபாரிகளின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். நாம் முதலில் மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

நாம் அடுத்தவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்ட முன்னர் நாம் அவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கின்றோமா? என்று சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-30)

# நிர்வாகத்தெரிவு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி சைவ வாலிப சங்கத்தின் 101 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இ.நாகேந்திரம் தலைமையில் அண்மையில் அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலய பலநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக க.நாகலிங்கம், உபதலைவராக இ.நாகேந்திரம், செயலாளராக வ.மருதலிங்கம், உப செயலாளராக தா.நிகேதன், பொருளாளராக வ.நல்ல தம்பி, காப்பாளராக சங்கீதபூஷணம் வ.க.நடராஜா, கணக்காளராக சு.கணேசமூர்த்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-5)

# தரமான விதைநெல் இனங்களை பெற்றுக்கொள்ள முடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நெற்செய்கையாளர்கள் சிறந்த விதை நெல்லை கொள்வனவு செய்ய முடியுமென வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அஞ்சலாதேவி ஸ்ரீரங்கன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட நெற்செய்கையாளர்களுக்குத் தேவையான சிறந்த கூடிய விளைச்சலைத் தரக் கூடிய விதைநெல்லை யாழ்.மாவட்ட விதைநெல் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தில் (சி.கோ.) பெற்றுக் கொள்ள முடியும்.

யாழ்.மாவட்டத்தில் இவ்வருடம் உற்பத்தி செய்யப்படவுள்ள நெற்செய்கைக்கான சிறந்த விதை நெல் இனங்களான BG.406, AT. 362 ஆகிய இனங்கள் ஒரு புசல் நெல் - 1550 ரூபாய்க்கு கொள்வனவு செய்ய முடியுமென அவர் தெரிவித்தார். (இ-5)

# துவிச்சக்கரவண்டி அணிவகுப்பு

(சாவகச்சேரி)

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் நாவற்குழிச் சந்தியிலிருந்து நாவற்குழி மகாவித்தியாலயம் வரை துவிச்சக்கரவண்டி அணிவகுப்பு இடம்பெறும்.

இலங்கை -ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளுக்கான சாவகச்சேரி இளைஞர் சபையின் ஏற்பாட்டில், தன்னார்வ இளைஞர்களின் பங்களிப்புடன் குறித்த துவிச்சக்கரவண்டி அணிவகுப்பு இடம்பெறும்.இந்த துவிச்சக்கரவண்டி அணிவகுப்பில் கலந்து கொள்பவர்களுக்கு பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் அந்த அமையத்தினர் தெரிவித்தனர்.(இ-5-30)

# ஆளுநரின் பொதுமக்கள் தினம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் ஆளுநரின் "பொதுமக்கள் தினம்" கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அமைச்சு செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்றது. (இ-7)




கைதடி தெற்கு செல்வா சனசமூக நிலையத்தின் 40 ஆவது ஆண்டு நிகழ்வும் மகளிர் மகிழ்களம் பாரம்பரிய நிகழ்வும் கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்வா விளையாட்டு மைதானத்தில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி வி.தேவி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சு.கேதீஸ்வரன், கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழக தலைவர் க.சிறிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்போம்



## ஜே.வி.பி.உறுதி

(கொழும்பு)

**நாட்டில் ஒரு சர்வாதிகார ஆட்சிக்குப் பதிலாக மக்களுக்கான பிரதிநிதியை உருவாக்குவதற்காகவே மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வேலை செய்யும் எனவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்போம் எனவும் உறுதியளித்தது.**

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்தவகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க தாம் செயற்படுவோம் என்றும் அவர் உறுதியளித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என உறுதியளித்தவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் அதனைப் பின்பற்றவில்லை என சுட்டிக்காட்டிய அவர் இவ்வாறான தரப்பின் வாக்குறுதிகளை பொதுமக்கள் ஒருபோதும் இனி நம்பமாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது மட்டும் தமது நோக்கமில்லை என தெரிவித்த அவர் நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறும் ஒரு அமைப்பையும் மக்களின் கருத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தேர்தல் முறையையும் நிறுவுவது தமது நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என உறுதியளித்த வேட்பாளர்களில் நம்பத்தகுந்த ஒருவர் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் மட்டுமே எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். (இ-7)


### நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

லப்றடோர் (Labrador) இன நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.
T.P.No:- 071 157 1835
(9984)

### வேலைவாய்ப்பு

யாழ்.மாநகர சபை உறுப்பினர் அலுவலக வேலைகளுக்கு இரு பெண் வேலையாட்கள் தேவை. 40 வயதிற்குட்பட்டவர்கள்

- சம்பளம், உணவு உட்பட 10.000 (அடிப்படை)
- யாழ்.நகர எல்லைக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சுயவிபரக் கோவையுடன் சனிக்கிழமை 10 மணிக்கு நேரில் வரவும்.

52, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். 021 492 7880
(C-7353)


## "நாய்களின் சண்டையாக ஜனாதிபதித் தேர்தல்"

### ஆனந்த தேரர் விசனம்

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் அனைத்து பிக்குமார்களும் ஒன்றிணைந்து. ஒரு நோக்கத்திற்காக செயற்படவேண்டும் என பெவிதி ஹன்ட அமைப்பின் ஏற்பாட்டாளர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்தோடு, தற்போதைய நிலையில், ஜனாதிபதித் தேர்தல் நாய்கள் சண்டையாக மாறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், நாட்டிற்காக ஏதேனும் செய்த தலைவரின் அவசியத்தை உணர்ந்திருப்பதாகவும், அதன் காரணமாக ஒழுக்கமிக்க ஆட்சியாளர் ஒருவர் நம்மால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனவும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)


### கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:வியாபாரம் நகைக் கடை (H.N.D.A)<br>தொ.இ: B/9962 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>தகைமை/தொழில்B.Sc, HND, தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/9999 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 4 செவ்1 இல்<br>உயரம்:6'2"<br>தகைமை/தொழில்Manager (foodcity)Lanlan<br>எதிர்பார்ப்பு:ஆங்கிலஅறிவு இருக்க வேண்டும்<br>தொ.இ: B/9963 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 43 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/10003 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 35 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Software Engineer<br>எதிர்பார்ப்பு:BA, பட்டதாரி தவிர்ந்த ஏனைய பட்டதாரி தொழில் புரிபவர்<br>தொ.இ: B/9965 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:33 1/2<br>உயரம்:167 cm<br>தகைமை/தொழில்:Trainee lawyer<br>எதிர்பார்ப்பு: ஜேர்மனியில் பட்டப்படிப்பு முடித்திருத்தல் வேண்டும். ஜேர்மனியில் பிறந்தவர்<br>தொ.இ: G/10006 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:ஆசிரியர் அல்லது அரசதொழில்<br>தொ.இ: B/9966 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>உயரம்: 162 cm<br>தொ.இ: G/10009 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



பழைமை வாய்ந்த

### ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்
(9976)



### பிறந்தநாள் வாழ்த்தும் பணி ஓய்வு ஆசிகளும்

### திரு.மார்க்கண்டு லிங்கராசா பாஸ்கரன்

ஆசிரியர். யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.
இணைப்பாளர், பிராந்திய ஆங்கில ஆதார நிலையம் -யாழ்ப்பாணம் (RESC-Jaffna)



அகவை 60 நிறைவுறுகையில் பணி ஓய்வு கொள்ளும் அன்னை மகாஜனாவின் மைந்தன், எமதினிய தோழன், தன் 32 வருட சேவை நிறைவின் பின்னர், தன்னகத்தில் கனிவான மனைவி, பண்பான பிள்ளைகளுடன் நனி சிறந்து நீடூழி வாழ அன்புடன் வாழ்த்துகின்றோம்!

வாழ்த்துபவர்கள்:

- திருமதி.ஜெயபவானி வேல்ராஜா - ஆசிரியை, யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி. கோண்டாவில்.
- செல்வி கலாவல்லி செல்வமாணிக்கம் - ஆசிரியை, யா/இணுவில் இந்துக் கல்லூரி, இணுவில்
- திருமதி தேவகி கணநாதன் - ஓய்வு நிலை ஆசிரியை, யா/வீமன்காமம் ம.வி. மாவிட்டபுரம்
- செல்வி பத்மலோஜினி வேலுப்பிள்ளை - ஓய்வு நிலை ஆசிரியை, உப அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை.

077 155 5309
(9963)

# ஐ.தே.க.ஜனாதிபதி வேட்பாளராக கிரியெல்லவை நியமிக்க வேண்டும்

## சஜித்தை தாக்கிப்பேசிய ஆனந்த அளுத்கமகே

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர், சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்லவை நியமிக்க வேண்டும், அவ்வாறு நியமித்தால் அவருக்கு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது கண்டி மாவட்ட உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸவிடம் கேள்வி ஒன்றை கேட்டிருந்தார். அவரின் கேள்விக்கான பதிலை ஆளும் கட்சி பிரதம கொறடா கயந்த கருணாதிலக சபைக்கு சமர்ப்பித்தார்.

இதன்போது இடைக்கேள்வி யொன்றுக்காக எழுந்த ஆனந்த அளுத்கமகே, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சஜித் பிரேமதாஸ எமது கேள்விக்கு முறையான பதிலை வழங்காமல் ஜனாதிபதி வேட்பாளராகக் கனவு கண்டு வருகின்றார். அதற்காக பிரசாரம் செய்து திரிகின்றார்.

வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வுகளுக்காக பாரியளவில் விளம்பரத்துக்காக மக்களின் பணத்தை செலவிட்டு வருகின்றார். ஆனால் பாராளுமன்றத்துக்கு வருவதில்லை.

அதனால் தினந்தோறும் பாராளுமன்றத்துக்கு வரும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவை ஜனாதிபதி வேட்பாளராகப் பெயரிடுங்கள். அவர் எதையாவது செய்வார்.


எமது மாவட்ட உறுப்பினர் என்றவகையில் நாங்களும் ஆதரவளிப்போம் என்றார்.

இதன்போது எழுந்த அமைச்சர் கிரியெல்ல,

நான் ஜனாதிபதி வேட்பாளரானால் நீங்கள் எனக்கு ஆதரவாக இருப்பீர்களா? என்று கேட்டார்.

அதற்கு ஆனந்த அளுத்கமகே பதிலளிக்கையில், நிச்சயமாக நான் மாத்திரமல்ல, என்னுடன் இன்னும் சிலர் இன்றே உங்களுக்காகசெயற்படவருவோம் எனத் தெரிவித்தார். (இ-7)

# ஸ்ரீலங்கன் விமான சேவை 44,300 மில்லியன் ரூபா நட்டத்தை எதிர்கொண்டது



(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானசேவை கடந்த ஆண்டில் 44 ஆயிரத்து 300 மில்லியன் ரூபாய்கள் நட்டத்தை சந்தித்தது எனவும் நட்டத்தை அரசாங்கத்தின் திறைசேரியே கையாள்கின்றது எனவும் இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.


பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானசேவை குறித்து எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில்,

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானசேவை நட்டத்தில் இயங்குகின்றது. நிதி அமைச்சின் ஊடாக அரசாங்கமே இதனைத் தாங்கி வருகின்றது. தனியார் துறைக்குக் கொடுக்க முடிந்தால் பிரச்சினை இல்லை.

அரசாங்கம் பராமரிக்க வேண்டும் என்றால் நட்டத்தை தாங்கித்தான் ஆகவேண்டும். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சேவை கடந்த 2018 ஆம் ஆண்டில் 44 ஆயிரத்து 300 மில்லியன் ரூபாய்கள் நட்டத்தை சந்தித்தது. கடந்த காலங்களில் சிறிது காலம் விமானநிலையம் மூடப்பட்டமை மற்றும் விமானங்கள் விற்றமை என்பன காரணமாக இது அமைந்தது. அத்துடன் எரிபொருள் விலை உயர்வும் பிரதான காரணியாக அமைந்தது. இன்று வரை திறைசேரியின் உதவியுடன் தான் விமான சேவையை நடத்துவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோத்தபாயவுடன் விரைவில் நேரடியாக பேச்சுவார்த்தை

## அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவுடனான கூட்டணி தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

எனினும் இதில் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து எந்த தீர்மானமும் எடுக்கப்படமாட்டாது என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர, வேட்பாளர் குறித்து கோத்தபாய ராஜபக்ஷவுடன் நேரடியாக பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு அவருடனேயே புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படும் என்றும் அமரவீர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே.கவின் பிரதேச சபை உறுப்பினருக்கு விளக்கமறியல்

(வென்னப்புவ)

ஐக்கிய தேசியக் கட்சியின் வென்னப்புவ பிரதேச சபை உறுப்பினர் துலக்ஷி சமோதரி மற்றும் அவரது சகோதரி ஆகியோரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

குறித்த இருவரும் நேற்று முன்தினம் புதன்கிழமை மாரவில நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

வென்னப்புவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சீனோர் சந்தியில் வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் வாகனக் காப்புறுதி பத்திரமின்றி குறித்த பிரதேச சபை உறுப்பினரின் இளைய சகோதரி அதிவேகமாக மோட்டார் சைக்கிளில் பயணித்தார்.

இதன்போது, பொலிஸ் அதிகாரியால் அவர் தடுத்து நிறுத்தப்பட்டார்.

இதன்போது, அவ்விடத்திற்கு வந்த பிரதேச சபை உறுப்பினர், அவரது தந்தை மற்றும் மூத்த சகோதரி ஆகியோரால் குறித்த பொலிஸ் அதிகாரிக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதையடுத்து, வென்னப்புவ பிரதேச சபை உறுப்பினர் மற்றும் அவரது சகோதரி ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குவைத்தில் சித்திரவதைக்குள்ளான 60 பணிப்பெண்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

**குவைத் நாட்டிற்கு பணிப்பெண்களாக சென்ற 60 பெண்கள் நேற்றுக் காலை நாடு திரும்பினர். குறித்த பெண்கள் அங்கு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டிருந்த நிலையில் திருப்பியனுப்பப்பட்டனர்.**

**இலங்கை விமான சேவை யு.எல் 260 ஆகிய விமானம் மூலம் குறித்த பணிப் பெண்கள் நேற்றுக்காலை 6.30 மணியளவில் நாடு திரும்பினர்.** (இ-7)

# அரசியல் பழிவாங்கலுக்குள்ளானவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை

## பாலித ரங்கே தகவல்



(கொழும்பு)

மகிந்த ஆட்சிக் காலத்தில் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளின் விளைவாக கொல்லப்பட்டவர்களுக்கும் அவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாகிய சகலருக்கும் நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1994 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்களுக்கு எதிராக அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்றிருந்தன. அதற்கமைய அரசியல் காரணங்களுக்காக ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் 73 பேர் கொல்லப்பட்டனர்.

அதில் 58 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையை வழங்கியுள்ளோம். எஞ்சியுள்ள 15 குடும்பங்களுக்கு தேவையான நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம்.

அதேபோன்று 275 பேர் பாரதூரமான தாக்குதல் சம்பவங்களினால் பாதிப்படைந்தனர். அவர்களில் 154 பேருக்கான நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் இவர்களில் இன்னும் 94 பேருக்கு நிவாரணங்கள் வழங்க வேண்டியுள்ளது. மேலும் அரசியல் பழிவாங்கல்களினால் 1408 பேர் தமது சொத்துக்களை இழந்தனர். இவர்கள் தொடர்பான விசாரணைகளை முடிவடைந்த நிலையில் அவர்களுக்கான நிவாரணங்களை வழங்கவும் தீர்மானித்துள்ளோம்.

இவர்களில் இதுவரையில் 351 பேருக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இன்னும் 1357 பேருக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

செப்டெம்பர் மாதம் மூன்றாம் திகதியாகும் போது விசாரணைகள் நிறைவடைந்துள்ளவர்களுக்கான நிவாரணங்களையும், செப்டெம்பர் 15 ஆம் திகதியாகும் போது அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்துள்ள ஆதரவாளர்கள் தொடர்பில் விசாரணைகளை செய்து அவர்களுக்கான நிவாரணத்தை வழங்கவும் மீள்குடியேற்ற அதிகார சபையும் அமைச்சும் தீர்மானித்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நல்லூர்க் கந்தன் மஹோற்சவ காலத்தில் பல்வேறு ஆன்மீக வைபவங்கள்



ஈழமணித் திருநாட்டில் நல்லூர்க்கந்தன் ஆலய மஹோற்சவ நிகழ்வின் போது அதன் சூழலில் பல்வேறு ஆன்மீக வைபவங்கள் இடம்பெறுகின்றன. அழகிய தமிழ்க் கடவுளாக அருட்கோலம் கொண்டு நடு நாயகனாக வீற்றிருந்து அகிலமெல்லாம் அருள் பொழிந்து கொண்டிருக்கிறார் நல்லை முருகன். அலங்காரக் கந்தனாக அடியார்கள் மனங்களில் குடிகொண்டிருக்கிறார். யாழ்.மண்ணின் கந்தபுராணக் கலாசாரத்தின் அடையாளமாக நல்லூர்க்கந்தசுவாமி ஆலயம் விளங்குகிறது.

நேரகாலம் தவறாத பூசைக்கும் வழிபாட்டு முறைகளுக்கும் பரிசுத்தத்திற்கும் உதாரணமாக நல்லூர்க்கந்தன் திகழ்கிறான். மிக இறுக்கமான தமிழ்க்கலாசார பண்புகளையும் சைவ சமய ஆசார சீலங்களையும் கடைப்பிடித்து முன்மாதிரியாக நல்லூர் முருகன் விளங்குகிறான்.

நல்லூர் மஹோற்சவம் 25 தினங்கள் சிறப்பாக இடம்பெறுகின்றன. மஞ்சம், கார்த்திகைத் திருவிழா, கைலாச வாகனத் திருவிழா, தங்கரதத் திருவிழா, மாம்பழத் திருவிழா, சப்பரத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா, பூங்காவனத் திருவிழா என உற்சவங்கள் யாவும் முருகப் பெருமானின் அருள் ஒளி வீச வெகு அலங்காரமாக வீதிவலம் வரும் அரும் காட்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக அமைகிறன.

கலையழகு மிக்க ஆலயக் கட்டட அமைப்புக்கள், அதன் சூழல்கள், நாற்றிசையும் எழுந்துள்ள நெடு மதில்கள், குளிர்ச்சியான மரங்கள் தரும் நிழல்கள், வெளிவீதிகள் யாவும் சுகாதாரப் பணிமனையினால் மிகவும் சுத்தமாக நீர் தெளித்தும் குளிர்மைப் படுத்துகின்ற தன்மை யாவும் அடியார்களின் இதயங்களுக்கு இதமாக உள்ளன. அவை எவரையும் ஈர்க்கும் சக்தி கொண்டனவாகவும் அமைகின்றன. சுவாமி உள் வீதி, வெளிவீதி உலாவரும் வேளையில் காணக் கிடைக்கின்ற அலங்காரங்கள் யாவும் கண்களுக்கும் மனத்திற்கும் பெரு விருந்தாகின்றன. அவை பக்தி உணர்வினை மென்மேலும் தூண்டுகின்றன. அதனால் அலங்காரக் கந்தன் எனும் அடை மொழியினால் நல்லைக் கந்தனை அழைக்கின்றனர்.

நல்லைக் கந்தன் ஆலயத்தில் முருகன் பவனி வரும் வாகனங்கள், மஞ்சம், கார்த்திகை, சப்பறம், கைலாச வாகனம், தங்கரதம், பெரிய சப்பறம், தேர் போன்ற ஊர்திகளின் அழகும் வண்ணமும் மிகவும் வனப்பு மிக்கன.

சிற்ப வேலைப்பாடுகள் மிக்க கிழக்கு வாசல் பஞ்சதள இராஜ கோபுரம் மற்றும் தெற்கு வடக்குத் திக்குகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பெரிய இராஜகோபுரங்கள்.

நல்லூர் முருகன் ஆலய உட்பிரகாரம் அமைந்துள்ள அழகிய தோற்றங்கள் யாவும் பூலோக கைலாசமாக எமக்கு காட்சி அளிக்கின்றன. உற்சவ காலங்களில் நல்லை பேராலயத்தில் அடியார்கள் அலை மோதுகின்றனர்.

தாகசாந்தி நிலையங்கள், அன்னதான மடாலயங்கள், மண்டபங்கள், அவற்றின் உபசரிப்புகள் என்பன அடியார்களை மிகவும் கவர்வனவாகவுள்ளன.

ஆட்டக் காவடிகள், தூக்குக் காவடிகள், பறவைக் காவடிகள் முதலான விதவிதமான பல நூறு காவடிகள் தேர், தீர்த்தம் முதலான விசேட திருவிழா நாட்களில் காண முடிகின்றன. யாழ்.மண்ணின் கலாசாரப் பெருவிழா என அழைக்கும் மகிமை மிக்க நல்லூர் கோவிலின் வருடாந்த திருவிழாவாக இவ் விழா அமைகிறது.

மஞ்சத் திருவிழா முதல் அடியார்கள் கூட்டம் பெருகி வருவது காண்கிறோம். நல்லூர் முருகன் உள்வீதி, வெளி வீதி வலம் வரும் பொழுது ஈழ நல்லூர் பி.ரஜீந்திரன், அவரது புதல்வன் குழுவினரின் இனிய நாதஸ்வர கான இசையில் அடியார்கள் அதனை ரசித்து வரும் காட்சிகளும் முருகன் கொலுவீற்றிருந்து மின் ஒளியில் மிகவும் அலங்காரமாக, பிரகாசமாகக் காட்சி தருவனவும் பஜனைக் கோஸ்டியினரின் இனிய தான வாத்திய இன்னிசையும் சுவாமி சின்மயா மிஷன் ஆச்சார்யார் தலைமையில் இளம் பாலகர்கள், பெண்கள், ஆண்கள் எனப் பலரும் வரிசையாக அழகுடன் தாளங்கள் போட்டு பஜனை செய்யும் காட்சிகள் யாவும் மிக அற்புதமாகக் காணப்படுகின்றன. மேலும் சுவாமி வீதி வலம் வரும் போது டான் தொலைக்காட்சி சேவை ஓம் எனும் அலையில் யாவரும் காணும் வண்ணமாக மிகத் தெளிவாக வர்ணனை செய்து காண்பிப்பன விசேட அம்சமாகும்.

மேலும் முருகன் வெளிவீதி வரும் போது தெற்கு இராஜ கோபுர வாசலிலும் கிழக்கு ஈசான மூலையிலும் பிரம்மஸ்ரீ பிரசன்னா குருக்களின் திருப்புகழ், தேவாரப் பாடல்கள் மிக இனிமையாகப் பக்தியுடன் பலத்த தொனியில் பாடி மகிழ்விப்பனவும் சிறப்பானதாகும். எழிலார்ந்த சித்திரத் தேரில் வள்ளி தெய்வானை சமேதராக சண்முகப் பெருமான் வரும் காட்சியை காண நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல இலட்சக் கணக்கான அடியார்கள் குவிந்து காணப்படும் காட்சிகள் அற்புதமானவை. சண்முகப் பெருமான் பச்சை சாத்தி தேரிலிருந்து இறங்கி திருக்கோவிலுக்கு திரும்பி வரும் காட்சிகள் வெகு அற்புதம் வாய்ந்தன. நல்லூர் முருகன் தன்னை நாடிவரும் அடியார்களுக்கு சகல செளபாக்கியங்களையும் அருள்கிறான்.

நல்லூர்ச்சூழலில் தினமும் ஆன்மீக நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. அவ்வகையில் இளங்கலைஞர் மன்றம் வருடாவருடம் தவறாது துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்தி வருகின்ற தெய்வீக இசையரங்கு மிகவும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளன.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆசியுரையுடன் முதல் நாள் நிகழ்வு ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து மங்கள இசையில் இளங்கலைஞர்களான பி.எஸ்.பி. சாரங்கன், பி.எஸ்.ஜெயசங்கர் ஆகியோர் நாதஸ்வரம் வாசிக்க யாழ். நாச்சிமார் கோயிலடி இளம் தவில் கலைஞரான கே.எஸ்.பிரபாகரன், சித்தன்கேணி ப.ஜெயந்தன் ஆகியோர் தவில் வாசித்து அங்கு கூடியிருந்த நல்லைக் கந்தன் அடியார்களையும் இசை ரசிகர்களையும் வியப்பில் ஆழ்த்தினர்.

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தினமும் திருவிழாக் காலத்தில் மாலை 7 மணி முதல் 8.30 மணிவரை பல்வேறு கலைஞர்களின் இசைக் கச்சேரிகள், வயலின் இசை என்பன இடம் பெறுகின்றன. சியாமளாங்கி கருணாகரன், பரமேஸ்வரி கணேசன், ஆரூரன் அருனந்தி, சு.அனந்த நாராயண சர்மா, என்.வி.எம். நவரெத்தினம், வாசுகி சுவாமிநாதசர்மா நந்தினி, சுவாமிநாத சர்மா முதலான பிரபலம் பெற்ற கலைஞர்கள் பாடுகின்றார்கள்.

மேலும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லை திருஞான சம்பந்த ஆதீன கலா மண்டபத்தில் கந்த புராண எழுச்சி அருள்நெறி விழாவினை இவ் ஆண்டும் மிகவும் சிறப்பாக நடத்துகின்றமை வரவேற்கத்தக்கது.

இந் நிகழ்வில் பல அறிஞர்களின் ஆன்மீக சொற்பொழிவுகளும் இளஞ் கலைஞர்களின் கலை நிகழ்வுகளும் இளைஞர்களின் பேச்சுக்கள் என்பன இடம் பெறுகின்றன. சைவம் தழைத்தோங்க எனும் நிகழ்வு இவ் ஆண்டு டான் தொலைக்காட்சியும் யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கமும் இணைந்து நல்லை ஆதீனத்தின் பின்புறத்தில் மிகவும் புதுமையாக நடத்தி வருகின்றமையும் சிறப்பானவை. நல்லூர் உற்சவ காலத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் சைவம் தழைத்தோங்க எனும் நிகழ்ச்சி சிறுவர்களை வழிப்படுத்தும் வண்ணம் ஆன்மீகப் பணிகளையும் சமய வினா விடைப் போட்டி, பக்தி கானங்கள், சிறார்களின் நடனம், ஆன்மீக சொற்பொழிவுகள் கொண்ட நிகழ்வாக தினமும் மாலை 7 மணி முதல் 9 மணி வரை மிகச் சிறப்புடன் அடியார் கள் காணும் வண்ணம் நேரடியாகவும் ஓம் தொலைக்காட்சி ஊடாகவும் நடத்துகின்றமை பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.

இவ்வாறாக நல்லூர் உற்சவ காலங்களில் நல்லூர் சூழல் பக்தி மணம் கமழ மன அமைதியையும் சாந்தியினையும் உற்சாகத்தினையும் கொண்டனவாக அமைகின்றன.

பிரம்மஸ்ரீ.இ.குமாரசாமிசர்மா
ஓய்வுநிலை
உதவிப் பணிப்பாளர்.

# இலங்கையை இந்து சமுத்திரத்தின் மத்திய நிலையமாக்குவதே இலக்கு

## பிரதமர் திட்டவட்டம்

(கொழும்பு)

**இலங்கையை இந்த சமுத்திரத்தின் மத்திய நிலையமாக மாற்றி அமைப்பதே தமது பிரதான இலக்கென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



கொழும்பில் வாகன நெரிசலைக் குறைக்கும் நோக்குடன் பயணிகளின் நலன் கருதி படகுப் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கமைய கொம்பனித் தெரு முதல் கோட்டை வரையான பகுதியில் உள்ள வாவியில் பயணிகள் படகு சேவையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் அமைச்சர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, சாகல ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், ஏ.எச்.எம்.பௌசி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கொழும்பு துறைமுகத்தின் தெற்கு முனை அபிவிருத்திப் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் தெற்கு முனையின் அபிவிருத்தியோடு இடைநிறுத்தப் போவதில்லை என்றும் விரைவில் வடக்கு முனை அபிவிருத்திப் பணிகளையும் ஆரம்பிக்க வேண்டும் என்றும் மேலும் தெரிவித்தார். (ஐ)

# உள்ளூர் துப்பாக்கிகளுடன் ஐவர் கைது

(அம்பகமுவ)

அம்பகமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதுகல, மவ்ஹார பிரதேசத்தில் சூரியவெவ அதிரடிப்படையால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 5 துப்பாக்கிகளுடன் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டோர் அலுத்வெல வீதி ஹம்பகமுவ பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

35 முதல் 56 வயதுக்கு இடைப்பட்ட இச் சந்தேக நபர்கள், மிருக வேட்டைக்காக இந்தத் துப்பாக்கிகளை வைத்திருந்திருக்கக் கூடும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். (ஐ)

# பொலிஸாரின் பதவி உயர்வு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு



(கொழும்பு)

பொலிஸ் பதவியுயர்வு தொடர்பில் பிரச்சினை இருப்பதாகவும் அவற்றை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ வாய்மூலம் கேட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் பதிலளித்தார்.

உப பொலிஸ் பரிசோதகர் பதவியில் 10 வருட கால சேவையைப் பூர்த்தி செய்த 539 உப பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் 56 மகளிர் உப பொலிஸ் பரிசோதகர்கள் தற்பொழுது பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

புதிதாக பதவியில் இணைத்துக்கொள்ளல் மற்றும் பதவி உயர்வு விதிமுறைகளுக்கு அங்கீகாரம் கிடைத்த பின்னர் அதற்கு அமைவாக பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதவி உயர்வு தொடர்பில் பிரச்சினை உண்டு, அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொலிஸாருக்கு உரிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# இராணுவத்தளபதி நியமனம், பிற்போக்குத்தனமான செயற்பாடு

## தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன்

(மன்னார்)

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் பங்கேற்று பல்வேறு விதமான இனப்படுகொலைக்கு காரணமாக இருந்து சர்வதேச சமூகத்தினால் போர்க்குற்றம் சாட்டப்பட்ட சவேந்திர சில்வாவை இலங்கையினுடைய இராணுவ தளபதியாக அரசாங்கம் நியமித்து இருப்பது மிக பிற்போக்குத் தனமான செயற்பாடு என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத் தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் முடிவுற்று 10 ஆண்டு களாகியும் இவர் மீது பல்வேறு விதமான போர்க்குற்றச்சாட்டுக்கள் உலகளாவிய ரீதியில் பல வெளிநாடுகளினால் குற்றம் சாட்டப்பட்டிருந்த சூழ்நிலையில், பல்வேறு மனித உரிமை தரப்புக்கள் இவர் மீது விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென்கின்ற வேண்டுகோள் விடுத்திருந்த சூழ்நிலையில் இந்த நியமனம் என்பது மிக மோசமானதாக காணப்படுகின்றது.

ஏனெனில் நல்லாட்சி எனும் கோசத்துடன் வந்த அரசாங்கத்தினுடைய ஜனாதிபதி கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனால் மண்டோடே என்றும் காந்தி என்றும் எடுகோளாக காட்டப்பட்ட மைத்திரிபால சிறிசேன இவ்வாறான நியமனத்தை செய்திருப்பது நல்லாட்சி என்கின்ற கோசத்திற்கு ஒரு மோசமான பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அரசாங்கம் என்பது எப்போதும் யுத்த வெற்றிவாதம் மனோபாவத்தில் இருந்து விடுபடவில்லை என்பதையே தொடர்ச்சியாக நிதியியல் அறிக்கைகளில் எவ்வாறு பாதுகாப்பு அமைச்சிற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்கின்றார்களோ அதே நிலைப்பாட்டில் தொடர்ச்சியாக யுத்த வெற்றிவாத மனோநிலையில் சிங்கள பௌத்த பெரும் தேசியவாதத்தை காண்பிக்க வேண்டும் என்கின்ற போக்கு மிகவும் மோசமான ஒரு விளைவைக் கொடுக்கக் கூடியதாகவே இருக்கின்றது.

எனவே அரசாங்கத்தின் இவ்வாறான ஒரு போக்கும் ஜனாதிபதியினுடைய இந்த நியமனம் என்பதும் மனித உரிமை ஆர்வலர்களையும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஒரு மோசமான விளைவை ஏற்படுத்துகின்றதாகவே அமைந்திருக்கின்றது. ஏனெனில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு இவ்விதமான யுத்த வெற்றிவாத மனோநிலையும் மக்களை அவ்வாறான இனவாத நிலைக்குள் தூண்டிவாக்குப்பெறக்கூடிய அடிப்படைவாதமாக இதுநியமனங்களை பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

தொடர்ச்சியாக தமிழர் தரப்பினுடைய எதிர்பார்ப்பும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் அனுசரணையும் இயங்குகின்ற அரசாங்கம் இவ்விதமான நகர்வை முன்னெடுத்து இருப்பது தமிழர் தரப்பிற்கு மிக மோசமான பின்னடைவையும் வீழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது என்பதனை கருதக் கூடியதாக உள்ளது என மேலும் தெரிவித்தார். (9-285)

# அன்பளிப்புப் பணத்தை கொள்ளையிட்டவர் விளக்கமறியலில்

(கண்டாவளை)

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் அமைந்துள்ள விருந்தகத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வின் போது அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒருதொகைப் பணத்தை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மேலும் 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் கடந்த ஜூன் மாதம் 05ஆம் திகதி நடைபெற்ற திருமண நிகழ்வு ஒன்றில் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பெருந்தொகை நிதி கொள்ளையிடப்பட்டமை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த கிளிநொச்சிப் பொலிஸார் விடுதியில் பொருத்தப்பட்ட சி.சி.ரீ.வி. கமரா பதிவுகளை பார்வையிட்டு அதனை அடிப்படையாக வைத்து சந்தேக நபர் ஒருவரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துடன், மேற்படி சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதையடுத்து, குறித்த சந்தேக நபர் தொடர்ந்தும் நேற்று முன்தினம் வரையும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

மேற்படி சந்தேக நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ரீ. சரவணராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதுடன் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் சந்தேக நபரின் தொலைபேசி உரையாடல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி மேலும் இரண்டு பேரைக்கைது செய்ய வேண்டியுள்ளதாகவும் தெரிவித்ததையடுத்து மேற்படி சந்தேக நபரை எதிர்வரும் 04 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கட்டளையிட்டார். (9-315)




# விபத்தில் சேதமடைந்த வியாபார நிலையத்துக்கான காப்பீட்டு நிதியை வழங்காத காப்புறுதி நிறுவனம்

(நெளுக்குளம்)

காப்புறுதி நிறுவனம் ஒன்றினால் காப்பீடு செய்யப்பட்ட வவுனியா கண்டி வீதியிலுள்ள வர்த்தக நிலையத்தில் தீவிபத்து ஏற்பட்டு பெருமளவு இழப்பீடுகள் ஏற்பட்டுள்ள நிலையில் அவ்வியாபார நிலையத்திற்கான இழப்பீட்டு நிதி எட்டு மாதங்கள் கடந்த நிலையிலும் இன்றுவரையிலும் காப்புறுதி நிறுவனத்தினால் வழங்கப்படவில்லை எனவும் இதனால் மன உளைச்சல் ஏற்பட்டுள்ளதாக வியாபார நிலைய உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் முதலாம் திகதி வவுனியா கண்டி வீதியிலுள்ள பிரபல்யமான வர்த்தக நிலையத்தில் தீவிபத்து இடம் பெற்றுள்ளது. இந்நிலையில் அவ்வியாபார நிலையம் இரண்டாம் குறுக்குத் தெருவிலுள்ள காப்புறுதி நிறுவனம் ஒன்றினால் கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து காப்பீடு செய்யப்பட்டு தீவிபத்து இடம்பெறும் வரையான காலப்பகுதிவரையும் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தீ விபத்து மின் ஒழுக்கினால் இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸ் அறிக்கை, இலங்கை மின்சார சபையின் அறிக்கை ஊடாக காப்பீடு நிறுவனத்திற்கும் வியாபார நிலைய உரிமையாளருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தீ விபத்து இடம் பெற்று எட்டு மாதங்கள் முடிவடைந்த நிலையிலும் இன்று வரையிலும் காப்புறுதி நிறுவனத்தினால் இழப்பீட்டு தொகை வழங்கப்படவில்லை. வியாபார நிலையம் காப்பீடு செய்யப்பட்டுள்ள முழுத் தொகை காப்பீடு (1,70,00000) ஒரு கோடியே எழுபது இலட்சம் ரூபாவாகும்.

வியாபார நிலையத்திற்கு (12863050) ஒரு கோடியே இருபத்தியெட்டு இலட்சத்து அறுபத்தி மூவாயிரத்து ஐம்பது ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும் குறித்த காப்புறுதி நிறுவனம் தனக்கான காப்பீட்டு நிதியை வழங்க காலதாமதம் ஏற்படுத்தி வருகின்றதாகவும் இதன் காரணமாக இழப்பீடு ஏற்பட்டுள்ள வர்த்தக நிலையத் தின் இழப்புக்களை ஈடு செய்து கொள்ள முடியாமல் இருப்பதாகவும் தீ விபத்தினால் எரிந்து சேதமடைந்த வியாபார நிலையத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (9-299)



புதுக்குளம் சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ திருவிழா நேற்று ஆரம்பமாகியது. எதிர் வரும் ஆலயத்தின் புது வரவான சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறுவதுடன் தேர்த்திருவிழா 29.09.2019 வியாழக்கிழமை காலை 10.45 மணிக்கு நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (நெளுக்குளம் செய்தியாளர்)

# மீள்குடியேறிய மக்களின் வீடுகள் கடும் காற்றினால் சேதம்



(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட மீள் குடியேற்றக் கிராமங்களான முகமாலை, இந்திரபுரம் பகுதியில் நேற்று முன் தினம் மாலை வீசிய கடும் காற்றினால் மீள்குடியேறிய மக்களின் குடிசைகள் சேதமடைந்துள்ளன.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட மீள் குடியேற்றக் கிராமங்களான முகமாலை, இந்திரபுரம் பகுதிகளில் நேற்று முன்தினம் காற்றுடன் கூடிய மழை பெய்தமையினால் மீள் குடியேறியுள்ள மக்களின் தற்காலிக குடிசையின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களின் உடைமைகளும் சேதமடைந்துள்ளன.

10 இற்கும் மேற்பட்ட வீடுகள் இவ்வாறு காற்றினால் சேதமடைந்துள்ளன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக 2000ஆம் ஆண்டில் இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் பத்தொன்பது வருடங்களுக்குப்பின்னர் சொந்த நிலத்தில் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

வெடிபொருள் ஆபத்து நிறைந்த பகுதியாகக் காணப்பட்ட இப்பிரதேசத்தில் வெடிபொருட்கள் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடியேறியதைத்தொடர்ந்து இவர்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக வீடுகள் இவ்வாறு சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-315-350)

# நெல் உலரவிடும் தளங்கள் இல்லை வீதியில் காயவிடும் விவசாயிகள்



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் உலரவிடும் தளங்கள் போதியளவில் இல்லாததன் காரணமாக விவசாயிகள் நெல்லினை வீதியில் காயவிடுகின்ற நிலைமை தொடர்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம், முத்தையன் கட்டுக்குளம், உடையார் கட்டுக் குளம் உட்பட சிறுபோக நெற்செய்கை இடம் பெற்ற அனைத்துக் குளங்களின் கீழும் அறுவடைகள் தற்போது நடைபெறுகின்றன.

நெல்லினைக் உரைவிடுவதற்கு வீதியினை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். குளங்களின் கீழ் அதிகளவிலான நெல் உலரவிடும் தளங்களை அமைப்பதன் மூலம் வீதிக்கு நெல்லினைக் கொண்டு வருகின்ற நிலைமை மாறுபடும்.

இதேவேளை வவுனிக்குளம், முத்தையன்கட்டுக்குளம், உடையார்கட்டுக்குளம் உட்பட மாவட்டத்தின் அனைத்து நீர்ப்பாசனக் குளத்தின் கீழும் நெற் களஞ்சியங்கள் அமைக்கப்பட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

களஞ்சியங்கள் இல்லாததன் காரணமாகவே விவசாயிகள் நெல்லினை உலரவிடாமல் உடனடியாக குறைந்த விலையில் விற்பனை செய்கின்ற நிலைமை உள்ளதாகவும் தெரிவிப்பதுடன் மாவட்டத்தில் நெற் களஞ்சியங்களை கூடுதலாக அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (9-350)

# நந்திக்கடல் துப்புரவுப்பணிகள் முன்னெடுப்பதில் தாமதம்

## சிறு கடற்றொழிலாளர்கள் பாதிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறுகடல் பகுதியான நந்திக்கடல் ஆற்றின் துப்புரவுப்பணிகளை முன்னெடுக்காமையினால் தமது தொழில் முழுமையாகப் பாதிக் கப்பட்டிருப்பதாக சிறு கடற்றொழி லாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு கடற்றொழிலாளர்களின் வாழ் வாதாரமாக அமைந்துள்ள நந் திக் கடல் பகுதி கடந்த ஆழிப் பேரலை அனர்த்தத்தினாலும் போரினால் உவர்நீர்த்தடுப்ப ணைகள் சேதமடைந்தமையி னாலும் பெருமளவான கழிவு கள் நந்திக் கடல் பகுதிக்குள் வந்து சேர்ந்துள்ளன.

இதனால் நந்திக்கடலில் ஆழம் குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக குறிப்பிட்ட காலத்திற்குப்பின்னர் நந்திக்கடல் வற்றிக் காணப்படுவதுடன், கடற் றொழிலும் பாதிக்கப்படுகின்றது.

இதனால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில் வாய்ப்புக் களை இழக்கின்றன.

குறித்த கடல் பிரதேசத்தில் காணப்படுகின்ற கழிவுகளை அகற்றி ஆற்றினை துப்புரவு செய்து தருமாறு கடற் றொழி லாளர்கள் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின் றனர்.

கடந்த காலங்களில் இதற் கான நிதி கிடைக்கப் பெற்ற போதும், வனஜீவராசிகள் திணைக்களத்தினால் இயற்கை ஒதுக்கிடமாக இப்பிரதேசம் அடையாளப்படுத்தப்பட்டு அதனை துப்புரவு செய்வதற்கான அனு மதிகள் மறுக்கப்பட்ட நிலையில் அதற்கான நிதி மீளத் திரும்பிச் சென்றுள்ளதாகவும் சுட்டிக் காட்டி யுள்ள மீனவர்கள் இந்த வரு டத்தில் இதனைத் துப்புரவு செய்வது தொடர்பில் அண்மை யில் நடந்த மாவட்ட ஒருங்கி ணைப்புக்குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் தொடர்பாக விவா திக்கப்பட்டு இதனை புனமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தீர் மானங்கள் கொண்டு வரப் பட்டன.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்களின் வாழ் வாதாரமாக அமைந்துள்ள நந் திக்கடல் பகுதியை துப்புரவு செய்து புனரமைத்துத்தர நட வடிக்கை எடுக்க வேண்டுமென மீனவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (9-315)

# மன்னாரில் தொடரும் வரட்சி; மேட்டுநில பயிர்ச்செய்கை பாதிப்பு



(மன்னார்)

வரட்சி காரணமாக மன்னார் மாவட்டத்தில் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மேட்டு நிலப் பயிர்ச்செய்கை பாதிப்புக்குள்ளாகியதாக விவ சாயிகள் கவலை தெரிவித்துள் ளனர்.

மன்னார் பகுதியில் மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்படுகின்ற போது மழை சிறிய அளவு கூட கிடைக்க வில்லை. எனவே கடும் வரட்சி நிலவி வருகின்றமையால் கிண ற்று நீர் வற்றிய நிலையில் காண ப்படுகிறது.

குறிப்பாக நானாட்டான், மாந்தை, மடுப் பிரதேசங்களில் விவசாயக் குடும்பங்களால் மேற் கொள்ளப்பட்ட மேட்டுநிலப் பயிர்ச் செய்கைகள் மற்றும் வீட்டுத் தோட்டங்கள் பாதிப்படைந்த நிலையில் காணப்படுவதாக விவ சாயிகள் கவலை தெரிவிக்கின் றனர்.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ திணைக்களத் தின் இறுதி அறிக்கையின் படி இவ்வரட்சி காரணமாக மன் னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளி லுமுள்ள 104 கிராம உத்தியோ கத்தர் பிரிவுகளில் 18 ஆயிரத்து 704 குடும்பங்களைச் சேர்ந்த 63115 நபர்கள் நேரடியாகப் பதிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் 13 ஆயிரத்து 416 குடும்பங்க ளைச் சேர்ந்த 46 ஆயிரத்து 632 நபர்களுக்கு மன்னார் அனர்த்த முகாமைத்துவ நிவாரண சேவை மூன்று லொறி பௌசர களிலும் ஐந்து ட்ரக்ரர் பௌசர்க ளிலும் நாளாந்தம் 7 ஆயிரத்து 101லீற்றர் குடிநீர் வழங்கி வருவ தாக மன்னார் அனர்த்த முகா மைத்துவ நிலையம் தெரிவிக் கின்றது.

இவற்றில் மடு, முசலி பிரதேச செயலகப் பிரிவுகளே குடிநீர் பிரச்சினைகளுக்கு அதிகமாக முகம்கொடுத்து வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. மடு பிரதேச செயலகப் பிரிவில் 4099 குடும்பங்களும் முசலிப் பிரதேசத்தில் 3723 குடும்பங்க ளும் குடிநீர்ப் பிரச்சினைகளுக்கு அதிகமாக முகம்கொடுத்து வரு வதாகவும் மேலும் தெரிவிக் கப்படுகின்றது.

இக் குடிநீர் வழங்குவதற்காக 8 மில்லியன் ரூபா நிதி அரசிடம் கோரியிருக்கின்ற போதும் இது வரை இரண்டு மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன் ஏனைய நிதிகள் விரைவில் விடுவிக்கப் படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (9-285)

# கிளி- பரந்தன் பேருந்து நிலையம் விரைவில் திறப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி-பரந்தன் நக ருக்கான பேருந்து நிலையத்தை விரைவில் திறந்து வைக்க நடவ டிக்கை எடுக்கப்படுவதாக கரைச் சிப்பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித் துள்ளார்.

கிளிநொச்சியின் உப நகரங் களில் ஒன்றாகக் காணப்படு கின்ற பரந்தன் நகரம் போக் குவரத்து இணைப்பு மையமாகக் காணப்படுகின்றது.

அதாவது, மன்னார், திரு கோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களை ஒன்றிணைக் கின்ற ஓர் இடமாகக் காணப்படு வதுடன், நாளாந்தம் சுமார் ஆயிரக்கணக்கானோர் இப் பிர தேசத்திற்கு வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் பரந்தன் நகரத்தில் பேருந்து நிலையம் இல்லாத காரணத்தினால் பய ணிகள் பல்வேறு அசௌகரிய ங்களை எதிர்நோக்கி வருகின் றனர்.

இப்பிரதேசத்தில் பேருந்து நிலையம் ஒன்றினை அமைக்கு மாறு பிரதேச வர்த்தகர்களும் பொதுமக்களும் தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கைக்கு அமை வாக தற்போது பேருந்து நிலை யம் அமைக்கப்பட்டு இன்று வரை திறந்து வைக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இதனை விரைவாக திறந்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வர்த்தகர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கரைச்சிப்பிரதேச சபையின் தவிசாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, பரந்தன் பகுதிக் கான பேருந்து நிலையம் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 5.5 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட் டுள்ளது.

அத்துடன், இதன் உள்ளக வீதியை அமைப்பதற்கு சபை நிதியில் இருந்து இரண்டு மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய் யப்பட்டு உள்ளக வீதி அமை க்கும் பணி தற்போது முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

பேருந்து நிலையத்தின் இருக் கைகளை அமைப்பதற்கு மேலும் ஒரு மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான வேலை களும் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

இந்த வேலைகள் பூர்த்தியா னதும் மிக விரைவாக திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப் படும் என அவர் மேலும் தெரி வித்தார். (9-315)

# திருக்குறள் பெருவிழா

(குருமன்காடு)

வவுனியாவில் திருக்குறள் பெருவிழா நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

உலகப் பொதுமறையான திருக்குறளை அனைவரும் உணரும் வகையில் ஜனாதி பதியின் எண்ணக்கருவில் ஆளு நரின் வழிகாட்டலுடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணை க்களத்தினால் திருக்குறள் வார மானது நாளை தொடக்கம் 30 ஆம் திகதி வரையில் அனுஷ் டிக்கப்படவுள்ளது.

அதற்கமைவாக, வவுனியா வில் திருக்குறள் பெருவிழா நாளை முற்பகல் 10 மணிக்கு வவுனியா பிரதேச குடியிருப்பு கலாசார மண்டபத்தில் நடத்து வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. (9-250)




# முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் கட்டாக்காலி நாய்கள் அதிகரிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு நகரத்தில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித் துக் காணப்படுவதனால் நாய்க் கடிக்கு இலக்காவோரின் எண் ணிக்கை அதிகரித்துக் காணப் படுவதுடன், அடிக்கடி விபத்து க்களும் ஏற்படுகின்றன.

முல்லைத்தீவு நகரம், முல் லைத்தீவு பேருந்து நிலையம் மற்றும் நகரத்தின் பல்வேறு பகுதிகளில் கட்டாக்காலி நாய் களின் தொல்லை அதிகளவில் காணப்படுகின்றன.

குறிப்பாக, இந்தப்பிரதேசத் தில் 25-35 இற்கும் மேற்பட்ட நாய்கள் கூட்டம் கூட்டமாக வீதிக ளில் நடமாடுவதனால் போக்கு வரத்தில் ஈடுபடுவோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளும் அதேநேரம் இந்த கட்டாக்காலி நாய்களால் அடிக்கடி விபத்துக்க ளும் ஏற்படுகின்றன.

இதேவேளை நகரப்பகுதியில் அதிகரித்துக்காணப்படும் நாய்க ளினால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதுடன் பெருமளவா னோர் நாய்க்கடிக்கு இலக்கா கியும் வருகின்றனர்.

முல்லைத்தீவு நகரத்தில் உள்ள படைமுகாம்கள், பொலிஸ் நிலையம் போன்ற பகுதிகளில் இந்தக் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப் படுவதாக பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (9-315)

# அம்பலப் பெருமாள் குளத்தின் வான்பகுதியை மழைக்கு முன்னர்

## புனரமைக்குமாறு விவசாயிகள் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெரு மாள்குளத்தின் வான்பகுதியை வரும் மழை காலத்திற்கு முன் னர் புனரமைப்புச் செய்யுமாறு கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாத பெரும் மழையின் போது குளத் தின் நீர் மட்டம் உயர்ந்ததால் குளத்தின் வான் பகுதி சேத மடைந்து இருந்ததன் காரண மாக வான்பகுதி உடைப்பெடு க்கக் கூடிய அபாய நிலை காணப் பட்டது.

இந் நிலையில் ஒன்றுகூடிய விவசாயிகள் ஏழு பெட்டி உழவு இயந்திரம் மூலம் கற்களை வான்பகுதியில் குவித்து மண் மூடைகள் அடுக்கியும் குளத்தின் வான்பகுதியினைப் பாதுகாத்த னர்.

பின்பு இக்குளத்தின் வான் பகுதியினைப் பார்வையிட்ட நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர்கள் வான் பகுதி யைப் புனரமைப்பதற்கு 120 மில்லியனுக்கு மேலான நிதி தேவைப்படுவதாக தெரிவித்த னர்.

குளத்தின் வான் பகுதி சேத மடைவதற்கான பிரதான கார ணம் துணுக்காயில் இருந்து அக்கராயன் வழியாக நடை பெறுகின்ற போக்குவரத்து இவ் வான் பகுதி வழியாகவே நடை பெறுவதன் காரணமாக சுமை களுடன் செல்கின்ற பாரவூர்தி களினால் குறித்த வான் பகுதி தொடர்ந்து சேதமடைவதாக விவ சாயிகள் தெரிவிப்பதுடன் வரும் மழைக்கு முன் குறித்த வான் பகுதி உடைப்பெடுப்பதற்கு முன் னர் வான்பகுதியைப் புனரமைப் பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரி க்கை விடுத்துள்ளனர். (9-350)

# பாரதம்

## காஷ்மீரில் முஸ்லிம்கள் மீதான அடக்குமுறையைத் தடுக்க வேண்டும்

### இந்தியாவிடம் ஈரான் தலைவர் வலியுறுத்து

(டெஹ்ரான்)

காஷ்மீர் விவகாரத்தில் அங்குள்ள முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்படும் அடக்குமுறையை இந்தியா தடுக்க வேண்டும் என ஈரான் தலைவர் அயத்துல்லா அலி காமெனி தெரிவித்தார்.

காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து இரத்துச் செய்யப்பட்டு, அந்த மாநிலம் 2 யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது. அதன்படி லடாக்-ஜம்மு காஷ்மீர் என இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டது.

மத்திய அரசின் இந் நடவடிக்கைக்கு பாகிஸ்தான், சீனா கண்டனம் தெரிவித்திருந்தது. இதில் பாகிஸ்தான், இந்தியாவுடன் தூதரக உறவைத் துண்டிப்பதாகவும் இருநாட்டு வர்த்தகத்தை தடை செய்வதாகவும் கூறியிருந்தது.


மேலும் சர்வதேச அளவில் ஐ.நாவில் பாகிஸ்தான் கொண்டு வந்த இந்த காஷ்மீர் விவகாரம் தோல்வியைத் தழுவியது. இந் நிலையில் காஷ்மீர் நிலவரம் குறித்து ஈரான் தலைவர் அயத்துல்லா அலி காமெனி தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டதாவது,

தற்போது காஷ்மீரில் வசிக்கும் முஸ்லிம்களின் நிலை குறித்து கருத்திற் கொண்டுள்ளோம்.

இந்தியாவுடன் நல்ல நட்பு ஈரானுக்கு இருக்கிறது. இருப்பினும் இந்திய அரசு காஷ்மீரில் வசிக்கும் மக்களுக்காக சிந்திக்க வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு சிறந்த கொள்கையைப் பின்பற்றி இங்கு முஸ்லிம்கள் மீதான அடக்குமுறை மற்றும் கொடுமையினைத் தடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். (ஐ-2)

## முன்னாள் நிதியமைச்சர் சிதம்பரம் சி.பி.ஐ.அதிகாரிகளால் கைது



(டில்லி)

நிதியமைச்சராக பணியாற்றியவேளை ஐ.என்.எக்ஸ். ஊடக நிறுவனத்திற்கு முறைகேடாக அனுமதி வழங்கிய குற்றச்சாட்டின் கீழ் சி.பி.ஐ. அதிகாரிகளால் முன்னாள் நிதியமைச்சர் சிதம்பரம் கைது செய்யப்பட்டார்.

ஐ.என்.எக்ஸ்.ஊடக முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ப.சிதம்பரத்திடம் சி.பி.ஐ. விசாரணையை ஆரம்பித்தனர்.

ஐ.என்.எக்ஸ். ஊடக முறைகேடு வழக்கில் முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் முன் பிணை மனுவை டில்லி உயர்நீதிமன்றம் கடந்த புதன்கிழமை தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியது. இதைத்தொடர்ந்து, சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கப்பிரிவு அதிகாரிகள் ப.சிதம்பரத்தை கைது செய்வதற்காக டில்லி ஜோர்பாக் பகுதியில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்றனர். ஆனால் அவர் அங்கு இருக்கவில்லை.

இந்நிலையில், தேடப்படும் நபர் என்ற வகையில் ப.சிதம்பரத்துக்கு எதிராக சி.பி.ஐ. சார்பிலும், அமுலாக்கப்பிரிவு சார்பிலும் 'லுக் அவுட்' மனு நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையே, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ப.சிதம்பரம் சார்பில் உச்சநீதிமன்றில் மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு மீது உடனடியாக விசாரணை நடத்தப்படாததால் ப.சிதம்பரத்திற்கு மேலும் சிக்கல் ஏற்பட்டது. நேற்று முன்தினம் இரவே காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் பேட்டி அளித்து விட்டு வீட்டுக்குச் சென்ற ப.சிதம்பரத்தை சி.பி.ஐ. அதிகாரிகள் கைது செய்தனர். (ஐ-2)

## காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து இரத்தை கண்டித்து தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் போராட்டம்




(ஜம்மு)

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து இரத்துச் செய்யப்பட்ட விவகாரத்தைக் கண்டித்து தி.மு.க. உள்ளிட்ட 14 எதிர்க்கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் போராட்டமொன்று நேற்று வியாழக்கிழமை டில்லி ஜந்தர் மந்தரில் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தி.மு.க, காங்கிரஸ், பகுஜன் சமாஜ் வாடி, தேசிய மாநாட்டுக் கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது ஜம்மு -காஷ்மீர் மாநிலத்தில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள தலைவர்களை விடுதலை செய்யவேண்டும் என்றும், கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. (ஐ-2)

## இந்தோனேசிய பப்புவாவில்

## சிறையிலிருந்த 250 கை

(ஜகார்த்தா)

**இந்தோனேசிய அரசுக்கு எதிரான போரா பப்புவாவில் உள்ள சிறையை சூறையாடியதி தப்பியோடினர்.**

இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில் பப்புவா பிராந்தியம் அமைந்துள்ளது. முன்னர் டச்சு காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த இந்தப் பிராந்தியம் 1963 ஆம் ஆண்டு விடுதலை பெற்று தன்னை சுதந்திர நாடாக அறிவித்துக்கொண்டது. ஆனால் அயல் நாடாக இருந்த இந்தோனேசியா, எண்ணெய் மற்றும் தாதுக்கள் உள்ளிட்ட இயற்கை வளங்கள் மிகுந்த பப்புவா பிராந்தியத்தை தன்னோடு இணைத்துக்கொண்டது. அதேசமயம் பப்புவா பிராந்தியத்துக்கு இந்தோனேசிய அரசு தன்னாட்சி அதிகாரத்தை வழங்கியது.


எனினும் பப்புவா பிராந்தியம் இணைக்கப்பட்ட நாள் முதலே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தனிநாடு கோரி பிரிவினைவாத அமைப்புகள் போராடத் தொடங்கின. அதன்படி பல ஆண்டுகளாக பப்புவா பிராந்தியத்தில் இந்தோனேசிய அரசுக்கு எதிரான போராட்டங்கள் நடந்து வருகின்றன.

இதனால் பப்புவா மற்றும் மேற்கு பப்புவா மாகாணங்கள் பதற்றம் நிறைந்த பகுதிகளாகவே இருந்து வருகின்றன. மேலும் அங்கு மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்வதாக இந்தோனேசியா அரசு மீது குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. இந் நிலையில், கடந்த 17 ஆம் திகதி இந்தோனேசிய சுதந்திர தின கொண்டாட்டத்தின் போது மேற்கு பப்புவா மாகாணத்தில் அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் இந்தோனேசிய தேசியக் கொடியை அவமதித்ததால் இதில் தொடர்புடைய மாணவர்களை இந்தோனேசிய பொலிஸார் கைது செய்தமை பப்புவா மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதைத் தொடர்ந்தே, அரசுக்கு எதிராக பெரிய அள



வில்
ட்ட
உ
சூ
மீறி
கார
தன

## சோமாலிய இராணுவ முகா பயங்கரவாதிகள் 11 பே



(மொகடிஷு)

சோமாலியா நாட்டில் இராணுவ முகாமைக் கைப்பற்ற முயன்ற பயங்கரவாதிகள் 11 பேரை இராணுவ வீரர்கள் சுட்டுக் கொன்றனர்.

சோமாலியா நாட்டில் அல் கொய்தா பயங்கரவாத இயக்கத்தின் ஆதரவாளர்களாக இயங்கிவரும் அல் ஷபாப் பயங்கரவாதிகள் அவ்வப்போது

பெ
நட
யில்
இத

## ஒடிசாவில் போக்குவரத்து வசதி கர்ப்பிணிப்பெண்ணை சுமந்து செ

(ஒடிசா)

ஒடிசாவில் கர்ப்பிணிப் பெண்ணை சிகிச்சைக்காக கிராமவாசிகள் 12 கி.மீ. தூரம் கட்டிலில் சுமந்து சென்ற சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

ஒடிசா மாநிலம் காளஹண்டி மாவட்டத்திலுள்ளது நெஹலா கிராமம். இந்த கிராமத்தைச் சேர்ந்த கர்ப்பிணி ஒருவருக்கு நேற்று முன்தினம் பிரசவ வலி ஏற்பட்டுள்

எது
அ
மு
இல்

# வில் நீடிக்கும் பதற்ற நிலை

# கைதிகள் தப்பியோட்டம்

## போராட்டத்தின் போது போராட்டக்காரர்கள் ...ாடியதில் 250 இற்கும் மேற்பட்ட கைதிகள்




வில் போராட்டம் வெடித்தது.

இந் நிலையில், இந்தப் போராட்டத்தின்போது சோரோங் நகரில் உள்ள சிறையை போராட்டக்காரர்கள் சூறையாடினர். சிறைக் காவலர்களை மீறி உள்ளே நுழைந்த போராட்டக்காரர்கள் சிறைக் கட்டடத்துக்கு தீ வைத்தனர்.

மக்கள் போராட்டத்தினால் ஏற்கனவே பப்புவா பிராந்தியத்தில் பதற்றம் நீடித்து வரும் நிலையில், கொலை, கொள்ளை உள்ளிட்ட குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்ட 250 இற்கும் மேற்பட்ட கைதிகள் சிறையில் இருந்து தப்பியிருப்பது பொலிஸாருக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ-2)

# முகாமை கைப்பற்ற முயற்சி;

# பேர் சுட்டுப் படுகொலை



பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் அரச படைகள் ஈடுபட்டு வருகின்றன. இதனால் பயங்கரவாதிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே பயங்கர மோதல் சம்பவங்கள் அரங்கேறி வருகிறன.

இந்நிலையில், அந்நாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ஜோஹர் நகரின் ஷிம்பீரோ கிராமத்தில் உள்ள இராணுவ முகாமைக் குறிவைத்து பயங்கரவாதிகள் வெடிகுண்டுகளை வீசி திடீர்த் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதனால் இராணுவத்தினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடுமையான மோதல் நடந்தது. இந்த மோதல் சம்பவத்தின் இறுதியில் பயங்கரவாதிகள் 11 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் இந்தத் தாக்குதலில் 15 பேர் படுகாயம் அடைந்தனர். (ஐ-2)

# வசதியின்மையால்

# ...து சென்ற மக்கள்



ளது.

ஆனால் அந்தக் கிராமத்திற்கு அம்புலன்ஸ் வந்து சேர்வதற்கு முறையான வீதி வசதிகள் எதுவும் இல்லை.

அவர்கள் அம்புலன்ஸ் வசதியை பெற வேண்டுமெனில் தங்களது கிராமத்தில் இருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள கனிகுமா கிராம நகரை வந்தடைய வேண்டும்.

இதனால் அவரது உறவினர்கள், கர்ப்பிணியை கட்டிலில் படுக்க வைத்த படி தோளில் சுமந்து கொண்டு 12 கிலோ மீற்றர் தொலைவை கடந்து கனிகுமா கிராமத்தை அடைந்தனர். (ஐ-2)

# ஹவுதி கிளர்ச்சியாளர்களால் சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க ஆளில்லா விமானம்

(ஏடன்)

அமெரிக்க இராணுவத்துக்குச் சொந்தமான பன்முகப் பயன்பாடு கொண்ட 'எம்.கியூ.9' ரக ஆளில்லா விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

ஏமனில் ஜனாதிபதி மன்சூர் ஹாதி தலைமையிலான அரச படைக்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே பல ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

ஈரானின் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் ஏமனில் வான்தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

சவுதி அரேபியா தலைமையிலான இந்தக் கூட்டுப்படைக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது.

இந் நிலையில் அமெரிக்க இராணுவத்துக்கு சொந்தமான பன்முகப் பயன்பாடு கொண்ட 'எம்.கியூ.9' ரக ஆளில்லா விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (ஐ-2)

# ஆப்கானில் வான்வழித் தாக்குதல் 20 தலிபான்கள் உயிரிழப்பு

## 10 பேர் படுகாயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தகார் மாகாணத்தில் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் தலிபான் பயங்கரவாதிகள் 20 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் தகார் மாகாணத்தில் உள்ள எஷ்காமிஷ் மாவட்டத்தில் தலிபான் பயங்கரவாதிகளை குறிவைத்து இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு அவர்கள் மீது விமானப்படை மூலம் வான்வழித் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் தலிபான் இயக்கத்தைச் சேர்ந்த 20 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். மேலும் 10 பயங்கரவாதிகள் படுகாயம் அடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



ஆப்கானிஸ்தான் பிரதமர் அஷ்ரப்கானி ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் புகலிடங்கள் முற்றிலுமாக அழிக்கப்படும் எனக் கூறியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# தாய்வானுக்கு போர் விமானங்கள்; அமெரிக்காவிற்கு சீனா எச்சரிக்கை

(பீஜிங்)

தாய்வானுக்கு போர் விமானங்களை விற்பனை செய்யத் துணை நிற்கும் அமெரிக்க நிறுவனங்களுக்கு பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என சீனா எச்சரிக்கை விடுத்தது.

சீனா அருகே அமைந்துள்ள தாய்வான் ஒரு தீவு ஆகும். இத்தீவு ஒரு காலத்தில் சீனாவின் அங்கமாக இருந்து உள்நாட்டுப் பிரச்சினை காரணமாக தனி நாடாக மாறியது.

தாய்வானை தனி நாடாக இதுவரை ஏற்காத சீனா, இது தங்கள் நாட்டின் ஒரு பகுதி. அதை மீண்டும் இணைப்போம் என்று கூறி வருகிறது. ஆனால், அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் தாய்வானைத் தனி நாடாக ஏற்றுள்ளன. மேலும் அமெரிக்கா அந்த நாட்டுக்கு இராணுவ உதவிகளை செய்வதுடன் படைத்தளத்தையும் அமைத்துள்ளது.

இதற்கிடையில், தாய்வான் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தவும் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவும் அந்நாட்டு இராணுவத்துக்கு நவீன ரக போர் விமானங்களை விற்பனை செய்ய அமெரிக்கா முடிவு செய்தது. இதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்தது. (ஐ-2)

# கோத்தா சவால் இல்லையென பொய் கூறத் தேவையில்லை

## ஹர்ச டி சில்வா வெளிப்படை

(கொழும்பு)

**பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு சவால் என்பது மறைப்பதற்கில்லை. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்கப் பொருத்தமான ஒருவரைக் களமிறக்க வேண்டியது அவசியம். இதில் பொய் கூறத் தேவையில்லை என இராஜாங்க அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.**


இராஜாங்க அமைச்சர் சுஜீவ

சேனசிங்கவின் வீட்டில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கோத்தபாய ராஜபக்ஷவைத் தோற்கடிக்கக் கூடிய ஒருவர் குறித்தே நாம் கலந்துரையாடினோம். கோத்தபாய ராஜபக்ஷ ஐ.தே.கட்சிக்கு சவால் இல்லையென பொய் கூறத் தேவையில்லை.

அவருக்கு நாட்டில் வாக்குப் பலமொன்று உள்ளது. எனவே அவரை எதிர்கொள்ளத் தகுதியான ஒருவர் அவசியம் களமிறக்கப்படல் வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# இலங்கையின் இறைமையில் தலையிட அமெரிக்கத் தூதுவருக்கு எந்த அதிகாரமும் இல்லை



## விஜயதாஸ எதிர்வினை

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்பிலும் இறைமையிலும் தலையிட அமெரிக்கத் தூதுவருக்கு எந்த அதிகாரமுமில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் சவேந்திர சில்வா கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டிருந்தார்.

இதனைத்தொடர்ந்து சவேந்திர சில்வாவின் நியமனத்திற்கு பல்வேறு சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் கடும் கண்டனம் வெளியிட்டு வருகின்றன.

இந் நிலையில் இதுகுறித்து கருத்து வெளியிடும் போதே விஜயதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'இராணுவத் தளபதி நியமனத்தில் அமெரிக்கத் தூதுவரின் கருத்தைக் கண்டித்து ஜனாதிபதியும், பிரதமரும் உடனடியாக தமது நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்கு முன்வைக்க வேண்டும்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை தன்வசப்படுத்த சீனத் தூதுவர் எவ்வாறு எம் மீது அழுத்தம் பிரயோகித்து, எமது நாட்டை அடிபணிய வைத்தாரோ, அதே பாணியில் அமெரிக்காவும் எம்மை அடிபணிய வைக்க நினைக்கின்றது' என விஜயதாஸ மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# இரவு உணவுக்கு ஒன்று கூடுவதற்கெல்லாம் கட்சித் தலைவரைக் கேட்கத் தேவையில்லை

## இரகசிய சந்திப்புக் குறித்து பாலித பதில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் வேட்பாளர்கள் அதிகரித்திருப்பதே பிரச்சினைக்கு பிரதான காரணம் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவின் வீட்டில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு இடத்தில் ஒன்று கூடி உணவு பரிமாறிக் கொள்வதற்கு கட்சித் தலைவரின் அனுமதியைக் கோர வேண்டியதில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் நடத்திய கூட்டம், கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியுடனா நடைபெற்றது என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் பாலித மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



---

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தப்ப முடியுமா?

'அடி உதவுவது மாதிரி அண்ணன் தம்பி கூட உதவுவதில்லை' என்று ஒரு பழமொழி சொல்வதுண்டு. அதெல்லாம் அந்தக் காலத்திலே சரியா இருந்ததோ என்னமோ இந்தக் காலத்திலே அது சரியா வராது சேர். இந்தக் காலத்திலேயெல்லாம் அண்ணன் தம்பியும் உதவுவதில்லை. அடியும் உதவுவதில்லை.

ஒரு குற்றவாளியை விசாரிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த ஆள் அடிக்குப் பயந்துகொண்டு உண்மையைச் சொன்னால் பரவாயில்லை.

ஆனால் அப்படி எல்லோரும் சொல்லுறதில்லையே. அதனாலே தான் வேறு வகையான முயற்சியெல்லாம் செய்ய வேண்டியிருக்கு.

லண்டனிலே ஒரு லொறியை ஒரு கொள்ளைக்கும்பல் மிகவும் சாமர்த்தியமாகக் கடத்திக் கொண்டு யோய்விட்டதாம். கடத்திக் கொண்டு போற அளவுக்கு அந்த லொறியிலே என்ன இருந்ததென்றால் 3 இலட்சம் பவுண்ட் அதாவது சுமார் 96 இலட்சம் ரூபாய் பெறுமதியுள்ள சிகரெட்டுக்கள் அந்த லொறியிலே இருந்ததாம். அதனாலே கடத்திக்கொண்டு போய்விட்டார்கள்.

ரொம்ப தூரத்திற்கு லொறியை ஓட்டிக் கொண்டு போய் விட்டார்கள். "இனிமேல் பொலிஸாராலே நம்மை நிச்சயம் கண்டு பிடிக்க முடியாது" என்று உறுதியாக நம்பினார்கள்.

ஆனால் அந்த உறுதி உடைந்து போய்விட்டது. எங்கேயிருந்தோ திடீரென்று பொலிஸ் வந்து வளைத்து விட்டது சினிமாவிலே நடக்கிற மாதிரி.

ஆசாமிகள் மாட்டிக்கொண்டார்கள். இது எப்படி சாத்தியமாயிற்றுத் தெரியுமா? எல்லாம் கம்பியூட்டர் உபாயம் தான்.

அந்த லொறியிலே ஒரு சிறிய டிரான்ஸ்மீட்டர் இருந்ததாம். லொறியை கடத்திக் கொண்டு போனவர்களுக்கு இந்த விடயம் தெரியாது.

அந்த டிரான்ஸ்மீட்டர் தொடர்ந்து சிக்னல்களை வெளிப்படுத்திக் கொண்டே இருந்ததாம்.

லொறியிலே இதுமாதிரி ஒரு டிரான்ஸ்மீட்டரை பொருத்தி பயன்படுத்துகிற முறை இருக்கே, அதுக்கு Datatrack என்று பேரு சொல்லுகிறார்கள்.

இந்த முறையிலேயேதான் சிகரெட் லொறியை உடனடியாக கண்டுபிடித்து மீட்டிருக்கிறார்கள். இந்த முறையை வேறு எந்தெந்த வகையிலே உபயோகப்படுத்தாலாமென்றும் யோசித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது எப்படி என்றால்... வாக னங்களிலே ஒரு சிறிய கம்பியூட்டரைப் பொருத்த வேண்டியது.

அது நாடு பூராகவும் உள்ள டிரான்ஸ்மீற்றர்களிலேயிருந்து சிக்னல்களை வாங்கிக் கொண்டிருக்கும். வாகனத்திலே இருக்கிற கம்பியூட்டர் இந்த சிக்னல்களைப் பயன்படுத்தி ஒரு மப்லே லொறி அப்பப்போது இருக்கிற இடத்தை தொடர்ந்து குறிப்பிட்டுக் காட்டிக் கொண்டே இருக்கும்.

கேந்திர நிலையங்கள் இந்தத் தகவலை வைத்து வாகனம் எங்கேயிருக்கு என்று ஒரு சில விநாடிகளிலே சொல்லிவிடும். இந்த முறையிலே தான் லண்டனிலே கடத்திக்கொண்டு போன லொறியை சுலபமாக கண்டு பிடித்துவிட்டார்கள்.

இந்த கடத்தல் குற்றம் ஒவ்வொரு ஊரிலே ஒவ்வொரு விதமாக நடக்கும். அதை ஒவ்வொரு விதமாகக் கண்டு பிடிக்கிறதுக்கு முயற்சி செய்வார்கள். இடத்துக்கு இடம் அது வித்தியாசப்படும்.

நம்ம ஊரிலே சின்னச் சின்ன பொருட்களையெல்லாம் கடத்திக்கொண்டு போய்விடுகிறார்கள் சேர். வேறு ஒன்றும் வேண்டாம் ஒரு சின்ன அலுவலகம். அங்கே வாசலிலே அட்டென்டென்ஸ் ரிஜிஸ்டர் (வருகைப் பதிவேடு) ஒரு மேசை மேல் வைத்திருந்தார்கள்.

அலுவலகத்திற்கு வேலை பார்க்க வந்தவர்கள் எல்லாம் அதிலே கையெழுத்துப் போட்டுட்டு உள்ளே போக வேண்டும். கையெழுத்துப் போடுவதற்கு வசதியா அதுக்குப் பக்கத்திலே ஒரு பென்சில் வைத்திருந்தார்கள்.

கையெழுத்துப் போட்டவுடன் அந்த பென்சிலை திருப்பி இருந்த இடத்திலே வைத்திடுவதுதானே மரியாதை. அப்படி வைக்கிறதில்லை. புதிதா பென்சில் வைத்துப் பார்த்தார்கள். கட்டுப்படியாகவில்லை.எனக்குத் தெரிந்த ஒருத்தர் அந்த அலுவலகத்திற்கு அதிகாரியா வந்து சேர்ந்தார். என்னிடம் இந்த விடயத்தைச் சொன்னார்.

"எல்லாருக்கும் எது எதுக்கோ யோசனை சொல்கிறாயே இதுக்கு ஒரு யோசனை சொல்லேன்" என்றார். நான் மிகவும் தீவிரமாக யோசனை செய்து ஒரு ஐடியா கொடுத்தேன்.

"இனிமேல் பென்சிலை தனியா வைக்காதீர்கள். அதை ஒரு நூலிலே கட்டி அந்த ரிஜிஸ்டரோட சேர்த்துக் கட்டி விடுங்கள். ஒரு முனையிலே பென்சில், இன்னொரு முனையிலே ரிஜிஸ்டர். எப்படி என் ஐடியா?" என்றேன் பிரமாதம் என்றார்.

அதுமாதிரியே செய்து விட்டார். அதன் பிறகு சிறிது காலம் கழித்து அவரைப் பார்த்தேன். "எப்படி சேர் என் ஐடியா சரி வந்ததா? இப்பவும் பென்சிலை யாராவது கடத்துகிறார்களா?" என்று கேட்டேன்.

அவர் ஒரு மாதிரியாக என்னை நிமிர்ந்து பார்த்து இப்போதெல்லாம் பென்சிலை யாரும் கடத்திறதில்லை சேர். அதனுடைய ரிஜிஸ்டரையும் சேர்த்து கடத்திக் கொண்டு போயிட்டார்கள் சேர் என்றார். ஏங்க பென்சிலில் கூடவா "டிரான்ஸ்மீட்டரை" வைக்க முடியும்.

# 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல் உட்பட ஆறு முக்கிய வழக்குகள் தொடர்பான விசாரணை அறிக்கை சட்டமா அதிபரிடம்



(கொழும்பு)

**கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் மற்றும் வசீம் தாஜுடீன், லசந்த விக்கிரமதுங்க கொலை உட்பட ஆறு முக்கிய வழக்குகள் தொடர்பான விசாரணை அறிக்கை, பதில் பொலிஸ்மா அதிபரால் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது.**

இதனை பொலிஸ் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணை அறிக்கையை தயாரித்து இந்த மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு ஏற்கனவே அறிவித்திருந்தார்.

அதன் பிரகாரமே வசீம் தாஜுடீன் கொலை, லசந்த விக்கிரமதுங்க கொலை, கீத் நொயார் கடத்தல், 17 பணியாளர்கள் கொலை மற்றும் 11 தமிழ் இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமலாக்கப்பட்டமை ஆகிய சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு சட்டமா அதிபரால் கடந்த 15 ஆம் திகதி பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில் குறித்த 6 சம்பவங்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகள், பதில் பொலிஸ்மா அதிபரால் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டன. (இ-7)

# மஹரகம நகரசபை ஆட்சி அதிகாரம் மகிந்த அணியிடமிருந்து பறியோகும் நிலை

(கொழும்பு)

மஹரகம நகர சபையின் ஆட்சி அதிகாரம் மகிந்த ராஜபக்ஷ தரப்பிடமிருந்து பறிபோகும் நிலை ஏற்பட்டது. 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷ அணியின் பொதுஜன பெரமுனவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால், சைக்கிள் சின்னத்தில் சுயேட்சையாகப் போட்டியிட்ட அணிக்கு ஆதரவு அளித்தது. அந்த சுயேட்சைக்குழு வெற்றிபெற்று நகர சபை அதிகாரத்தைக் கைப்பற்றியது.

எனினும் குறித்த சுயேட்சைக் குழுவின் உறுப்பினர்கள் மஹரகம நகர சபை நிர்வாகத்துக்குட்பட்ட பகுதியையோ குறைந்த பட்சம் கொழும்பு மாவட்டத்தையோ சேர்ந்தவர்கள் இல்லை என்பதால் அவர்கள் உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்களின் பிரகாரம் நகர சபை உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நகர சபை உறுப்பினர்கள் ஆட்சேபனை மனுவொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் இடம்பெற்ற குறித்த வழக்கு தொடர்பான நீண்ட விசாரணையின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி நகரசபை உறுப்பினர்களின் ஆட்சேபனையை ஏற்றுக் கொள்வதாக நீதிபதி கிஹான் குலதுங்க தெரிவித்தார்.

இதன் காரணமாக அந்த நகர சபை உறுப்பினர்களின் பதவி பறிபோகும் நிலை ஏற்பட்டது. இதனால் மஹரகம நகர சபை ஆட்சி அதிகாரத்தை இழக்கும் நெருக்கடி மகிந்த அணிக்கு ஏற்பட்டது. (இ-7)

**நல்லூர் ஆலயச் சூழலில் இன்று**

# கந்தபுராண எழுச்சி விழாவில் படை எழுச்சி சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா - 2019" நிகழ்வின் 18 நாள் வைபவம் இன்று மாலை 6 மணியளவில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் வல்வெட்டித்துறைச் சிவன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர், இ.கர்ஜின் தலைமையில், கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பிரதி முதல்வர், செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி.அஞ்சலிதேவி சாந்தசீலன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறும்.

உடுவில பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மற்றும் சாவகச்சேரிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இத்தியடி இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஏ.அனுசாந்தனின் "படை எழுச்சி" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். சிறப்புச் சொற்பொழிவின போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டு சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோருக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.

உற்சவ காலப் 18 ஆம் நாள் நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக, பிரம்மஸ்ரீ சந்திரமௌலீசசர்மா (மலேசியா) வழங்கும் "இசைக் கச்சேரி" நிகழ்வும் இடம்பெறும். (இ-7)

# பஜனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில், இன்று 18 ஆம் நாள் உற்சவ தினத்தை முன்னிட்டு, நவாலி கதிர்காம முருகன் ஆலயக் குழுவினர் வழங்கும் பஜனை நிகழ்வு இடம் பெறும். (இ-7)

# இசையரங்கின் 18 ஆம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி இலங்கை இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 18 ஆம் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8.15 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம் பெறும்.

இன்று வீணை இசை, இசைக் கச்சேரி என இரு நிகழ்வுகள் இடம் பெறும். வீணை இசையில் வீணை - மீரா பேரின்பநாதன், மிருதங்கம்-ஞா.வசந், தபேலா-சதாவேல்மாறன் ஆகியோரும் இசைக்கச்சேரியில் பாட்டு-பரமேஸ்வரி கணேசன், வயலின் கா.குகபரன், மிருதங்கம்-ஞா.வசந், கெஞ்சிரா-எஸ்.சண்முகப்பிரியன் ஆகியோரும் பங்கேற்பர். (இ-2)




## மாவிளக்கு ஏற்றிடுவோம்

வள்ளி தந்த தினைமாவை வாய் ருசிக்க உண்டவனே
வானுயர்ந்த கோபுரம் சூழ் நல்லையிலே உறைபவனே
புள்ளி மயில் மீதேறி புவனம் வலம் வந்தவனே
பூமாலை சூட்டி பாமாலையும் புனைந்து
கள்ளமில்லா மனத்தோடு கார்த்திகைத் திருநாளில்
நெய் மணக்க மாவிளக்கு ஏற்றி வைத்தோம்
உள்ளம் மகிழவும் ஊரெல்லாம் வளம் பெறவும்
நல்லருள் புரிவாய் நல்லூர்க் கந்தனே

*ஏழாலை மு. இந்திராணி.*

## அருள்தா நல்லைக் கந்தா

நலம் காக்கும் நல்லைக் கந்தனுக்கு
இன்று கார்த்திகை திருநாளாம்
காலமெல்லாம் கலங்கும் பக்தர்களுக்கு
கவலைகள் தீர்க்கும் நன் நாளாம்
பச்சை மயிலேறி பவனிவரும் திருக்குமரா
பக்தர்கள் குறைகேள் பரமதயாளா
நமக்கென்று ஓர் தேசம் வேண்டும் முருகா
நாம் அதை பெற்றிட அருள்தா நல்லைக் கந்தா

*ஆனந்தன்*
*நல்லூர்.*

## கார்த்திகை குமரனை பணி மனமே

கார்த்திகைத் திங்கள் கார்த்திகை திருநாள் கந்தன்
மகிழ்வுறு அவதாரம்!
கதியென கதறிடும் அடியவர்க் கெல்லாம் - கந்தன்
அருள் பொழிவதும் இந் நாளே!
மங்கல நாத மந்திரம் ஒலிக்கும் - நல்லை
சண்முகன் புகழ் பாடி!
மாந்தர்களெல்லாம் கடலெனத் திரண்டு - கந்தன்
திருவடி பணிந்திடும் திருநாளே
கார்த்திகை தீபம் கவலையைப் போக்கும் என்றும்
கார்த்திகை குமரனைப் பணி மனமே!

*கலாபூஷணம். க.லோகேஸ்வரன்.*
*தொல்புரத்தூர்.*

## கார்த்திகை மைந்தனே வருக

நெற்றிக்கண்ணில் அவதரித்த கார்த்திகை மைந்தனே
நேர்த்தியாக கார்த்திகை மாதர்கள் வளர்த்தோனே
நேர்த்திகளை நிறைவேற்றும் நல்லூர் கந்தனே
நெஞ்சில் குடியிருந்து அருளும் குகனே

மாவிளக்கால் உன்னை ஆராதித்திடுவர் முருகா
மனக்குறை நீக்கிடும் கடவுளாய் சண்முகா
உன்னை தொழுதால் வெற்றியே வேலாயுதா
உன்னடி சரணடைந்தோம் அருளிடு கார்த்திகேயா

*இசந்தினி அரியாலை.*


## சந்தக் கவியில் நல்லைக் குமரன்!

சூரன் செயுங் கொடுமை களைச்
சொல்லி யழுந் தேவர்
பாரத் துயர் தனைப்போக் கிடப்
பரிந்தாய் களம் விரிந்தாய்
சூரத் தன மொழித்தாய் மயில்
சேவ லென விளித்தாய்
நேரந் தெரிந் தாள்வாய் பரம்
நல்லைக் கும ரோனே!

*கலாபூஷணம்,*
*சந்தக்கவிஞர். நவ. பாலகோபால்*

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## உயிர்வாழ நீர்



தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே என்பர் எம் முன்னோர். நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஔவைப் பாட்டியும் "வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும்" என முன்பே பாடி வைத்துள்ளார். புவியின் உயிர்களது ஜீவாதாரமாக தண்ணீரும் ஓரளவு முக்கியத்துவம் வாய்ந்தனவாக நீரின் வாயு மற்றும் திடவடிவங்களும் திகழ்கின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததே. பூமி சூரியக் குடும்பத்தில் மனிதன் வசிக்கத்தக்க மண்டலமாக அமைந்துள்ளது. ஒரு வேளை பூமியானது சூரியனுக்கு சிறிது அருகாமையிலோ (5% அல்லது 8 மில்லியன் கிலோமீற்றர்கள் தொலைவில்) அல்லது தொலைவிலோ இருக்கும் பட்சத்தில் நீரின் மூன்று வடிவங்களும் தற்போதிருப்பதுபோல் ஒருசேரக் காணப்படுவதற்கான வாய்ப்புகள் கடினம். அதாவது பூமியானது சூரியனுக்கு கிட்ட அல்லது தொலைவில் இருந்தால் நீர், பனிக்கட்டி, நீரின் நிரம்பலாவி ஆகிய மூன்னும் ஒரே நேரத்தில் பூமியில் இருப்ப தற்கான சாத்தியமில்லை.

புவியின் ஈர்ப்புச்சக்தி காரணமாக அதனைச் சுற்றி வளிமண்டலம் காணப்படுகின்றது. வளிமண்டலத்தின் நீராவியும் கரியமில வாயுவும் ($CO_2$) வெப்ப விடைத்தாங்கு பொருளாகத் திகழ்ந்து, பச்சைவீட்டு விளைவை ஏற்படுத்தி இயல்பை விட நிதானமான மேற்பரப்பு வெப்பநிலையை நிலவச் செய்கிறது. பைங்குடில் விளைவு அல்லது பசுமை இல்ல விளைவு அல்லது பசுமைக்குடில் விளைவு அல்லது பச்சைவீட்டு விளைவு (**Green house Effect**) என்பது, பூமியின் (அல்லது வேறு கோள்களின்) மேற்பரப்பில் உள்ள வெப்பக் கதிர்வீச்சானது, வளிமண்டலத்தில் இருக்கும் வளிமங்களினால் உறிஞ்சப்பட்டு, மீண்டும் வளிமண்டலத்தில் எல்லாத் திசைகளிலும் கதிர்வீச்சாக வெளிப்படும் தோற்றப்பாடு ஆகும்.

இரியனிலிருந்து வெளிப்படும் ஒளிக் கதிர்வீச்சானது, பூமியை அடையும் போது, வளிமண்டலத்தில் உள்ள வளிமமும் முகிலும் நிலத்தில் உள்ள மண்ணும் நீரும் ஒரு பகுதி ஒளிக்கதிர்களைத் தெறிப்படைய வைப்பதனால், அவை மீண்டும் வளிமண்டலத்தை விட்டு மீண்டும் விண்வெளிக்குள் சென்றுவிடும். இன்னொரு பகுதிக் கதிர்வீச்சை நிலப்பகுதி உறிஞ்சி, அதன் குறிப்பிட்ட பகுதியை மீண்டும் கண்ணுக்குப் புலப்படும் ஒளியை விடக் கூடிய அலைநீளம் கொண்ட அகச் சிவப்புக்கதிரான வெப்பக் கதிர்வீச்சாக வெளியேற்றும். அந்த அகச்சிவப்புக் கதிர்களில் ஒருபகுதி வளிமண்டலத்தினுள் வெளிவிடப்படுவதுடன், இன்னொரு பகுதி, வளிமண்டலத்தினூடாக விண்வெளியினுள் சென்றுவிடும். இதன்மூலம் வளிமண்டலத்தின் வெப்பநிலை சீராக வைத்துக்கொள்ளப்படும். ஆனால் வளிமண்டலத்தில் இருக்கும் பசுமைக்குடில் வளிமங்கள் அதிகரிக்கும்போது, வளிமண்டலத்தினூடாக வெளியேற எத்தனிக்கும் அகச்சிவப்புக் கதிர்கள் வெளியேறமுடியாமல் இவற்றினால் பிடிக்கப்பட்டு, வளிமண்டலத்தினுள்ளாகவே பல திசைகளிலும் வெளியேறும். இதனால் வளிமண்டலத்தின் வெப்பநிலை இருக்கவேண்டிய அளவை விட அதிகரிக்கும். இது பச்சைவீட்டு விளைவினால் பூமியின் வளிமண்டலத்திற்கு ஏற்படும் ஒரு பாதிப்பாகும்.

இயற்கையாக ஒரு சமநிலையில் இந்த வெப்பக்கதிர்வீச்சு நிகழும்போது, வளிமண்டலத்தின் வெப்பநிலை சீராக வைத்துக் கொள்ளப்படுவதுடன், உயிரினங்கள் உயிர்வாழ்வதற்கு ஏற்ற சூழலும் கிடைப்பதனால் இது இயற்கைப் பசுமை இல்ல விளைவு எனப்படும். ஆனால் மனிதர்களின் செயற்பாடுகளினால், வளிமண்டலத்தில் பசுமைக்குடில் வளிமங்கள் அதிகரிக்கும்போது, அவற்றின் விளைவாகப் பூமியின் வெப்பநிலை பாதகமான நிலையை நோக்கிச் செல்கின்றது. இதனாலேயே பூமியில் உள்ள உயிரினங்களுக்குப் பாதகமான புவி சூடாதல் நிகழ்கின்றது.


பச்சை இல்ல வாயுக்களாக காபனீரொட்சைட்டு, மெதேன், நைதரசு ஒக்சைட்டு, ஓசோன், குளோரோபுளோரோகாபன் மற்றும் அதிகளவிலான நீராவி போன்றவற்றைக் குறிப்பிடலாம். பூமியைச் சுற்றி வளிமண்டலம் இல்லாதிருப்பின் அதன் மேற்பரப்பு வெப்பநிலை தற்போது உள்ளதை விட பலமடங்கு அதிகமானதாக இருந்திருக்கும். பூமி ஒரு வேளை சிறியதாக இருந்திருக்குமானால், ஒரு மெல்லிய வளிமண்டலம் அமையப்பெற்று அதீத வெப்பத்திற்கு உள்ளாவதன் காரணமாக, துருவப் பனிப்பாறைகளைத்தவிர ஏனைய இடங்களில் நீரின் தேக்கத்தைத் தவிர்த்திருக்கும். (செவ்வாய் கிரகத்தைப் போல இருக்கும்)

உயிரானது தனது நித்திய சஞ்சாரத்துக்குத் தேவையான நிர்ணயங்களை தானே வகுத்துக் கொள்கிறது என முன்மொழியப்பட்டுள்ளது. மாறுபட்ட அளவுகளில் உள்வரும் சூரியக் கதிர் வீச்சுக்குப் பின்னும் புவியின் மேற்பரப்பு வெப்பநிலை ஒரே சீராக இருந்து வந்துள்ளவிதம், பச்சைவீட்டு விளைவு மற்றும் மேற்பரப்பு அல்லது வளிமண்டல ஒளிபிரதிபலிப்புகளின் கூட்டு விளைவுகளை உள்ளடக்கிய திறமையான புவிவெப்ப நிர்வாகச் செயற்பாட்டை உணர்த்துகிறது.

கோள்களில் இருக்கும் நீரின் வடிவம் (திண்மம், திரவம், வாயு) அதன் ஈர்ப்பு சக்தியால் தீர்மானிக்கப்படும் வளிமண்டல அழுத்தத்தைப் பொறுத்தே அமைகிறது. கோளானது போதுமான அளவு பெரியதாயிருக்கும் பட்சத்தில் அதன் புவியீர்ப்பு சக்தியால் நிர்ணயிக்கப்படும் அழுத்தமானது அதிக வெப்பங்களில் கூட அதன் நீர்திட நிலையிலிருக்கும்படி செய்கிறது.

### புவியில் நீர்

பூமியின் 71% மேற்பரப்பு நீரால் சூழப்பட்டுள்ளது.




சமுத்திரங்கள் புவிநீரில் 97.2% ஐ கொண்டிருக்கின்றன. புவியின் நன்னீர் அளவில் 90% ஐ அண்டார்டிக் உறை பனிப் படலம் கொண்டுள்ளது. குளிர்விக்கப்பட்ட வளிமண்டல நீர் மேகங்களாக உரு வெடுத்து புவியின் வெண்ணொளி பிரதிபலிப்புக்கு வழிகோலுகின்றன. அதாவது வான வெளியிலிருந்து பூமியை நோக்கும் போது அது வெண்மையாகக்காட்சியளிக்கும்.

நீரியல் (**Hydrology**) என்பது புவியனைத்திலும் உள்ளநீரின் போக்கு, பரவல் மற்றும் தரத்தைப் பற்றியது. **Hydrography** என்பது நீரின் விநியோகத்தைக் குறித்த கல்வியாகும். நிலத்தடி நீரின் பரவலையும் போக்கையும் குறித்த கல்வி **Hydrogeology** எனவும் உறைபனி ஆறுகளைக் குறித்த கல்வி **Glaciology** எனவும் உள்நாட்டு நீர்நிலைகளைக் குறித்த கல்வி **Limnology** எனவும் சமுத்திரங்களின் பரவலைக் குறித்த கல்வி **Oceanography** எனவும் பொதுவாக அழைக்கப்படுகிறது.

கிரகங்களின் பரப்பிலும் அவற்றின் மேற்பரப்புக்கு கீழும்,மேலும் காணப்படும் மொத்த நீர்த்தொகுதி **Hydrosphere** என்றழைக்கப்படுகிறது. பூமியின் உத்தேச மொத்த நீர்க் கொள்ளளவு (உலகதண்ணீர் விநியோகம்) 1,360,000,000km³ (326,000,000 மில்லியன்³) கனஅடிகள்.

இம் மொத்தக் கொள்ளளவில்,

- 1,320,000,000km³ (316,900,000 000 000 மில்லியன்³ கன அடிகள் அல்லது 97.2%) சமுத்திரங்களில் உள்ளது.
- 25,000,000km³ (6,000,000 மில்லியன்³ அல்லது 1.8%) உறைபனி ஆறுகளிலும் பனிப்பாறைகளிலும் மற்றும் பனிப் படலங்களிலும் உள்ளது.
- 13,000,000km³ (3,000,000 மில்லியன்³ அல்லது 0.9%) நிலத்தடி நீராகும்.
- 250,000km³ (60,000 மில்லியன்³ அல்லது 0.02%) ஏரிகள், உள்நாட்டு கடல்கள் மற்றும் நதிகளின் நன்னீராகக் காணப்படுகிறது.
- 13,000km³ (3,100 மில்லியன்³ அல்லது 0.001%) குறித்தகால வளிமண்டல நீராவியாகக் காணப்படுகிறது.

நிலத்தடி நீரும் நன்னீரும் மனிதர்களுக்கு உபயோகமுள்ள அல்லது உபயோக சாத்தியமுள்ள நீராதாரங்களாகும்.

தண்ணீரானது சமுத்திரங்கள், கடல்கள், ஏரிகள், நதிகள், நீரோட்டங்கள், கால்வாய்கள், குளங்கள், குட்டைகள் போன்ற நீர்நிலைகளில் காணப்படுகிறது. பூமியில் பெருமளவாகக் காணப்படும் நீர் கடல்நீர் ஆகும். வளிமண்டலத்தில் திண்ம, திரவ மற்றும் வாயு வடிவங்களில் நீர் காண்படுகிறது. நிலத்தடிநீர் கொள்படுகைகளாகவும் நீர் காணப்படுகிறது.

நிலத்தடி நீர் பாறைகளெங்கும் காணப்படுவதால், இந்நிலத்தடி நீரின் அழுத்தம் பிளவுப் பெயர்ச்சியடைதலின் மாதிரிகளை நிர்ணயிக்கிறது. பூமியின் மூடகத்தில் காணப்படும் நீரே எரிமலைகள் உருவாகக் காரணமான உருகு நிலையை ஏற்படுத்துகிறது. மூடகம் (**mantle**) என்பது புவிபோன்ற வானியல் பொருட்களின் ஒருபகுதியாகும். இது பொதுவாக அப்பொருட்களின் மையப் பகுதியைச் சுற்றி அவற்றின் மேல் ஓட்டுக்குக் கீழே அமைந்திருக்கும். புவியின் மூடகம் ஏறத்தாழ 2,900km தடிப்புள்ள பாறைகளாலான ஓடு ஆகும். இது பூமியின் கனவளவில் 70% ஐ உள்ளடக்குகின்றது. இது பெரும்பாலும் திண்மமானது,புவியின் இரும்புச் சேர்வைகளை அதிகம் கொண்ட மையப் பகுதியைச் சுற்றி அமைந்துள்ளது. இம் மூடகத்தின் குறைந்த ஆழத்தில் நடைபெற்ற உருகல் மற்றும் எரிமலைச் செயற்பாடுகளினால் புவிமேற்பரப்போடு ஒட்டி, உருகிய நிலையில் இருந்து பளிங்காக்கம் அடைந்த பொருட்கள் புவியோட்டை உருவாக்கியுள்ளன. இது ஒப்பீட்டளவில் மிகவும் மெல்லிய ஓடாகும். புவியின் மூடகம் உருகியபோது உருவான வளிமங்கள் (வாயுக்கள்), புவியின் வளிமண்டலத்தின் சேர்மானம், அதன் அளவு என்பவற்றில் பாரிய தாக்கத்தைக் கொண்டிருந்தன.

பூமியின் மேற்பரப்பில் நடக்கும் பௌதீக மற்றும் வேதியியற் பாறைச் சிதைவு நிகழ்வுகளில் நீர் முக்கிய பங்காற்றுகிறது. நீரும் அற்பமாயிருந்தாலும் முக்கியமான காரணியான பனிக் கட்டியும் பூமியின் மேற்பரப்பில் நடக்கும் மிகப் பெரிய அளவிலான படிவக் கடத்துமைக்கு முக்கிய பங்காற்றுகின்றன. கடத்தப்பட்டவண்டலின் படிதல் பல்வேறு வகையான படிவுப்பாறைகளைத் தோற்றுவித்து புவி வரலாற்றின் நிலவியல் பதிவேடுகளாகத் திகழ்கின்றன. (தொடரும்)

அ.குகன்,
யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 225

உலகநீர் தினம் 2019 (**World Water Day 2019**) இற்காக ஐக்கிய நாடுகள் சபையால் முன்மொழியப்பட்ட தொனிப்பொருள் (**Theme**) யாது?

**புதிர் 225 இற்கான விடைகளை 02.09.2019 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டியமுகவரி:**

அ.குகன்,
யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற்
கல்லூரி,
கோப்பாய்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 225

சரியான விடை:-..........................................

முழுப்பெயர்:-..........................................

முகவரி:-..........................................

தொ.பே. இல:-..........................................

கையொப்பம்:-..........................................

### மிகவும் பற்றாக்குறை நிலவுகின்றபோதும்

# வைத்தியர்களுக்கு எதிரான கெடுபிடிகளுக்கும்

# குற்றச்சாட்டுக்களுக்கும் குறைவில்லாத நிலை

## டக்ளஸ் எம்.பி.விசனம்



(கொழும்பு)

**வைத்தியர்களுக்கான பற்றாக்குறை என்பது மிகவும் அதிகமாகக் காணப்படும் நிலையில் இந்நாட்டில் வைத்தியர்களுக்கு எதிரான கெடுபிடிகளுக்கும் குற்றச்சாட்டுக்களுக்கும் குறைவில்லாத நிலையும் காணப்படுகின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை கீழான கட்டளைகள் தொடர்பிலான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் தொடர்பில் பல்வேறுபட்ட விமர்சனங்கள் ஊடகங்கள் வாயிலாக முன்வைக்கப்பட்டு வருகின்ற ஒரு சந்தர்ப்பத்தில், சுகாதார அமைச்சர் வடக்கு மாகாணத்திற்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் சுமார் 25 இற்கும் மேற்பட்ட வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கான பற்றாக்குறைகள் நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய விடயங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்ற நிலையில், பளை வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியான வைத்திய அதிகாரி சின்னையா சிவரூபன், பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் கடந்த ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்டார்.

வைத்தியர்களுக்கான பற்றாக்குறை என்பது நாடளாவிய ரீதியில் நிலவிவருகின்ற போதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் போன்ற தூரப் பகுதிகளில் - அங்கிருக்கின்ற கஷ்ட - அதிகஷ்ட பகுதிகளில் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை என்பது மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது.

நிலைமை இவ்வாறு இருக்கின்றபோது, இந்த நாட்டில் வைத்தியர்களுக்கு எதிரான கெடுபிடிகளுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் குறைவில்லாத நிலையும் காணப்படுகின்றது.

வைத்தியசாலைகளில் மருந்து வகைகள் பெருமளவில் குறையாக இருப்பதாகவும், வைத்தியக் கல்விக்கு ஆகக் குறைந்த தரத்தை அறிவிக்காமையாலும், வைத்தியர்களுக்கான நடவடிக்கைக் குறிப்பை மாற்றி அமைத்தமைக்காகவும், விஞ்ஞான பாடங்களில் உயர்தரம் கூட சித்தியடையாதவர்களுக்கு மருத்துவ நியமனங்களை வழங்குவதற்கு சட்டவிரோத முயற்சிகள் நடப்பதாகவும் குற்றம்சாட்டியே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பை வைத்தியர்கள் அறி வித்தனர்.

இதை எல்லாம் வைத்துப் பார்க்கின்றபோது, அரச மருத்துவத் துறையானது ஒரு பிரச்சினைக்குரிய துறையாகவே தொடர்ந்தும் வளர்த்தெடுக்கப்பட்டு வருவதாகவே எமது மக்கள் மத்தியில் ஒருவிதமான கருத்து ஏற்பட்டிருப்பதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

மேலும் அரச வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்குக் குறைபாடுகள் உள்ளதாக சில வாரங்களாகவே ஒரு குற்றச்சாட்டு பல்வேறு தரப்பினரால் ஊடகங்களின் வாயிலாகக் கூறப்பட்டு வருகின்றது.

இத்தகைய தட்டுப்பாடானது வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுகின்றதா? அல்லது அது தொடர்பிலான கவனயீனமா? என்பது பற்றி உரிய தரப்பினர்கள் கண்டு கொள்ளாத நிலையும் இல்லாமல் இல்லை.

ஏற்கனவே சில மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டிருந்தன. பின்னர் மீண்டும் அவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. பின்னர் மீண்டும் 73 வகையிலான மருந்து வகைகளின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

என்றாலும் எமது மக்கள் மருந்துகளுக்கென்றே அதிகூடிய விலைகளையே கொடுக்க வேண்டிய நிலைமைகளில் இருக்கின்றனர். இதற்குக் காரணமாக தரம் குன்றியமருந்துகளுக்கானவிலைகளே குறைக்கப்படுகின்றன என்றும் தரமான மருந்துகளின் விலைகளில் குறைப்புகள் மேற்கொள்ள இயலாத நிலை இருப்பதாகவும் மருந்தகங்களிலிருந்து தெரிவிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இன்று இங்கே கிட்டத்தட்ட 60 வகையிலான மருந்துகளுக்கான உச்ச வரம்பு விலைகள் குறிப்பிடப்பட்ட இரண்டு கட்டளைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மருந்து வகைகள் இறக்குமதியானது வணிகத் துறையின் கரங்களில் இருக்கின்ற வரையில், அவற்றின் விலைகள் மற்றும் தரம் குறித்து நிச்சயமற்ற ஒரு தன்மையே நிலவுகின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

அண்மையில் கூட புற்று நோயாளர்களுக்கானது எனக் கூறப்படுகின்ற 'ஹெர்ரிகெற்' - **Herticad** - என்கின்ற வர்த்தகப் பெயர் கொண்ட மருந்து தொடர்பில் இந்த நாட்டில் ஒரு சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

ஏதேனுமொரு மருந்து ஒரு நாட்டில் தயாரிக்கப்படுகின்ற போது, அதற்கு 'கோப்' **(COPP)** அதாவது - **Certificate of Pharmaceutical Product** சான்றிதழ் பெறப்பட வேண்டும் என்பதுடன், இந்த சான்றிதழானது அநேகமான நாடுகளில் சுகாதார அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் மூலமாகவே வழங்கப்படுகின்றது என்கின்ற நிலையில், மேற்கூறப்பட்ட 'ஹெர்ரி கெற்' - **Herticad** - என்ற பெயரிலான மருந்துக்கான சான்றிதழ் ரஷ்ய நாட்டின் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு வழங்கியிருந்ததாகவும் தெரிய வந்திருந்தது.

தொழில்நுட்பக் குழுக்கள் பலவும் இந்த மருந்து தகுதியற்றது எனத் தெரிவித்திருந்தும், அந்த எதிர்ப்புகளைக் கணக்கில் எடுக்காது மேற்படி பெயர் கொண்ட மருந்து இறக்குமதிக்கான டென்ரர் வழங்கப்பட்டிருந்ததாகவும், இந்த மருந்தினை இந்தப் பெயரில் தாங்கள் கோருவதில்லை எனப் புற்றுநோய் வைத்தியர்களது சங்கத்தின் தலைவரும் தெரிவித்திருந்தார்.

இத்தகைய நிலைமைகள் குறித்துப் பார்க்கின்றபோது, மருந்துகள் தொடர்பில் பல்வேறு சந்தேகங்களை எமது மக்கள் கொண்டிருக்கின்றனர் என்றே கூற வேண்டியிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## இனவாதிகளுக்கு இடமளிக்காமல் எமக்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும்-இஷாக்

(கொழும்பு)

இனவாதிகளுக்கு இடமளிக்காமல் எமக்குத் தேவையான பொருட்களை நாங்களே உற்பத்தி செய்ய எமது தொழிற்சாலைகளை உறுதிப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் டொலரின் விலைக்கேற்ற வகையிலே நாங்களும் செயற்படவேண்டிவரும் என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் மருந்துகளின் விலைகுறைப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரே மருந்து வகைகளின் விலைகள் பாரியளவில் குறைக்கப்பட்டன. அப்போது யாரும் அதுதொடர்பில் பேசவில்லை. ஆனால் தற்போது டொலரின் விலையேற்றம் காரணமாக சில மருந்துகளின் விலை 14வீதம் வரை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

இது அரசாங்கத்தின் தவறால் இடம்பெற்றதொன்றல்ல. இவ்வாறான பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றால் மருந்துவகைகளை நாங்கள் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது நாட்டிலும் இன,மதவாதிகளுக்கு இடமளிக்காமல் நாட்டை முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக எமக்குத் தேவையான பொருட்களை நாங்களே உற்பத்திசெய்ய வேண்டும். இல்லாவிட்டால் தொடர்ந்தும் நாங்கள் டொலரின் விலை ஏற்றத்துக்கு ஏற்பவே செயற்பட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அதற்காக எதிர்காலத்தில் தகுதியான ஜனாதிபதி ஒருவரை நாங்கள் தெரிவுசெய்துகொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

### காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து நீக்கம் மூலம்

## மக்கள் தொகையை மாற்றியமைக்க இந்தியா ஒருதலைப்பட்சமான முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கலாநிதி ஷாஹித் அஹ்மத் ஹஷ்மட் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து இந்திய ஆக்கிரமிப்பு காஷ்மீரின் தற்போதைய நிலைமைகள் குறித்து விளக்கமளித்தார்.


இச்சந்திப்பின் போது ஜம்மு மற்றும் காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து நீக்கம் மற்றும் உறுப்புரை 370 மற்றும் 35 ஏ இரத்துச் செய்வதனூடாக மக்கள்தொகை அமைப்பை மாற்றியமைக்க மேற்கொண்ட சட்டவிரோத, ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தார்.

மேலும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டத்தால் காஷ்மீரில் மோசமடைந்துவரும் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நிலைமைகள் குறித்தும் ஜனாதிபதிக்கு அவர் விளக்கமளித்தார்.

இந்நடவடிக்கைகள் காஷ்மீர் மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்கள் மற்றும் சர்வதேச சட்டத்தை மீறுவதாக அமைந்துள்ளது என உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் சார்க் அமைப்பை மீளச் செயற்படுத்துவதற்கான இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு இலங்கை மத்தியஸ்தம் மற்றும் ஆதரவை வழங்குவதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செப்டெம்பர் முதல் வாரத்தில் பலமான கூட்டணி உருவாக்கம்



## மகிந்தவின் பங்காளி திஸ்ஸ தகவல்

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளின் கொள்கைகளை உள்ளடக்கி ஒருமித்த கட்சி யாப்பு உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் பலமான கூட்டணி உருவாக்கப்படும் எனவும் அனைத்துக் கட்சிகளின் உள்ளக கொள்கைகளை முன்னிலைப்படுத்தியே கட்சி யாப்பு தோற்றம் பெறும் எனவும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு விஜயராம மாவத்தையில் உள்ள எதிர்க் கட்சித் தலைவரின் இல்லத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பு தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவில் அங்கத்துவம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டம் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோதபாய ராஜபக்ஷவின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

அனைத்துக் கட்சிகளின் பரிந்துரைகளுக்கு அமையவே முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவால் அறிவிக்கப்பட்டார். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வியூகங்களை வகுப்பதே தற்போதைய தேவையாக அமைந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் குறித்த கூட்டணியை பலமாகக் கட்டியெழுப்புவது தொடர்பில் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட கட்சிகளின் பரிந்துரைகளும் புதிய கட்சி யாப்பு உருவாக்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டன. ஒரு சில விடயங்களுக்கு மாத்திரமே இதுவரையில் தீர்வு எட்டப்படவில்லை. அவற்றிற்கு தீர்வு பெறுவது தொடர்பில் தொடர் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு கட்சிகளினதும் உள்ளக கொள்கைகளை முன்னிலைப்படுத்தியே அனைத்துத் தரப்பினரும் திருப்தியடையும் வகையில் கூட்டணிக்கான யாப்பு உருவாக்கப்பட்டதை தொடர்ந்து செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் கூட்டணி அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பெண் காதி நீதிபதிகளை நியமிக்க சன்மார்க்க அறிஞர்கள் எதிர்ப்பு

## அமைச்சர் ஹலீம் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் பெண்களின் திருமணம் செய்யும் வயதெல்லை 18 ஆக தீர்மானிக்கப்பட்ட போதிலும், குறைந்த வயதுடைய முஸ்லிம் பெண்களுக்கு திருமணம் செய்து வைக்க யாராவது நடவடிக்கை எடுத்தால் காதி நீதிபதியின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என சட்டம் திருத்தி அமைக்கப்பட்டதாக முஸ்லிம் சமய விவகார அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்தார்.

முஸ்லிம் விவாகச் சட்ட திருத்தம் குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம் பெண் காதி நீதிபதிகளை நியமிப்பது குறித்து சன்மார்க்க அறிஞர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.



இதனால், இந்தத் தீர்மானம் தற்போதைக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் முயற்சித்தோம். இருப்பினும் அது கைகூடவில்லையெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் முஸ்லிம் பெண்களைத் திருமணம் முடித்து வைக்கும் போது அப்பெண்களின் அனுமதி பெறப்படவில்லை. இந்த புதிய திருத்தத்தில் அப்பெண்ணின் அனுமதியைப் பெறுவது அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.


திருமணத்தின் போது மணமகளிடம் அனுமதியைப் பெற்றுக் கொள்வது கட்டாயமானது என இஸ்லாம் குறிப்பிடுகின்றது. கன்னிப் பெண்ணாக இருந்தாலும் விதவைப் பெண்ணாக இருந்தாலும் அவளிடம் அனுமதியைப் பெற வேண்டும் என்பது இஸ்லாத்தின் கண்டிப்பான உத்தரவாகும்.

கன்னிப் பெண்ணின் அனுமதி எவ்வாறு அமையும் என நபியவர்களிடம் வினவப்பட்ட போது, "அவள் மௌனமாக இருப்பது அவளது அனுமதியைக் காட்டும் எனப் பதிலளித்துள்ளதாக புகாரி ஹதீஸ் நூலில் நபிமொழியொன்று பதிவாகியுள்ளது. இந்த நடைமுறை நபியவர்கள் காலம் முதல் இன்று வரை சமூகத்தில் இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1810


### முஸ்தபா

வேப்பமரக்கிளை முதல் வேர் வரை நெய்யும் பாலும் ஊற்றி வளர்த்தாலும் அதன் கசப்புத்தன்மை மாறாது. அது போல் கெட்ட மனிதர்களுக்கு எத்தனை விதமாக உரைத்தாலும் அறிவு வராது



### ரவி

அதிகம் படிக்கவில்லை எனக் கவலை கொள்ளாதே, நம் மரணம் வரை தினமும் பல பாடங்களை நம் வாழ்க்கை நமக்குக் கற்றுத் தரும்



### சுரேஷ்

அவர் சொன்னார் இவர் சொன்னார் என்பதெல்லாம் போதும் உன் மனம் சொல்வதென்ன சற்று நின்றே கேளும்



### அனிதா

உலகினை வெல்ல இரு கைகள் வேண்டும்... முகத்தில் புன்னகை அகத்தில் நம்பிக்கை



### மாறன்

முந்திக் கொண்ட முதல் செங்கல் கோவிலின் அடித்தளத்தில் நின்றுவிடும்! காத்திருந்த கடைசி செங்கல்தான் கலசம் தொடும்! சாதிக்க மிக மிக அவசியம் பொறுமை



### விஷ்ணு

அருகில் இருப்பதால் அன்பு அதிகரிப்பதும் இல்லை... தொலைவில் இருப்பதால் அன்பு குறைவதும் இல்லை!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நாடு கடத்தப்படவுள்ள இலங்கைத் தமிழ்க் குடும்பம்

## ஆஸி.அதிகாரிகள் மீள அனுமதி மறுப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கைத் தமிழ்க் குடும்பம் இலங்கைக்கு எவ்வேளையிலும் நாடு கடத்தப்படும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது.

நடேஸ்-பிரியா தம்பதியினரும் அவரது இரு பெண் குழந்தைகளுமே நாடு கடத்தப்படும் நிலையை எதிர்கொண்டனர்.

இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டால் ஆஸியில் பிறந்த அவர்களது இரண்டு வயது மகள் தருணிகாவிற்கு பாதிப்பு ஏற்படுமா என்பது குறித்து ஆராயுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அதிகாரிகள் ஆராய மறுத்துள்ள நிலையிலேயே தமிழ்க் குடும்பத்தினர் நாடு கடத்தப்படும் நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

நடேசலிங்கத்தின் இரண்டு வயது மகளின் சார்பில் அனுப்பப்பட்ட கடிதம் உரிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றாததன் காரணமாக குடிவரவுத் துறை அமைச்சர் டேவிட் கொலமன் அதனை ஆராயவில்லை என அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு வயதுக் குழந்தையின் புகலிடக்கோரிக்கையை கருத்திற் கொள்ளுமாறு கோரி தாங்கள் சமர்ப்பித்த வேண்டுகோளிற்கிணங்க இந்தப் பதில் கடிதத்தை அதிகாரிகள் அனுப்பியுள்ளனர் என நடேசலிங்கம் குடும்பத்தின் சட்டத்தரணி கரினா போர்ட் தெரிவித்தார்.



இரண்டு வயதுக் குழந்தை அவுஸ்திரேலியாவில் தொடர்ந்தும் தங்கியிருப்பதற்கான தற்காலிகப் பாதுகாப்பு விசாவை வழங்குமாறும் அல்லது புகலிடக்கோரிக்கையை பரிசீலிக்குமாறும் கோரியிருந்தோம் என அவர் தெரிவித்தார். எனினும் இந்தக் கடிதத்தை உரிய அதிகாரிகள் அமைச்சரிடம் சமர்ப்பிக்கவில்லை. அதற்கான காரணத்தை நாங்கள் கோரியுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

நடேசும் பிரியாவும் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவிற்கு வந்தவர்கள் என்பதால் அவர்களின் குழந்தை அவுஸ்திரேலியாவில் தொடர்ந்தும் தங்கியிருப்பதற்கான தடையை அமைச்சரால் மாத்திரமே நீக்க முடியும் எனத் தெரிவித்துள்ள சட்டத்தரணி குறிப்பிட்ட குழந்தை அவுஸ்திரேலியாவில் பிறந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

நடேசலிங்கம் முன்னர் விடுதலைப்புலிகளுடன் தொடர்புவைத்திருந்தவர் என்பதால் அவர் இலங்கைக்குத் திரும்பினால் சித்திரவதைகளிற்கு உள்ளாவார் என அவரது குடும்பத்தினர் அச்சம் வெளியிட்டனர்.

நடேஸ்-பிரியா தம்பதியினரின் புகலிடக்கோரிக்கையை ஏற்கனவே நிராகரித்துள்ள அவுஸ்திரேலிய அதிகாரிகள் அவர்களை கடந்த 17 மாதங்களாக குழந்தைகளுடன் மெல்பேர்னின் தடுப்பு முகாமில் தடுத்து வைத்தனர். (ஐ)

# அவன் கார்ட் ஆயுதக்கப்பல் வழக்கை விசாரிக்க 3 நீதிபதிகளை நியமிக்குக

## தலைமை நீதிபதியிடம் சட்டமா அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

அவன் கார்ட் (மிதக்கும்) ஆயுதக் கப்பல் தொடர்பான வழக்கை விசாரிக்க மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வை அமைக்குமாறு சட்டமா அதிபர், தலைமை நீதிபதி ஜெயந்த ஜெயசூரியவிடம் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து நேற்று முன்தினம் புதன்கிழமை சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா கடிதம் ஒன்றை எழுதினார். அதில் இந்த வழக்கில் தொடர்புடைய சந்தேக நபர்கள் துப்பாக்கிக் கட்டளைச் சட்டம், வெடிபொருள் கட்டளைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தை மீறியதாக சுட்டிக்காட்டினார்.

அத்தோடு 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் 6 ஆம் திகதி கடற்படைக்குச் சொந்தமான கப்பலில் இருந்து 816 தானியங்கி துப்பாக்கிகள் மற்றும் 2 இலட்சத்து 2,935 தோட்டாக்களும் மீட்கப்பட்டதாக சட்டமா அதிபர் தெரிவித்தார்.

அவன் கார்ட் மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி காரணமாக அரசாங்கத்திற்கு 1,140 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டதாக தெரிவித்து கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கோத்தபாயவை விட எனக்கு தகுதியுள்ளது

## ஹேசா விதானகே தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்துள்ள கோத்தபாய ராஜபக்ஷவை விட தனக்கு தகுதிகள் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். நாடு கோருவது அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நபரை அல்ல. நான் படிப்படியாக அரசியலில் ஈடுபட்டு நாடாளுமன்றத்திற்கு வந்தவன். இதனால், எனக்கு இருக்கும் தகுதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கு இல்லை.

வெள்ளை வான் கலாசாரம், ஊடகவியலாளர்களை கொலை செய்தவர்கள் மீண்டும் அதனை செய்ய மாட்டார்கள் என்று கூற முடியாது. இராணுவ அதிகாரியான கோத்தபாய ராஜபக்ஷவை விட தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக சரத் பொன்சேகாவுக்கு அனுபவம் உள்ளது எனவும் ஹேசா விதானகே மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## 21 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தங்க ஆபரணங்களை சட்ட விரோதமாக கொழும்புக்குக் கொண்டு செல்ல முற்பட்ட நபர் சுங்க அதிகாரிகளால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் கொழும்பில் வசிப்பவர் எனவும் குறித்த சந்தேக நபரிடமிருந்து 21 மில்லியன் ரூபாய் பெறுமதியான 369 கிராம் தங்க ஆபரணங்கள் மீட்கப்பட்டதாக விமான நிலையத்தின் சுங்க திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதில், 21 மோதிரங்களும் 21 வளையல்களும் 21 காதணிகளும் 21 பென்ரன்களும் காணப்பட்டதாக அத் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

இந்தியாவில் இருந்து வந்த பயணி ஒருவர் குறித்த நகைகளை கொழும்புக்கு கொண்டு செல்லுமாறு தன்னிடம் ஒப்படைத்ததாக சந்தேக நபர் தெரிவித்தார். (இ-7)

## காட்டு யானையின் தாக்குதலால் ஆறு பிள்ளைகளின் தந்தை பலி

(கிண்ணியா)

திருகோணமலை - கிண்ணியா, உப்பாறு பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகிய ஆறு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு வீதியின் குறுக்கே வந்த காட்டுயானை குறித்த நபரை தாக்கியமையால் அவ்விடத்திலேயே அவர் உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்தது. கிண்ணியா - உப்பாறு, மயிலபெஞ்ஞானை பகுதியைச் சேர்ந்த 56 வயது முஹம்மது பஜீர்தீன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். (இ-7)

## மதுபோதையில் சாரத்தியம் 9 ஆயிரத்து 885 பேர் கைது

(கொழும்பு)

மது போதையில் வாகனம் செலுத்திய சாரதிகள் 9 ஆயிரத்து 885 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

நேற்று முன்தினம் காலை 6 மணிமுதல் நேற்றுக் காலை 6 மணிவரை முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பில் 193 பேர் மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் திட்டத்தின் கீழ் கடந்த ஒருவாரத்தில் 9 ஆயிரத்து 885 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 140 | 130 | 150 |
| தக்காளி | 150 | 150 | 130 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 180 | 140 | 120 | 120 |
| கோவா | 80 | 70 | 70 | 50 | 80 |
| கரட் | 80 | 80 | 130 | 80 | 120 |
| பூசணி | 60 | 50 | 40 | 40 | 60 |
| புடோல் | 50 | 70 | 60 | 50 | 100 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 110 | 140 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 | 120 | 140 |
| பாகற்காய் | 140 | 120 | 130 | 130 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 90 | 60 | 120 |
| பயற்றங்காய் | 80 | 60 | 40 | 50 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 80 | 70 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 150 | 120 | 130 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 80 | 50 | 80 |
| போஞ்சி | 140 | 100 | 220 | 80 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 60 | 50 | 60 |
| கீரை-1பிடி | 30 | 25 | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 200 | 250 | 150 | 240 |
| வெங்காயப்பூ | 140 | 150 | 140 | 120 | 200 |
| முள்ளங்கி | 60 | 60 | 60 | 40 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | 50 | 120 | 60 |

# சிறுவர் அரங்கம்

## பிழைத்துப்போ



அக்பர் சக்கரவர்த்திக்கு வெற்றிலை போடும் பழக்கம் இருந்தது. அதிலும் குறிப்பாக, சௌகத் அலி தயாரிக்கும் பீடா அவருக்கு மிகவும் பிடிக்கும். அவன் தயாரிக்கும் பீடா மிகப் பிரமாதமாக இருப்பதாக அக்பர் அடிக்கடி அவனிடமே புகழ்ந்து பேசுவதுண்டு! அந்த சமயங்களில் சௌகத் அலி அக்பருக்கு சலாம் செய்துவிட்டு, "பீடா தயாரிப்பது எனக்கு கை வந்த கலை! என்னுடைய எட்டாவது வயது முதல் இந்தத் தொழிலை நான் செய்து கொண்டு இருக்கிறேன். சக்கரவர்த்தியான உங்களுக்கு நான் பீடா தயாரித்து கொடுப்பதை பெரும் பாக்கியமாக நினைக்கிறேன்" என்றான்.

அக்பர் அன்று முதல் தான் எங்கு சென்றாலும் தன்னுடன் சௌகத் அலியையும் உடன் அழைத்துச் செல்லத் தொடங்கினார். இவ்வாறு மூன்றாண்டுகள் கழிந்தன!

ஒருநாள் அலி பீடாவில் கை தவறி சிறிது அதிகமாக சுண்ணாம்பினைக் கலந்து விட்டான். அதைத் தின்ற அக்பரின் நாக்கு வெந்து விட்டது. உடனே பீடாவைத் துப்பியவாறே, "முட்டாள்! உன்னுடைய பீடாவைத் தின்று என் நாக்கு வெந்து விட்டது. பீடா தயாரிப்பதில் தலைசிறந்தவன் என்று ஓயாமல் பெருமையடித்துக் கொண்டாயே! இதுவா நீ தயாரிக்கும் லட்சணம்?" என்று சீறினார்.

அலி பயத்தினால் மிகவும் நடுங்க ஆரம்பித்து விட்டான். மிகக் கோபத்துடன் அவனை முறைத்துப்பார்த்தவாறே, "உடனே சென்று ஒரு பை நிறைய சுண்ணாம்பு கொண்டு வா!" என்று கட்டளையிட்டார். அலி கடைக்குப் போய் ஒரு பை நிறைய சுண்ணாம்பு வாங்கினான். அப்போது அங்கே வந்த மகேஷ்தாஸ் "அலி! என்ன விடயம்? எதற்கு இத்தனை சுண்ணாம்பு?" என்று கேட்டான்.

"இதை சக்கரவர்த்தி வாங்கி வரச் சொன்னார். ஏன் என்று எனக்குத் தெரியவில்லை!" என்றான் அலி.

"தெரியவில்லையா? எந்த சந்தர்ப்பத்தில் இதை வாங்கச் சொன்னார்?" என்று மகேஷ் கேட்க, அலியும் நடந்ததைக் கூறினான்.

சக்கரவர்த்தி எதற்காக ஒரு பை நிறைய சுண்ணாம்பு வாங்கச் சொன்னார் என்று மகேஷ்க்குப் புரிந்து விட்டது. உடனே அவன் அலியிடம், "வயிறு நிறைய நெய் குடித்து விட்டு சக்கரவர்த்தியிடம் செல்!" என்றான்.

"என்னப்பா! ஏற்கனவே நான் யானைக்குட்டி போல் பருமனாக இருக்கிறேன். இந்த லட்சணத்தில் நான் வயிறு நிறைய நெய் தின்றால் பூதம் போல் ஆகிவிடுவேன்!" என்றான் அலி!

"இன்று ஒருநாள் மட்டும் செய்" என்று சொல்லிவிட்டு மகேஷ் சென்று விட்டான்.

மகேஷ் சொன்னால் அதில் ஏதோ காரணம் இருக்கும் என்று நம்பிய அலி, வீட்டிற்குச் சென்று ஒரு செம்பு நிறைய நெய் எடுத்து வயிறு முட்ட குடித்த பிறகு அவன் அக்பரை நாடிப் போனான்.

சபையில் அமர்ந்திருந்த அக்பர் அலியைப் பார்த்து, "ஒரு பை சுண்ணாம்பு வாங்க இத்தனை நேரமா?" என்று கடிந்து கொண்ட பிறகு, ஒரு காவலனை நோக்கி "இவனை சபைக்கு வெளியே அழைத்துச் சென்று பையிலுள்ள சுண்ணாம்பு முழுவதையும் அவன் வாய்க்குள் போட்டு அடைத்து விடு!" என்றார். அப்போதுதான் அக்பர் தனக்குத் தந்த தண்டனையின் கொடூரம் அலிக்குப் புரிந்தது.

கதறக் கதற அலியை வெளியே இழுத்துப் போன காவலன், அலியின் பையிலிருந்து சுண்ணாம்பை எடுத்து அலியின் வாயில் போட்டு விழுங்கச் செய்தான். ஒரு கவளம் சுண்ணாம்பு தின்ற உடனேயே, வாய், தொண்டை, வயிறு வெந்து போக அலி சுருண்டு விழுந்தான். தண்டனைக்குள்ளான அலி என்ன ஆனான் என்று பார்க்க அங்கு வந்த அக்பர், அலி தரையில் விழுந்திருந்தும் சுயநினைவுடன் இருப்பதைப் பார்த்து, "நீ இன்னும் சாகவில்லையா?" என்று கேட்டார்.

"இல்லை, பிரபு!" என்ற அலி சிரமப்பட்டு எழுந்து நின்று, "வயிறு நிறைய நெய் சாப்பிட்டதாலோ என்னவோ, நான் உயிருடன் இருக்கிறேன்!" என்றான். "உன்னை யார் நெய் உண்ணச் சொன்னார்கள்?" என்று அக்பர் கேட்க, அலி மகேஷின் பெயரைக் கூறினான். உடனே மகேஷ் அங்கு அழைத்து வரப்பட்டான்.

அவனைப் பார்த்ததும், "பீர்ப்பால்! உன் வேலை தானா இது? அவனை ஏன் நெய் சாப்பிடச் சொன்னாய்?" என்று அக்பர் கேட்டார்.

"பிரபு! அலியிடம் நடந்தைக் கேட்ட பிறகு நீங்கள் அவனை சுண்ணாம்பை விழுங்க வைக்கப் போகிறீர்கள் என்று தெரிந்து கொண்டேன். நெய் தின்ற பிறகு சுண்ணாம்பை விழுங்கினால் உடலுக்குத் தீங்கு ஏற்படாது என்று எனக்குத் தெரியும்! அதனால்தான் அவ்வாறு அவனை செய்யச் சொன்னேன்" என்றான் பீர்ப்பால்.

"அவன் மீது உனக்கு என்ன அவ்வளவு அக்கறை?" என்று அக்பர் கேட்க, "அக்கறை அவன் மீதில்லை, உங்கள் மீது தான் பிரபு. அவன் தயாரிக்கும் பீடாவை நீங்கள் மிகவும் விரும்புகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஏதோ தெரியாமல் அவன் ஒருநாள் செய்த தவறுக்காக அத்தனை பெரிய தண்டனையை அவன் பெறப் போவதைத் தவிர்க்க விரும்பினேன். நீங்கள் அவன் செய்த சிறிய தவறை மன்னித்து விட வேண்டும். அக்பர் சக்கரவர்த்தி மிகவும் இரக்க குணம் படைத்தவர் என்பதை நிரூபிக்க இதை விட உங்களுக்கு வாய்ப்பு கிடைக்குமா?" என்று கேட்டான் பீர்ப்பால்.

அவனுடைய சாமர்த்தியமான பேச்சினால் கவரப்பட்ட அக்பர், "நீ சொல்வது சரிதான். மூன்று ஆண்டுகளாக அருமையாக பீடா தயாரித்தவன் ஒருநாள் தெரியாமல் செய்த தவறுக்காக தண்டனை பெறுவது சரியல்ல. அவனை நான் மன்னித்து விடுகிறேன்" என்றவர் அலியைப் பார்த்து, "பிழைத்துப் போ" என்றார்.

## பொது அறிவு வினா விடைகள்

- பூனைக் குடும்பத்தில் மிக அழகான இனம்?
  **பனிச் சிறுத்தை**
- புகைபிடித்தால் என்ன நோய் வரும்?
  **புற்றுநோய்**
- புகைக்கும் பொருட்கள் எதனால் செய்யப்படுகிறது?
  **புகையிலை**
- உலகில் உள்ள பறவைகளில் மிகப்பெரியது எது?
  **தீக்கோழி**
- வேலைக்காரத் தேனீக்களின் வேலை என்ன?
  **தேன் எடுத்தல்**

## சிந்தனைத்துளிகள்

- மரியாதை பெறும் ஒரே வழி அதனை முதலில் கொடுப்பதாகும்.
- திருப்தியும் பேரின்பமும் எம்முள் இருப்பின் நாம் மற்றவர்களால் விரும்பப்படுவோம்.
- எல்லா சந்தர்ப்பத்திலும் சமநிலையுடன் இருப்பதுதான் மகிழ்ச்சி.
- நிரந்தரமற்றதன் மீது அன்பு செலுத்துவது உன் தோல்வியின் முதல்படியாக அமையும்.
- பிடிவாதமும் கோபமும் உன் இயலாமையின் வெளிப்பாடாகும்.
- நிசப்தத்தை நாடுபவன் வாழ்வின் உண்மை நிலையை உணர்ந்துள்ளான்.
- வாழ்வின் அறநெறியை தேடுபவன் தன் வாழ்வின் அன்பு நெறியை உணர்ந்திருத்தல் அவசியம்.

சிக்கல்களை எதிர்கொள்ளும் போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.
*அப்துல்கலாம்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கால அவகாசம் கொடுத்தவர் கதைப்பதைப் பாருங்கள்

இலங்கை வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்வது சர்வதேசத்தின் கடமை எனக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தன்னைச் சந்தித்த யப்பானின் முன்னாள் விசேட தூதுவர் யசூஷி அகாஷியிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

இலங்கைக்கான யப்பானின் விசேட தூதுவராக இருந்த யசூஷி அகாஷி விடுதலைப் புலிகளுடனான சந்திப்பை பல தடவைகள் மேற்கொண்டவர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தன்னைச் சந்திக்க மறுத்தார் என்பதால் மனக்கிலேசமடைந்த அகாஷி தனது தூதுப் பணியை நியாயபூர்வமாகச் செய்யவில்லை என்ற குறைபாடு தமிழ் மக்கள் மத்தியில் உண்டு.

அதாவது இலங்கை ஆட்சியாளர்களின் சார்பாக அகாஷி நடந்து கொண்டார் என்ற கருத்து நிலை தமிழ் மக்களிடம் இருந்தது என்பதும் இங்கு நினைவுபடுத்தற்குரியது.

எதுவாயினும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்த் வெளிநாட்டவர்கள் இருவர் உளர்.

அவர்களில் ஒருவர் நோர்வேயின் விசேட தூதுவராக இருந்த எரிக் சொல்ஹெய்ம் மற்றவர் யப்பானின் விசேட தூதுவர் அகாஷி.

எனினும் யுத்தம் முடிந்த பின்னர் மேற்குறிப்பிட்ட இருவரும் தமிழ் மக்களின் அவலத்தை, தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்காமல் இலங்கை அரசாங்கம் காலம் கடத்துவது பற்றிக் கருத்துரைக்காமல், மௌனம் காத்தமை தூதுவர்களுக்குரிய தர்மத்தில் இருந்து அவர்கள் இருவரும் விலகி விட்டனர் என்ற கருத்தும் இருக்கவே செய்கிறது.

இவை ஒருபுறமிக்க, யப்பானின் விசேட தூதுவராக இருந்த அகாஷி கடந்த 20ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரைச் சந்தித்து உரையாடியிருந்தார்.

இதன்போது இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்வது சர்வதேசத்தின் கடமை என இரா.சம்பந்தர் அவர்கள் தூதுவர் அகாஷியிடம் எடுத்துரைத்தார்.

இரா.சம்பந்தர் அவர்கள் கூறிய கருத்து நியாயமானது.

இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்தினுடையது.

இது விடயத்தில் சர்வதேச சமூகம் தலையிடாமல் விட்டால், இலங்கை அரசாங்கத்தைத் தட்டிக் கேட்பதற்கு யாரும் இல்லை.

ஆகையால் இரா.சம்பந்தர் அவர்கள் தன்னைச் சந்தித்த அகாஷியிடம் கூறிய விடயம் ஏற்புடையதே.

ஆனால் இங்கு நமது கேள்வி; ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசுக்கு விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்துக்குக் கால அவகாசம் வழங்க வேண்டும் எனக் கூறியவர்கள் இரா. சம்பந்தர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

ஆக, ஐ.நா மனித உரிமைகள் விதித்த நிபந்தனைகளை இன்னமும் நிறைவேற்றாதது ஏன்? என்று சர்வதேச சமூகம் கேள்வி கேட்க இருந்தபோது;

இல்லை, இலங்கை அரசாங்கத்துக்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டும் எனக் கூறிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், இப்போது அகாஷியிடம் கதை விடுகிறார் என்றால் எல்லாம் தேர்தலை மையப்படுத்திய நடிப்பு என்பது தெரிகிறதல்லவா?

### உட்கட்சி மோதல் உக்கிரம்

# ஐக்கிய தேசியக் கட்சி செய்த கர்மவினையின் பலாபலன்

## பியல் நிஷாந்த சுட்டிக்காட்டு

(கொழும்பு)

முழு நாட்டையும் நெருக்கடிக்குள்ளாக்கிய ஐக்கிய தேசியக் கட்சி தற்போது நெருக்கடிக்குள்ளாகி இருப்பதாகவும், அது அந்த கட்சி செய்த கர்மவினை பலாபலன் எனவும் கூட்டு எதிர்க் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டை கட்டியெழுப்புவதாக பொய் கூறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின தலைமையிலான அரசாங்கம், நாட்டை அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியான நெருக்கடிக்குள்ளாக்கியது. ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்வதே ஐக்கிய தேசியக் கட்சி தற்போது எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை.

அமைச்சர் சஜித் பிரேமதாஸ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, அமைச்சர் நவீன் திஸாநாயக்க, அமைச்சர் ராஜித சேனாரட்ன என அனைவரும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட போட்டி போடுகின்றனர்.

இவர்களில் எவர் வேட்பாளராக வந்தாலும் அவரை தோற்கடிக்கக் கூடிய திறமையான வேட்பாளரை நாங்கள் நிறுத்தியுள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சி தற்போது துண்டு, துண்டாக சிதறி போயுள்ளது. அந்த கட்சி பல வருடங்களுக்கு கட்டியெழுப்ப முடியாது. ஜனாதிபதித் தேர்தலுக்கு இனனும் 89 நாட்களே உள்ளன. வேட்பு மனு தாக்கல் செய்ய இன்னும் 59 நாட்கள் இருக்கின்றன.

இவற்றுக்கு இடையில், மூன்று அமைச்சுக்கள் எந்த வெட்கமும் இன்றி அப்பாவி மக்களின் பணத்தை விரயமாக்கி வருகின்றன. சஜித் பிரேமதாஸ, பாட்டலி சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரட்ன ஆகியோரின் அமைச்சுக்கள் மிக மோசமாக மக்களின் பணத்தை விரயமாக்கி வருகின்றன.

ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் எதிர்பார்ப்பில் தமது பிம்பத்தை உயர்த்தி காட்ட இந்த பணம் பல்வேறு பிரசார நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டு வருகிறது.

இந்த அமைச்சுக்களின் அனைத்து அதிகாரிகளுக்கும் நான் ஒன்றைக் கூற விரு ம்புகிறேன். இன்னும் 89 நாட்களில் சிறைக்குச் செல்ல தயாராக இருங்கள் எனவும் பியல் நிஷாந்த எச்சரித்தார். (இ-7)

## கூட்டமைப்புடனான பேச்சுக்களில் சாதகமான சமிக்ஞைகள்-ஹேரத்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் உத்தியோகபூர்வமற்ற பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கின்றோம். கூட்டமைப்பின் உறுப்பினர்களிடம் இருந்து சாதகமான சமிக்ஞைகளே கிடைக்கப்பெற்றுள்ளன என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. தெரிவித்தார்.

இதுவரை கட்சிக்குள் கலந்துரையாடி உத்தியோக பூர்வமான தீர்மானம் எதனையும் மேற்கொள்ளவில்லை. இந்நிலையில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் போன்ற சிறுபான்மைக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## விநாயகர் சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்/வண் வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான விநாயகர் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 02.09.2019 திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறும். ஸ்நபன அபிஷேகம், மும்மூர்த்தி பூஜை.வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதி, வெளி வீதி வலம் வருவார்.

(ம)



### ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நீ இறைவனைச் சோதிக்கிறாயா? அல்லது இறைவன் உன்னைச் சோதிக்கிறாரா?

அஞ்ஞானத்தின் ஒரு பகுதிதான் சோதித்தல். நீ எதைப் பறறி உறுதியாக அறியமாடடாயோ, அதை மாததிரம தான் நீ சோதிக்கிறாய். இறைவன் உன்னைச் சோதிக்கிறாா எனறால இறைவன உனனைப பறறி நனறாக அறியவில்லை என்று அர்த்தமாகிறது. மனிதர்கள் எப்படி இறைவன் தாங்களைச் சோதிப்பதாக எண்ணக்கூடும்.

இற்றைவன் உன்னைச் சோதிப்பதேயில்லை. ஏனென்றால் அவருக்கு உன்னைப் பற்றி முழுக்க முழுக்கத் தெரியும். உன்னுடைய கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எல்லாமே அறிவார். அவர் உன்னுடைய பலத்தையும் பலவீனத்தையும் அறிவார். உனக்குப் பலத்தைக் கொடுப்பவரே அவர்தான். உன்னை அவர் சோதிப்பதில்லை.

உன்னால் மட்டுமே உன்னைச் சோதித்துக்கொள்ள முடியும். உன்னிடம் நம்பிக்கையில்லாத போது மாத்திரமே நீ சோதிக்கிறாய். நீ நம்பிக்கையுடனிருக்கும் போது நீ ஏன் சோதிப்பாய்? நீ உன்னையே சோதித்தாயானால் உன்னை நீ அறிவதில்லை.

நீ இறைவனைச் சோதிக்கிறாயா?

இறைவன் ஒரு போதும் உன்னுடைய சோதனையில் தேர்ச்சி பெறமாட்டார். ஏனென்றால் அவர்கள் உன் சோதனைக்கு ஒருபோதும் உட்படமாட்டார். அப்படி அவர் உட்பட்டால் அவர் இறைவனே அல்ல! (சிரிப்பு)

**உனக்கு இது புரிந்ததோ இல்லையோ பரவாயில்லை சரி.**

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

புண்ணிய தீர்த்தங்களில் உப்பையிடுவது தன் பாவம் அது போல் கரைய வேண்டும் என்ற குறிப்புக்காக.

"வங்கக்கடல் கடைந்த மாதவனை" என்று ஆண்டாள் பாடுகிறார்.

வங்கம் என்பது கப்பல். கப்பல்கள் ஓடுகின்ற கடல் என்பது அதற்குப் பெயர்.

திருமால் கடைந்தது பாறகடல். இங்கே எம்பெருமானது திருவடி வங்கமாக, கப்பலாக நின்று அடியவர்களைப் பிறவிக் கடலைக் கடக்கச் செய்கின்றது. ஆதலால் வங்கக் கடல் என்றார் ஆண்டாள்.




### வீட்டில் உள்ள எதிர்மறைச் சக்தியைப் போக்க வேண்டுமா?

வீட்டில் தீய சக்திகள் இருந்தால் கீழ் குறிப்பிடப்பட்டு ள்ள பரிகாரங்களை செய்தாலே போதும்.

**பரிகாரம்**

வீட்டில் உள்ள தீய சக்தியை விலக்க தினமும் மாலை வேளைகளில் சிறிது மஞ்சள் எடுத்து, வீட்டு வாசல் படியின் இரண்டு புறத்திலும் இரண்டு சதுரங்களை வரைந்து கொள்ள வேண்டும்.

அந்த இரண்டு சதுரங்களிலும் ஒரு வேப்பிலையை வைக்க வேண்டும்.

வேப்பிலையின் நுனி கிழக்கு அல்லது வடக்கு திசையை பார்த்தவாறு இருப்பது! நல்லது.

பிறகு அதன் மீது மண்ணால் செய்யப்பட்ட அகல் விளக்குகளை வைத்து, எண்ணெய் ஊற்றி, மஞ்சள் நிற திரி போட்டு தீபம் ஏற்ற வேண்டும்.

மேற் சொல்லப்பட்ட முறையில் தினமும் மாலை வேளைகளில் தீபம் ஏற்றி வந்தால், அந்த வீட்டில் இருக்கின்ற எதிர்மறையான விடயங்கள் அனைத்தும் விரைவிலேயே நேர்மறையான ஆற்றல்களாக மாறுவதை காணலாம்.

**பலன்கள்**

வீட்டில் உள்ள தீய சக்தியை விலக்குவதால் கணவன் மனைவி ஒற்றுமை அதிகரிக்கும்.

பிரிந்து வாழும் தம்பதியர்கள் இந்த பரிகாரம் செய்வதால கூடிய விரைவில் ஒன்றிணைந்து வாழ்வார்கள்.

குடும்பத்தில் நீடித்து வந்த சண்டை சச்சரவுகள், மனஸ்தாபங்கள் போன்றவை நீங்கும்.

பிறருடன விரோதம ஏறபடுவது, எதிரிகளால நமககு பாதிப்புகள் ஏற்படுவது போன்ற பிரச்சினைகள் நீங்கும்.

# ரில்கோ கொங்கியூரஸின் வெற்றிப் பயணம் தொடர்கிறது



வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் ரில்கோ கொங்கியூரஸ் அணியை எதிர்த்து நொதேன் எலைட் அணி மோதியது.

இவ் ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் 01:00 என்ற கோல் கணக்கில் ரில்கோ கொங்கியூரஸ் அணி முன்னிலை வகித்தது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் ரில்கோ கொங்கியூரஸ் அணி மேலும் இரு கோல்களையும் நொதேன் எலைட் அணி ஒரு கோலையும் பெற்றுக்கொள்ள ஆட்ட நேர முடிவில் 03:01 என்ற கோல் கணக்கில் ரில்கோ கொங்கியூரஸ் அணி வெற்றி பெற்றது.

ரில்கோ கொங்கியூரஸ் அணி சார்பாக இவான்ஸ் 02, தனேஸ் ஒரு கோலையும் நொதேன் எலைட் அணி சார்பாக கோபன் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர். (க)

# புத்தூர் கலைமதியின் கரப்பந்தாட்ட முடிவுகள்

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் தமது 45 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையிலான பி பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் மல்லாகம் நியூவோரியஸ் அணி, அச்சுவேலி விக்னேஸ்வரா அணிகள் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

கடந்த திங்கட்கிழமை மின்னொளியில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து மல்லாகம் நியூவோரியஸ் அணி மோதியது. முதலாவது செற்றில் மல்லாகம் நியூவோரியஸ் அணி 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆனால் இரண்டாவது செற்றில் புத்தூர் சரஸ்வதி அணி 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது. ஆனால் மூன்றாவது செற்றில் மீண்டும் பலத்த போராட்டத்தில் மல்லாகம் நியூவோரியஸ் அணி 25:23 என்ற புள்ளிகள் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் சிறுப்பிட்டி கலைஒளி அணியை எதிர்த்து அச்சுவேலி விக்னேஸ்வரா அணி மோதியது. ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய அச்சுவேலி விக்னேஸ்வரா அணி 25:23, 25:16 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (க-60)



அளவெட்டி வடக்கு பாரதிதாசன் விளையாட்டுக்கழகத்திற்கு வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் செ.விஜயராஜினால் ஒரு தொகை விளையாட்டு உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன் கலந்து கொண்டு விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தார். (க-110)

# அம்பாறை அவேஞ்சர்ஸ் வெற்றி



வட கிழக்கு பிறீமியர் லீக் தொடரில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் அம்பாறை அவேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து மாதோட்டம் எப்.சி.அணி மோதியது.

இவ் ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்று சம நிலை வகித்தன.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் அம்பாறை அவேஞ்சர்ஸ் அணி மேலும் மூன்று கோல்களையும் மற்றும் மாதோட்டம் எப்.சி.அணி ஒரு கோலையும் பெற்றுக் கொள்ள ஆட்ட நேர முடிவில் 04:02 என்ற கோல் கணக்கில் அம்பாறை அவேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்றது.

அம்பாறை அவேஞ்சர்ஸ் அணி சார்பாக ஹனன் 2, மயித், நபீஸ் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பரபரப்பான ஆட்டத்தில் வென்றது வவுனியா வொறியஸ் அணி



வட கிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வவுனியா வொறியஸ் அணியை எதிர்த்து மட்டு நகர் சுப்பர் கிங்ஸ் அணி மோதியது.

இவ் ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்று சம நிலை வகித்தன.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் வவுனியா வொறியஸ் அணி மேலும் ஒரு கோலை பெற்றுக் கொள்ள ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் வவுனியா வொறியஸ் அணி வெற்றி பெற்றது. (க)

# தடுமாற்றத்தைத் தவிர்த்தேன் விக்கெட்டுக்களை வீழ்த்தினேன்

## இலங்கையின் இளம் வீரர் தெரிவிப்பு

இலங்கை கிரிக்கெட் அணியின் இளம் சுழல் பந்து வீச்சாளர் லசித் எம்புல்தெனிய, காயத்துக்கு பின்னர் டெஸ்ட் அணிக்கு திரும்பியதுடன் நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் போட்டியில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தியிருந்தார்.

முதல் போட்டியின் முதல் இன்னிங்ஸில் பந்துவீச்சில் சற்றுத் தடுமாற்றத்தை எதிர்கொண்ட இவர், இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

நேர்காணல் ஒன்றில் பேசிய லசித் எம்புல்தெனிய கூறுகையில், ரங்கன ஹேரத் பந்துவீச்சில் எனக்கு அதிகமான உதவிகளை வழங்கி வருகின்றார்.

எனது பந்து வீச்சில் ஏதாவது சந்தேகம் இருந்தால் நான் உடனடியாக அவருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு சந்தேகத்தை தீர்த்துக்கொள்வேன். எந்த நேரத்திலும் அவரிடம் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

உபாதைக்கு பின்னர் நியூசிலாந்து அணிக்கு எதிராக முதல் போட்டியில் விளையாடியதால் முதல் இன்னிங்ஸில் சற்றுத் தடுமாற்றம் அடைந்தேன்.

எனினும், இரண்டாவது இன்னிங்ஸில் அதனை திருத்திக்கொண்டு பந்து வீசினேன். அதனால் விக்கெட்டுகளை கைப்பற்றக்கூடியதாக இருந்தது.

அனுபவ வீரர்களான மத்யூஸ் மற்றும் திமுத் ஆகியோர் எனக்கு அழுத்தத்தை வழங்கவில்லை. அவர்கள் நான் சுதந்திரமாக பந்து வீசுவதற்கான இடத்தை வழங்கினர்.

அவர்கள் எப்போதும் தடுமாற்றமடையாமல் ஒரே மாதிரியான பந்துகளை வீசுமாறு கூறினர். அவர்கள் எனக்கு எந்த வித அழுத்தத்தையும் கொடுக்கவில்லை என இலங்கை கிரிக்கெட் அணியின் இளம் சுழல் பந்துவீச்சாளர் லசித் எம்புல்தெனிய தெரிவித்துள்ளார். (க)

# அரையிறுதிக்கு தகுதி பெற்றது சைனிங்ஸ் அணி



வல்வை உதயசூரியன் விளையாட்டுக்கழகம் 57 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தும் கடற்கரை உதைபந்தாட்டச்சுற்றுத்தொடர் உதயசூரியன் கடற்கரை மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. முதலாவது போட்டியில் சைனிங்ஸ் அணி உதயசூரியன் அணியை 2:1 என வெற்றிகொண்டு இரண்டாவது போட்டியில் ரேவடி அணியுடன் மோதியது.

ஆட்டநேர முடிவில் 4 : 2 என்ற கோல்கணக்கில் சைனிங்ஸ் அணி வெற்றி பெற்று பிரிவில் முதலிடத்தினைப் பிடித்து அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

சைனிங்ஸ் சார்பாக தீபன், செந்தூரன், பிரசாந், துளசிராம் ஆகியோர் ஒவ்வொரு கோலைப் போட்டனர். (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## மறவன்புலவு தனங்...

நாடொன்றிற்கு விற்பனை செய்வதற்கான முயற்சி திரைமறைவில் மேற்கொள்ளப்படுகிறதா? என்ற சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மறவன்புலவுப் பிரதேசத்தில் 4 காற்றாலைகள் அமைப்பதற்காக ஏறக்குறைய 12 ஏக்கர் காணி பணம் கொடுத்து கொள்வனவு செய்யப்பட்டதாக அறிய முடிகிறது.

அதேபோன்று தனங்கிளப்பிலும் 4 காற்றாலைகள் அமைப்பதற்காக 6 ஏக்கர் காணி கொள்வனவு டெய்யப்பட்டுள்ளது. இதில் 3 ஏக்கர் காணி தனியாருக்குச் சொந்தமானது என அறியமுடிகிறது.

மறவன்புலவில் கொள்வனவு செய்யப்பட்ட ஏறக்குறைய 12 ஏக்கர் க்காணியில் 3 ஏக்கர் காணி அரச காணி எனவும் அதை தனியார் ஒருவர் ஆட்சி உறுதி முடித்து குறித்த தனியார் நிறுவனத்துக்கு விற்பனை செய்ததாகத் தகவல் கிடைத்துள்ளது.

காற்றாலை அமைக்கப்படுகின்ற பிரதேசமான மறவன்புலவில் ஏறக்குறைய 350 குடும்பங்கள் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் அன்றாட வாழ்க்கையை பல விதப் போராட்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

இங்கு வாழும் மக்களுக்கு இயற்கை தனைக் கொடையாக வழங்கிய காந்தப்புலச் சக்தி தொடர்பில் அறியாமலும் அது பற்றி சம்பந்தப்பட்டவர்கள் உரிய மக்களுக்கு விளக்கிக் கூறாமல் இம் மக்களின் காணி குறைந்த விலை கொடுத்து தனியார் நிறுவனம் ஒன்று அறுதியாக வேண்டியுள்ளது. உலக வல்லரசுகள் பலவற்றின் விண் வெளி ஆய்வுமையங்கள் காந்தப்புலத்தை அடிப்படையாகக்கொண்டே அமைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் உலக வல்லரசான அமெரிக்கா தனது விண்வெளித் தளத்தை இயற்கையான காந்தப்புலக் கோடுகள் ஊடறுத்துச் செல்லும் பகுதியிலே அமைந்துள்ளதாக நம்பப்படுகிறது.

ஏனைய வல்லரசுக்கள் செயற்கையான காந்தப்புல அலைகளை உருவாக்கி அதனூடாகத் தனது விண்வெளிச் செயற்பாடுகள் மற்றும் அணு ஆயுத நடவடிக்கைகளை முன்னகர்த்தி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் இயற்கை கொடையாக வழங்கிய காந்தப்புலக் கோடுகள் அதி சக்தி வாய்ந்து ஊடறுத்துச் செல்லும் பகுதியாக தற்போது காற்றாலை அமைக்கப்படவுள்ளது. தனங்கிளப்பு மற்றும் மறுவன் புலவு ஆகிய பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

இதனால்தான் காற்றாலை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கொழும்பைத் தலைமையாகக்கொண்டு இயங்கும் குறித்த தனியார் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ள வேலை நிறுத்தம் இரு தமிழ் பெயர்களைச் சுட்டி இலங்கை மின்சார சபையுடன் இணைந்து தனது வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

யாழ்ப்பாணத்தில் கட்டாந்தரையாகப் பல பகுதிகள் இருக்கும் நிலையில் குறித்த இடங்களை அடையாளப்படுத்தியதன் நோக்கம் என்ன? அது மட்டுமல்லாமல் குறித்த பகுதியில் காற்றாலை அமைப்பதற்காக அடையாளப்படுத்தப்பட்ட பகுதியை நீண்டகாலக் குத்தகைக்கோ அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளாமல் அறுதியாகக் கொள்வனவு செய்ததன் பின்னணி என்ன? என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும் எனவும் எமது வளம் எதிர்காலத்தில் தனியார் நிறுவனங்களினால் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படாமல் இருக்க அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் விழிப்பாகச் செயற்படவேண்டும் எனவும் தமிழ் புத்தி ஜீவிகள் கருத்துரைத்துள்ளனர். (ம-10)

## இந்திய மீனவர்கள்...

கோட்டை - ஜெகதாப்பட்டினம் பகுதியைச் சேர்ந்தவர்களென, கடற்றொழில் நீரியல் வளத்துறையின் மாவட்ட உதவி பணிப்பாளர் ஜெ.சுதாகரன் தெரிவித்தார்.

நான்கு மீனவர்களும், நாட்டு படகொன்றில் வந்து, தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்துக் கொண்டிருந்த போதே, கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களை, ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ம)

## ஜனாதிபதித் தேர்...

தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் நேற்று நடந்த கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தான் ஏற்கனவே அமெரிக்க குடியுரிமையை கைவிட்டுள்ளதாகவும் தற்போது இலங்கை கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிலர் ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடுவதைத் தடுக்கும் முயற்சியில் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## பாராளுமன்ற உறுப்...

1956 தொடக்கம் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பலர் பணம், படிப்பு, பண்பு ஆகியவற்றைத் தெரியாதவர்களாக இருந்ததாகவும் இதன் காரணத்தினாலேயே அரசியலானது மாற்றமுற்றது எனவும் சுட்டிக்காட்டினார். எனவே தற்போதுள்ளவர்கள் பணபலம் இல்லாவிட்டாலும் ஓரளவு படிப்பும் பண்பும் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என கூறினார்.

மேலும் தேர்தலுக்காக பாரிய தொகையை செலவு செய்யும் பிரதிநிதிகள், அதை திருப்பிப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்போதே ஊழல், சமூகத்தில் மலிந்து காணப்படுகின்றமைக்கு காரணம் என்றும் கூறினார்.

இதன் பின்னர் சாதி, மதத்தை பயன்படுத்தி மேலும் பணம் சம்பாதிக்கவும் அவர்கள் முயற்சி செய்வதாக குற்றம் சாட்டிய அவர், இதனால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றி அவர்கள் கண்டுகொள்வதில்லை என்றும் கூறினார்.

இதனால் எமது உறுப்பினர்கள் சுய சிந்தை அற்று நடக்கத் தலைப்படுகின்றனர். இவையாவும் சேர்ந்தே அரசியல் ஒரு சாக்கடை என்ற பெயரைப் பெற வைத்துள்ளன என சுட்டிக்காட்டினார்.

ஆனால் தான் சாக்கடையின் விளிம்பில் நின்று அதில் தள்ளிச் செல்லப்படும் அசுத்தங்களை அவதானித்துக் கொண்டு இருக்கின்றேன் என்றும் இதுவரையில் அந்த அசுத்தத்தில் காலடி எடுத்து வைக்கவில்லை என்றும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ம)

## நல்லூர் மந்திரிமனை...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் நல்லூர் பகுதியில் உள்ள தமிழர் வரலாற்று மரபுரிமைச் சின்னமான நல்லூர் மந்திரி மனையை அபகரிக்கும் நோக்கில் பெரும்பான்மை இனத்தவர் ஒருவரால் யாழ் கந்தர் மடப்பகுதியில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தை நாடியுள்ளதாக அறியக்கிடைத்தது.

சட்டநாதர் சிவன் கோயிலின் பரம்பரை ஆதீன கர்த்தாக்களின் நிலப்பகுதியாக குறித்த மந்திரிமனை நிலப்பகுதி காணப்படுகின்ற நிலையில் பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் அரிச்சுவடி ஒன்றை காட்டி அபகரிக்க முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒல்லாந்தர் காலத்துக்கு முன்பே யாழ்ப்பாண மன்னர் காலத்துக் கட்டடத் தொகுதியாக இருந்த வரலாற்றைக் கூறும் இவ் மந்திரி மனை பிற்பட்ட காலங்களில் அர்ச்சகரின் ஓர் இல்லமாக இருந்துள்ளது.

எனவே தான் வரலாற்றுக்களை சரிவர அறிந்து கொள்ளாமல் வரலாறுகளை திரிபுபடுத்தியும் கிடைக்கும் ஆதாரங்களை தமிழர் வரலாற்றுச் சின்னங்களுடன் பிணைப்பை ஏற்படுத்த முனைவதையும் ஏற்றுக்கொள்ள முடியாதென சிறீதரன் எம்.பி மேலும் தெரிவித்தார். (ம-10)

## ஶ்ரீலங்கா சுதந்திர...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தமிழ் பிரிவான ஶ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியத்துடன் கொள்கையளவில் இணைந்து செயற்படப் போவதாக அதிரடியாக அறிவித்துள்ளார் ஈழத்தமிழர் சுயாட்சி கழகத்தின் பொதுச் செயலாளர் அனந்தி சசிதரன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கிறீன்கிராஸ் விடுதியில் நேற்றுக் காலை இந்த சந்திப்பு நடைபெற்றது. அனந்தி சசிதரன், சிறிலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியம் மற்றும் மலையக மக்கள் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட சில மலையக பிரதிநிதிகள் நேற்று சந்தித்து பேசினர்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மலையக பிரதிநிதிகள், மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அனந்தியுடன் பேசியதாகவும், அனந்தியும் தாமும் மலையக மக்களின் பிரச்சினை தொடர்பில் இணைந்து செயற்படவுள்ளதாகவும் தெரிவித்தனர். மலையக மக்களின் பிரச்சினைகளை அனந்தி ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு கொண்டு செல்வார் என உறுதியளித்ததாகவும் தெரிவித்தனர்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அனந்தி, ஶ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியம் மற்றும் மலையக மக்கள் முன்னேற்றக்கழகம் என்பவற்றுடன் கொள்கையளவில் இணைந்து செயற்படவுள்ளதாக தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியத்தின் தலைவராக அங்கஜன் இராமநாதன் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம)

## தமிழ் மக்களின்...

ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும், கூட்டமைப்புடனான இரகசிய சந்திப்பு நடந்தது.

இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கூட்டமைப்பின் சார்பில் கலந்து கொண்டனர். சஜித் பிரேமதாசவுடன் மங்கள சமரவீரவும் சந்திப்பில் கலந்து கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் தன்னை முழுமையாக ஆதரிக்கும்படி சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்திருந்தார். தான் அதிகாரத்தை கைப்பற்றினால், அடுத்த ஆறு மாதத்திற்குள் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்து வைப்பேன் என இதன்போது வாக்குறுதியளித்தார்.

எனினும், எந்தவகையான தீர்வு, அதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்த திட்டங்கள் எதுவும் தற்போது தன்னிடமில்லை யென்றும், அதிகாரத்திற்கு வந்ததும், ஆறு மாதத்தில் பிரச்சினையை தீர்ப்பது என்ற இலக்குடன் செயற்பட்டு, இறுதி இலக்கொன்றை அடையலாமென சஜித் தெரிவித்தார். (ம)

## பரப்புரைகளின்...

எழுக தமிழ் மக்கள் எழுச்சிப் பேரணி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப் பேரணிக்கான பரப்புரை ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை வைபவமாக ஆரம்பமாகவுள்ளது.

காலை 6.30 மணியளவில் நல்லூரில் வழிபாட்டுடன் ஆரம்பித்து நல்லூர் முன்றலில் (மாநகரசபையின் வாசலில்) செய்வதுடன் தொடர்ந்து காலை 8.30 மணியளவில் யாழ் மத்திய பேருந்து நிலையத்திலும் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம)

## தேர்தலில் வெல்ல...

என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் ஒன்றிணைந்து போட்டியிட்டாலும் இனியொரு போதும் மக்களாணையினை பெற முடியாது எனவும் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யாராக இருந்தாலும் இம்முறை அரசியல் சூழ்ச்சியினால் ஒருபோதும் ஆட்சியினை கைப்பற்ற முடியாது.

கட்சியின் தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்தே கட்சியின் உறுப்பினர்கள் செயற்பட வேண்டும்.

அதே போன்று தலைமைத்துவமும் கட்சியின் அனைத்து உறுப்பினர்களின் ஒவ்வொரு கருத்துக்களுக்கும் மதிப்பளித்து செயற்பட வேண்டும்.

அவ்வாறு ஒருமித்த தன்மை காணப்பட்டால் மாத்திரமே முறையான அரசியல் செயலொழுங்கினை முன்னெடுத்து செல்ல முடியுமென அவர் இதன்போது தெரிவித்தார். (ம)


அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 708 வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.08.22
விசேட இலக்கம் 2958
வெற்றி இலக்கங்கள் 40 45 52 65 T

ஜய
சீட்டிழுப்பு வாரம் 1597 சீட்டிழுப்பு திகதி 22.08.2019
வெற்றி இலக்கங்கள் 01 03 19 35 X
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி
திகதி 22/08/2019 வெற்றி வாரம் 2594
வெற்றி இலக்கங்கள் 03 17 34 48 மேடம்
ரூ.500 பரிசுக்காக 5532
ரூ.100 பரிசுக்காக 334
டபல் சான்ஸ்
விசேட இல.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1027
சீட்டிழுப்பு திகதி 22/08/2019 பச்சை
A 33 57 65 76
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

கொவிசெத
திகதி 2019.08.22
சீட்டிழுப்பு இலக்கம் 2217
U 07 20 31 42
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1557 திகதி 2019/08/22
Y 32 44 54 67
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/08/22
சீட்டிழுப்பு இலக்கம் 3988
C 6 0 5 6 1 9
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/08/22
சீட்டிழுப்பு இலக்கம் 588
கன்னி 19 21 29 39
தேசிய லொத்தர் சபை

சங்கானை பிரதேச செயலகத்துக்குட்பட்ட

# இந்திய வீட்டுத் திட்டத்தில் கிறிஸ்தவ மத போதனைகள்

## அப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொன்னாலைப் பகுதியில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வீட்டை கிறிஸ்தவ மதப் போதனைக்கூடம் நடத்துவதற்கு பயனாளி வாடகைக்கு கொடுத்துவிட்டதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டினர்.

வீடு இல்லாத வறிய மக்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட குறித்த வீட்டை கிறிஸ்தவ அமைப்பின் ஒரு பிரிவினர் மதமாற்றப் பிரசாரம் செய்வதற்காக வீட்டுப் பயனாளியிடம் வாடகை அடிப்படையில் பெற்றுள்ளதாக அறிய முடிகிறது.

இந்து மக்கள் அதிகமாக வாழும் பொன்னாலைப் பகுதியில் மக்களை மதமாற்றம் செய்யும் நோக்கில் தெருத்தெருவாக மதப் போதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் குறித்த மதமாற்றக் குழுவினர் பொன்னாலைப் பகுதியில் மதமாற்றும் பிரசாரத்தை மேற்கொள்ள வந்த நிலையில் அப்பகுதி மக்களால் விரட்டப்பட்டனர்.

சங்கானைப் பிரதேச செயலகத்தால் இந்திய வீட்டுத் திட்டத்தைப் பெற்ற பயனாளி தற்போது சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பகுதியில் நிரந்தரமாகக் வீடு கட்டி வாழ்வதாகத் தாம் அறிந்ததாக அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

வீடு இல்லாத மக்கள் பலர் இருக்கும் நிலையில் வழங்கப்பட்ட வீட்டை வாடகைக்குக் கொடுத்துவிட்டு பிறிதொரு வீட்டில் வாழ்வது எந்த வகையில் நியாயமாகும் எனவும் அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தலையிட வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர். (ம-10)

# உளவியல் ரீதியில் அழுத்தம் கொடுக்கவே சிறீதரன் எம்.பி வீட்டில் தேடுதல்

## ரெலோ கண்டனம்

(யாழ்ப்பாணம்)

உளவியல் ரீதியில் அழுத்தம் கொடுக்கவே சிறீதரன் எம்.பி வீட்டில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக ரெலோ அமைப்பின் செயலாளர் சிறிகாந்தா குற்றம் சுமத்தியுள்ளார்.

ரெலோவின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்படி விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது வருமாறு,

பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனிற்கு உளவியல் ரீதியில் அழுத்தம் கொடுக்கும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கை, இலங்கையில் தமிழர்களின் உண்மையான நிலைமை என்ன என்பதற்கு தெளிவான எடுத்துக்காட்டு ஆகும்.

சிறப்புரிமை கொண்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலைமையென்றால்; சாதாரண தமிழ் மக்களின் கதியென்னவென்பதை எவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

இலங்கையில் எந்த சிங்கள தலைவர் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ இருந்தாலும், தமிழர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டே வந்திருக்கிறது.

இனியும் இதுவே நிலைமையென்று துணிந்து கூற முடியும்.

எம் இனத்தின் தலைவிதி இதுதான் என எம்மை நாமே நொந்து கொண்டிருக்காமல், எமது உரிமைகளை பாதுகாத்து, சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கான வழிவகை என்னவென்பதை சிந்திக்க அனைவரும் முன்வர வேண்டும். அதற்கு முதற்படியாக ஒத்துழைப்பு அரசியலுக்கு முடிவு கட்ட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

தமிழ் மக்களை தூண்டிவிட்டு

# இனவாதத்தை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சிக்கிறது

## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு

லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டதற்கு அதிருப்தி வெளியிட்டு, தமிழ் மக்களை தூண்டிவிட்டு இனவாதத்தை ஏற்படுத்தவே அமெரிக்கா முயற்சிக்கிறது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகள் விடுதலைப் புலிகளுக்கும், புலம்பெயர் தமிழர்களுக்கும் ஆதரவளிப்பது போன்று செயற்படுபவையாகும். சவேந்திர சில்வாவின் நியமனம் தொடர்பில் வெளியிடும் கருத்துக்கள் மூலம் விடுதலைப் புலிகளுக்கும் புலம்பெயர் தமிழர்களுக்கும் அமெரிக்கா ஆதரவளிக்க முயல்வது தெளிவாகின்றது.

சவேந்திர சில்வா இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டமைக்கு அதிருப்தி தெரிவிப்பதன் மூலம் தமிழ் மக்களை தூண்டிவிட்டு இனவாதத்தை ஏற்படுத்தவே அமெரிக்கா முயற்சிக்கிறது.

சவேந்திர சில்வா மீது யுத்தக் குற்றச்சாட்டுக்கள் காணப்பட்டன. எனினும் விசாரணைகள் மூலம் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் உண்மையற்றவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரை இராணுவத் தளபதியாக நியமித்ததில் எவ்வித தவறும் கிடையாது.

இவ்வாறு இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையிடுவதன் மூலம் எமது நாட்டின் சுயாதீனத் தன்மை கேள்விக் குறியாகியுள்ளது. இலங்கையின் சுயாதீனத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படும் செயற்பாடுகளை சுதந்திர கட்சி ஒரு போதும் அனுமதிக்காது என்பதோடு. ஜனாதிபதி எடுக்கும் சகல முடிவுகளுக்கும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்றார். (ம-3)


கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்


வீட்டு கையியக்க மெசின்


வர்த்தக கையியக்க மெசின்


வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்

(8716)

தொடர்புகளுக்கு : 076 796 6000, 077 968 1118 (இலங்கை)
www.StringhopperMachine.com
Email : mo@college.ca
இவ் 4164336006 இலக்கத்துக்கு Missed Call செய்யவும். (ரொரன்ரோ, கனடா)

CCTV பொருத்துதல்



கண்காணிப்புத் துறையில் அனுபவம் வாய்ந்த எமது நிறுவனத்தின் ஊடாக உங்களின் அவசர தேவைக்கேற்ப கண்காணிப்புக் கமராக்களை விரைவாகவும் மலிவாகவும்
வட மாகாணம் முழுவதிலும் ஒரே நாளில் பொருத்தித் தரப்படும்
எங்களைத் தேடவும் www.facebook.com/VconItPark/
V-CON IT PARK
இல. 603, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
[நாச்சிமார் கோவில் அருகாமை]
077 3767 899 021 221 1818

British College of Higher Studies
NEW BATCHES START!!
IELTS
Academic/General
Life skills A1, B1
Spoken Sinhala
Speaking / Reading / Writing
Saturday and Sunday 4 to 5.30 pm
4 Months course
15, Stanley Road, Sirambiyady lane, Jaffna.
021 222 4550
(C-7225)

போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்
SLAS சனி, ஞாயிறு 9.00 - 3.30
கணக்காளர் சேவை சனி, ஞாயிறு 9.00 - 4.00
முகாமைத்துவ உதவியாளர் சனி, ஞாயிறு 9.00 - 2.30
0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100 M தூரத்தில்) (C-7354)

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

V2 TRAVELS
PASSPORT
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)
0768227499
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-7319)

யாழ் மதர் கெயார்
Dental Unit
Reg.No.#PV85754



நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட உயர்தர சேவைகள்
• பல் வெண்மையாக்கல்
• பல்.வாய் வைத்தியசேவை
• வேரடைப்பு
• சிறுவர் பற் சிகிச்சை
• மிதப்புப்பல் சீராக்கல்
• மற்றும் பல நவீன சேவைகள்
514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Mob : 077 375 4490, 077 220 2769
(C-7209)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
(C-7320)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.